. No. M. 2569 நாயகமலர்

1229

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 6

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ரபீஉல்அவ்வல்மீ 1936ஹு ஜூன்மீ

16 AUG 1936

1. அல்குர்ஆன் ... 145
2. அல்ஹதீது ... 147
3. பெருமானின் பிரசாரம் ... 150
4. நாயக நற்குண விசேஷங்கள் ... 153
5. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நீதம் ... 155
6. பெருமானர் அவர்களது உறுதியும் துணிவும் 156
7. பெருமானரின் புத்திரவாஞ்சை ... 157
8. இஸ்லாமும் அதன் ஸ்தாபகரும் ... 160
9. இஸ்லாம் பரவியதெப்படி? ... 162
10. இஸ்லாமும் பெண்கள் ஆடையும் ... 164
11. முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன? 166
12. இஸ்லாமிய நாகரீகமும் அதன் வீழ்ச்சியும் ... 169
13. வாழ்க்கையின் முன்மாதிரி ... 174
14. பெருமானரின்மீது அன்பு ... 181
15. நபிகள் பெருமானரும் அன்னிய மதஸ்தரும் 183

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4 0
தனிப் பிரதி ...	,,	0 4

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேரு இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடு பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடை ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்க பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப் மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திரு கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

தமிழ்நாடு ஆவண காப்பக மையம்
208348
சென்னை-600 008

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 ரபீஉல்அவ்வல் ௴ 1936 ௵ ஜூன் ௴	இதழ் 6

அல் குர்ஆன்

உங்கள் ஆடவர்களில் நின்றும் ஒருவருக்கும் முஹம்மது தந்தையாக இல்லை. எனினும், அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களில் கடைசியானவராகவும் இருக்கிறார். (திருக்குர்ஆன்)

சோதரீர்! இத்திருவசனமானது நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களது ஜீவியத்தைப்பற்றியும், அவர்களது அந்தஸ்தைப்பற்றியுமுள்ளதாகும். இவ்வசனத்தில் இறைவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குள்ள மூன்று அந்தஸ்துகளைப் பற்றிக் கூறி இருக்கிறான். 1. ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக இல்லாமல் இருத்தல். 2. அல்லாஹுத ஆலாவின் றஸூலாக இருத்தல். 3. நபிமார்களில் கடைசியானவராக இருத்தல் ஆகியவைகளாகும். மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவருக்கு இம்மூன்று விஷயமும் ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாதனவேபோல் தோன்றும். ஆனால் அவைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்மந்தமுள்ளவைகளாகவே இருக்கின்றன. எவ்வாறெனில், மனிதசமூகத்திற்காக இறைவன் அருளிய அவனது சன்மார்க்கத்தைப்பூர்த்தி செய்வதற்கான காலம் வந்துவிட்டபோது அவன் உலகரெட்சகர் (ஸல்) அவர்களை இக்குவலயத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் பொது நபியாகவும் உலக நபியாகவும் அனுப்பினான். உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பொதுவான நபி வந்துவிட்டால், தனித்தனி தேசத்தாருக்கோ, சமூகத்தாருக்கோ, ஜாதியாருக்கோ வெவ்வேறு நபிமார்கள் வரவேண்டிய அவசியமில்லை. எல்லா ஜாதியாருக்கும் பொதுவான நபி இருக்கும் தனிக்கோத்திரங்களுக்கும் ஜாதிகளுக்கும் வெவ்வேறு நபிமார்கள் இருப்பதாயின் ஒரு அரசாங்கத்தில் இருவர் ஆட்சி செய்வதற்கு ஒப்பாகவேயாகும். ஆதலால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியாகவந்த அன்றையதினத்திலேயே உலகில் வேறு யாரும் நபியாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனைக் குறித்துத்தான் "காத்தமுன்னபிய்யீன்" (நபிமார்களுக்குக் கடைசியானவர்) என்று

இறைவன் கூறியுள்ளான். தவிரவும், "இன்றையதினம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டேன். இன்னும் உங்களுக்கு எனது நிஅமத்தை (அருட்கொடையை) நிறைபூரணமாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்கு இஸ்லாமை மார்க்கமாக (அங்கீகரித்து)ப் பொருந்திக் கொண்டேன்" என்று கூறியுள்ளான்.

இறைவனது சன்மார்க்கம் உலகில் பூர்த்தியடையாமலிருந்த காலத்தில் இறைவன் மக்கள் மாட்டுப்பல நபிமார்களையும் றஸூல்மார்களையும் ஒருவர் பின் ஒருவராக அனுப்பிப் பலவேதங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அருளிக்கொண்டிருந்தான். அந்தந்த நபிமார்கள் அவ்வக்காலத்தில் தோன்றித் தங்கள் கடமைகளைச் செய்தார்கள். ஆகவே, அவன் தனது அடியார்களின் நேர்வழிக்கான மார்க்கத்தைப் பூர்த்தி செய்துவிட்டபடியால் புதிதாக நபிமார்கள் வரவேண்டிய அவசியமில்லாமலாகி விட்டது. இந்த இடத்தில் சன்மார்க்கம் பூர்த்தியடைந்து விட்டதன் விபரமென்ன வென்பதைப் பற்றி எழுதுவதாயின் வியாசம் விரிவடைந்துவிடும். ஆதலின், அவ்விஷயத்தை இம்மட்டுடன் நிறுத்திக் கொள்கின்றனம்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபிமார்களுக்குக் கடைசியானவராக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் சாதாரணமான நபியா அல்லது றஸூலா என்ற விபரம் இதில் தெளிவுபடவில்லை. இதனையும் இறைவன் இதே ஆயத்தில் "எனினும், அவர் அல்லாஹ்வின் றஸூலாக இருக்கிறார்" என்று விளக்கிக் கூறிவிட்டான். ஆகவே, நபி யென்பதற்கும், றஸூல் என்பதற்குமுள்ள வித்தியாசத்தை இங்கு சுருக்கமாகக் கூறுவாம். நபி யென்பவர் அல்லாஹுதஆலாவினது சன்மார்க்கத்தை ஜனங்களுக்கு எடுத்துப் போதிப்பதற்காக அவனாலே தெரிந்தெடுக்கப்பட்டவராவார். ஆனாலும், அவருக்குப் புதிய வேதமோ, புதிய ஷரீஅத்தோ இருக்கமாட்டாது. ஆனால், றஸூல் என்பவர்களும் அல்லாஹுத்தஆலாவின் தூதர்கள்தாம். அவனது சன்மார்க்கத்தை மக்களுக்கு எடுத்துப் போதிப்பவர்கள்தாம். என்றாலும், அவர்களுக்கு வேதம் அல்லது "ஸுஹுபு"கள் அருளப்பட்டிருக்கும். இவ்விதமான கருத்து வேத வியாக்யானிகளிற் சிலரால் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு பல கருத்துகளும் உண்டு.

ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபியாகவும், நபிமார்களில் கடைசியானவராகவும் இருப்பதுடன், வேதம் அருளப்பட்ட றஸூலாகவும் இருக்கிறார்கள் என்பது இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

இனி, ஆடவர்களில் ஒருவருக்கும் தந்தையாகவில்லை என்ற விஷயத்தை எடுத்துக்கொள்வோம். ஒருவருக்கு இவ்வுலகில் கிடைக்கும் பாக்கியங்களில் முக்கியமானவை புத்திர பாக்கியம் இருப்பதும் ஒன்றாகும். ஒருவர் எவ்வளவு பெரிய தனவந்தராகவும், பிரபுவாகவும், நவாபாகவும் ராஜாவாகவுமிருந்தாலும் அவருக்குப்பின் அவரது சொத்துக்களைப் பரிபாலனம் செய்து, அவருடைய கீர்த்தி மங்காமல் காப்பதற்குத் தகுந்த வாரிசுகாரர் இல்லையெனில், அவருடைய கீர்த்தியும், பேரும், புகழும், செல்வமும், தனமும் இருந்தும் இல்லாததற்கு ஒப்பேயாகும். இவ்வுலகிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் புத்திர பாக்கியம் வேண்டுமென்று விரும்புவதெல்லாம் பெரும்பாலும் இக்கருத்தை உத்தேசித்தேயாகும். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகில் தோன்றி மக்களுக்குக் கருணையாக அமைந்து சன்மார்க்கத்தை நிலைநிறுத்தினார்கள். அவர்கள் செய்த இவ்வருங் கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தக்க வாரிசுகாரர்கள் இருக்க வேண்டுமல்லவா? இதற்காக இறைவன் சன்மார்க்க அறிஞர்களான உலமாக்களை நபி பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு வாரிசுகாரர்களாக ஏற்படுத்திவிட்டான். ஒருவருக்கு ஸ்தூல சம்மந்தமான வாரிசுகாரர்கள் ஏற்படுவதாயின் அவர்கள் விரல் விட்டு எண்ணப்படத் தகுந்த சிறு தொகையினராகவே இருப்பார்கள். ஆனால், நபிமார்களுக்கு உலமாக்களை வாரிசுகாரர்களாக்கிவிட்டால் அவர்களை எத்தனை பேர் என்று நிர்ணயிக்க முடியாமல் போய்விடுகிறது. மார்க்கத்தைக் கற்றுணர்ந்த ஒவ்வொருவரும் வாரிசுகாரர்களாகிவிடுகின்றனர். இன்று மார்க்கத்தை அறியாமல் இருக்கிற ஒருவர் அடுத்த வருஷத்திற்குள்ளாகவோ அதற்கு முந்தியோ பிந்தியோ மார்க்கத்தைக் கற்றுணர்ந்துகொள்வாராயின் உடனே அவர் வாரிசுகாரராகிவிடுகிறார். இவ்விதம் உலகில் உள்ள மக்கள் அனைவருமே நபி பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு வாரிசுகாரர்களாகிவிடுகிறார்கள். ஆதலின், புத்திர பாக்கியத்திற்கு முக்கிய காரணமாகவுள்ள விஷ

யம் உலமாக்களைக்கொண்டு பூர்த்தியாகிவிடுவதால் ஸ்தூல சம்பந்தமான வாரிசு என ஒருவர் இருக்கவேண்டிய அவசியமில்லை என்பது நன்கு தெரிகிறது. இதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "நாங்கள் விட்டுச் செல்வது ஸதக்காவாக இருக்கிறது" என்று கூறி தங்களது உலகச் சொத்துக்களுக்கு ஒருவரையும் வாரிசாக்கிவிடவில்லை.

என்றாலும், புத்திரபாக்கிய மில்லாதவர்களை உலகில் அருள் இல்லாதவரென்று வெகு ஜனங்கள் மதித்து வருவதால் இப்படிப்பட்ட எண்ணம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் விஷயத்தில் தோன்றக்கூடாது என்பதற்காக இறைவன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு புத்திரிகளையும், புத்திரர்களையும் கொடுத்தான். என்றாலும், புத்திரர்கள் சிசுவிலேயே இவ்வுலகைவிட்டுச் சென்றார்கள். புத்திரிகள் பெரியவர்களாகி விவாகம் செய்து கொடுக்கப்பட்டார்கள். புத்திரர்கள் மாத்திரம் சிசுவிலேயே விண்ணுலகெய்தியதற்குக் காரணமென்னவெனில், இவர்கள் பெரியவர்களானால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்போல் றஸூலாகவும், நபியாகவும் இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல், சாமான்ய மனிதர்களைப்போலிருந்தால் அது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது கண்ணியத்திற்குக் குறைவான விஷயமாகும். பெண் குழந்தைகள் வாரிசுகாரர்களாக இருந்தாலும் அவர்கள் வேறு குடும்பத்திற்குச் செல்லவேண்டியவர்களாக இருப்பதால் ஆண் குழந்தைகளிடம் எதிர்பார்ப்பதைப் பெண் குழந்தைகளிடம் எதிர்பார்ப்பது உலக வழக்கமாக இல்லை. இதனால்தான் இறைவன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு புத்திரபாக்கியத்தை அளித்து, சிசுவிலேயே அவர்களை அழைத்துக்கொண்டான். இவ்விஷயத்தை றஹ்மான் தனது திருமறையில் மிகவும் நுட்பமாகக் கூறி இருப்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். அதாவது "முஹம்மது (ஸல்.) உங்களிலுள்ள ஆடவர்களில் ஒருவருக்கும் தந்தையாக இல்லை" என்று கூறினேயல்லாமல், ஆண் சந்ததி அற்றவர் என்று கூறவில்லை. சுருங்கச் சொல்லுமிடத்து இந்த ஆயத்தானது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது உன்னதமான அந்தஸ்தை மிகவும் தெளிவான முறையில் எடுத்துக் கூறுகிறதென்னலாம்.

இவ்வுண்மையை அறியாத சில மூடமாக்கள் - தங்களை நபியென்று தாவாச் செய்த தஜ்ஜால்கள் - இவ்வாயத்திலுள்ள கடைசி நபியென்ற பதத்திற்கு வேறு விதமான அர்த்தத்தைச் செய்துகொண்டு, அதிலிருந்து குதர்க்க வாதங்கள் செய்கின்றனர். நபிமார்களுக்கு முத்திரையானவர் என்று அதற்கு அர்த்தம் செய்ய முடியும். அவ்வர்த்தத்தை யாம் மறுக்கவில்லை. என்றாலும், அவ்வர்த்தமும் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு புதிய நபி எவரும் வரவேண்டியது அவசியமில்லை என்ற கருத்தை அறிவிக்கிறதேயன்றி இந்த குதர்க்க வாதிகளும் தஜ்ஜால்களும் கூறுகிற கருத்துகளை அறிவிப்பனவாக இல்லை என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

அல்ஹதீது

எவரிடத்தில் மூன்று காரியங்களிருக்கின்றனவோ அவர் அவைகளைக்கொண்டு ஈமானின் இன்பத்தைப் பெற்றுவிட்டார். அல்லாஹ்வும், அவனது றஸூலும் அவருக்கு மற்றெல்லாவற்றையும்விட அதிகப்பிரியமானவர்களாக இருப்பர். 2. ஒரு அடியானை நேசிப்பாராயின் அல்லாஹுவுக்காக அல்லாமல் (வேறு எக்காரியத்திற்காகவும்) நேசிக்கமாட்டார். 3. தன்னை நெருப்பில் போடுவதை வெறுப்பதுபோல், அல்லாஹ் "குப்றை" விட்டுத் தன்னைச் சுத்தப்படுத்திய பின்னர் அதன்பால் திரும்பச்சேல்வதை வெறுப்பார். என்று நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜ்றத் அனஸ் (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

இந்த ஹதீது புகாரி, முஸ்லிம் ஆகிய இரு ஷெய்குகளாலும் ரிவாயத்துச் செய்யப்பட்டு ஸஹீஹான ஹதீதென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹுதஆலாவின் மீதும் அவனது றஸூலின்மீதும் பற்றுக்கொள்தல், ஒருவரை நேசிப்பதாயின் அல்

லாஹுத ஆலாவுக்காகவே நேசித்தல், குப்ரியத்தான காரியத்தைச் செய்வதை தன்னை நெருப்பில் போடுவதைப்போல் அவ்வளவு அதிகமாக வெறுத்தல். ஆகிய இந்த ஹதீதில் சொல்லப்பட்ட மூன்று காரியங்கள் எவரிடமில்லேயோ அவர் ஈமானின் இன்பத்தைப் பெற்றுக்கொள்ளமாட்டார் என்பதாக நாயகம் (ஸல்) கூறியுள்ள இவ்விஷயங்களில் இந்த இடத்தில் முதலாவது விஷயத்தைமட்டிலும் எடுத்துக்கொள்வோம். இந்த முதலாவது காரியம் ஒருவரிடத்தில் தக்கமுறையில்இருக்குமாயின் மற்றிருகாரியங்களும் அவரிடத்தில் மிளிர்ந்து காணப்படும். பெற்ருேர்கள் தங்கள்மக்களின் முன்னேற்ற விஷயத்திலும் அவர்கள் க்ஷேமலாபத்துடன் இருக்கவேண்டும் என்ற விஷயத்திலும் எவ்வளவு அக்கரையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதும், மக்கள் தங்கள் பெற்ருேர்கள்பால் எவ்வளவு அன்புபூண்டவர்களாக இருப்பார்கள் என்பதும் உலகில் யாவருக்கும் நன்குதெரிந்த விஷயமாகும். இதனைப்பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை.

ஆனல், நம்மைப் படைத்துக் காத்துப் போஷித்து ரக்ஷிக்கும் இறைவன் நம்மீது நமது பெற்ருேர்களிலும் எத்தனையோமடங்கு அதிகம் கருணையும் கிருபையுமுள்ளவனை இருக்கிருன். எவ்வாறெனில், மாதாவானவள் பத்துமாதம் கர்பத்தில் சுமந்ததும், சில மாதங்கள் பால்கொடுப்பதும், அப்பால் குழந்தைக்கு உணவுமுதலிய பதார்த்தங்களைச் சமைத்து அளிப்பதும் தவிர வேறு ஒன்றும் செய்வதில்லை. தந்தையானவர் தனது குழந்தைக்கேற்படும் செலவுகளுக்குப் பணத்தைக் கொடுப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடிகிறதில்லை. உபாத்தியாயர் கல்வியறிவைப் போதிக்கிருர். வைத்தியர் மருந்தைக் கொடுக்கிருர். இவர்கள் செய்யும் காரியங்களெல்லாம் வெறும் முயற்சிகளேதவிர உண்மையில் பலன் கொடுப்பன ஒன்றுமில்லை. ஆனல், இவர்கள் செய்யும் இம்முயற்சியைக் காரியசித்தி யடையும்படிச் செய்வதற்கு அல்லாஹுத ஆலாவினது அருளும் தயையும் வேண்டும். அவை இல்லையெனில் இவையனைத்தும் வீணேயாகும். மாதா ஊட்டும் அமுதையும் உணவையும் ஜீரணமாகும்படிச்செய்யும் காரியம் அவனது தனிவேலையாகும். அவைகள் ஜீரணமாகி மலம் ஜலம் முதலியவைகள் பிரிய வேண்டிய முறைப்படி பிரியவில்லையாயின் அந்தக்குழந்தை உயிர்வாழ்வதே முடியாதகாரியமாகும். தவிரவும், அக்குழந்தை கர்பத்திலிருக்கும்போது ஜீவித்திருக்கும்படிச் செய்தவனும், கர்பத்தைவிட்டு வெளியில்வந்தபின் ஜீவித்திருக்கும்படிச்செய்பவனும், அறிவைக் கொடுப்பவனும் நோயைத்தடுப்பவனும் இன்னும் சகலகாரியங்களைச் செய்பவனும் அவனேயாகும். மாதா, பிதா, குரு முதலானவர்கள் இவ்விஷயத்தில் முயற்சிசெய்பவர்களேயன்றி அவைகளைக் கொடுப்பவர்களன்று. ஆதலின், உலகில் மாதா, பிதா, குரு முதலியவர்களுக்கு மக்கள்செய்யும், மரியாதை, அன்பு, ஆகியவைகளைப் பார்க்கினும் அதிகமான அன்பையும் மரியாதையையும் ஆண்டவன்பால் செய்வது ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும். இப்படிச் செய்யாமலிருப்பவர்கள் செய்நன்றி மறந்தவர்களேயாவர். ஒருவர் உண்மையாகவே இறைவனின் அருட்கொடைகளை உணருவாராயின் அவருக்கு உலகத்தையும், உலகத்திலுள்ள எப்பொருளையும் பார்க்கினும் அதிகமான அன்பும் பற்றும் ஆண்டவன்பால் உண்டாகிவிடும். இந்நிலைமையில் வெறும் முயற்சிகளைமட்டிலும் செய்பவர்களான மாதா, பிதா, குரு முதலியவர்களது கட்டளைக்கு மாறுசெய்யவோ, அவர்களது இஷ்டத்திற்கு விரோதமானதைச்செய்யவோ இஷ்டப்படாத நாம் நமக்குச் சகலவிதமான அருள்களையும் புரிந்துகொண்டிருக்கிற ஆண்டவனது விருப்பத்திற்கும் கட்டளைக்கும் எங்ஙனம் மாறுசெய்யமுடியும். அப்படி மாறுசெய்யும்படி ஒருவர் தூண்டினுலும் ஒருபோதும் மாறுசெய்ய விரும்பவேமாட்டோம். இதனைக்குறித்துத்தான் ஷை ஹதீதில் "தன்னை நெருப்பில் போடுவதை எவ்விதம் வெறுப்பாரோ அதுபோல அவனுக்கு மாறுசெய்வதை வெறுக்கவேண்டும்!" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர, நாம் உண்மையான அன்பும் பற்றும் ஆண்டவன்மீது கொண்டிருப்போமாயின் அவனதுகட்டளைக்கு முற்றிலும் வழிபட்டு நடக்கும் அவனது அடியார்கள்மீது அன்பும், அவனுக்கு மாருக நடப்பவர்மீது வெறுப்பும் உண்டாகவேண்டியது அவசியமாகும். இம்முறையில் நாம் ஒருவரை நேசிப்பதாயின் அது அல்லாஹுத ஆலாவுக்காக நேசிப்பதேயன்றி வேறு எக்காரணத்திற்காகவும் நேசிப்ப

தாக இல்லை. இவ்விதமானநேசம் கொள்வது தான் தெய்வபக்தியுள்ள ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய அம்சமாகும். இக்காரணத்தைத்தவிர்த்து வேறுவிஷயங்களுக்காகப் பிறர் மீது அன்புசெலுத்துவது ஆண்டவனுக்காக அன்புசெலுத்துவதாகாது. இதனைக்குறித்துத்தான் "ஒரு அடியானை நேசிப்பாராயின் அல்லாஹ்வுக்காக அல்லாமல் (வேறு எக்காரியத்திற்காகவும்) நேசிக்கமாட்டார்" என்பதாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

அல்லாஹுத ஆலா நம்மீது அளவற்ற கருணையும் இரக்கமும்கொண்டு அவன் நமக்கருளிய கருணைகளை நமக்கறிவித்து, அவனுக்குத் திருப்தியளிக்கக்கூடிய காரியங்கள் இன்னின்னவை? அதிருப்தி யளிக்கக்கூடியவை இன்னின்னவை என்று நமக்குக் காண்பித்தவர் அவ்வல்லோனின் திருத்தூதரேயாகும். வேறு எவரும் நமக்கு இனியில்லாவண்ணம் அவ்வளவு தெளிவாக அறிவித்து வழிகாட்டவில்லை. ஆதலின், அல்லாஹுத ஆலாவுக்குப் பிறகு, மனிதசமூகத்திற்குப் பெரும் உபகாரம்புரிந்தவர்கள் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களேயாவார்கள். மக்களின் இம்மை மறுமை வாழ்க்கைகளை நினைவூட்டி இம்மையில்நேர்மையான வாழ்க்கையை நடத்துவதுடன் மறுமையின் ஈடேற்றத்திற்கான வழியை மக்களுக்குக் காட்டியபேறு நாயகம் (ஸல்) அவர்களுக்குத்தானிருக்கிறது. இம்முயற்சியில் இறைவன் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பெரும்வெற்றியை அளித்துளான். ஆகவே, நாயகம் (ஸல்) அவர்கள் இல்லாதிருப்பின் உலகில் இன்றையதினமுள்ள மனிதசமூகம் வேறுவிதமான சமூகமாகவே இருந்திருக்கும். ஆதலின், நாயகம் (ஸல்) அவர்கள் செய்த இணையற்ற தொண்டை இவ்வுலகமக்கள் மதிப்பதும், அவர்கள்காட்டிய வழியைப் பின்பற்றுவதும், அவர்கள்பால் மற்றெல்லா மனிதர்களைப் பார்க்கினும் அதிகம் அன்பும் விசுவாசமும் கொள்வதும் கடமையாகும். இவ்வுண்மையைத் தான் இந்த ஹதீது நமக்குத் தெற்றென விளக்குகிறது. எல்லாம்வல்ல இறைவன் இந்த ஹதீதில்கண்ட முன்று அம்சங்களும் மக்கள் பால் உண்டாக அருள்புரிவானாக. ஆமீன்.

நபி பெருமானின் திவ்விய குண ஒழுக்கங்கள்

நல்லொழுக்கமும் நற்குணமும் பெருமானவர்களிடம் பூர்த்திபெற்றிருந்தன. மனத்தூய்மையும் சத்தியமும், இரக்கமும் மனோவுறுதியும், தாழ்மையும், கண்ணியமும், நாணமும் முகமலர்ச்சியும், சுயநலமறுப்பும், நீதியும், வீரமும், பொறுமையும், உலகத்தோடிருந்து உலகத்தில் பற்றில்லாமலிருத்தலும், ஆண்டவன்மீது நம்பிக்கையும், அந்தரங்க பக்தியும் ஆகிய குண விசேஷங்களெல்லாம் பெருமானார் (ஸல்.) அவர்கள்பால் ஒருங்கே நிறையப்பெற்றிருந்தன. மனித சக்தியினால் அடைய முடியாத உன்னதப் பதவிகளை பெருமானார் அவர்கள் அடைந்திருந்தும் அவர்கள் தங்களை மற்றவர்களைவிட மேலாகக் கருதவேயில்லை. "நானும் ஒரு அடிமை; அடிமையைப் போலவே சாப்பிடுகிறேன்; அடிமையைப் போலவே உட்காருகின்றேன்" என்று சொல்வார்கள். வீட்டு வேலைக்காகவும் மற்ற விஷயங்களுக்காகவும் எவருக்கும் தொந்திரவு கொடுக்கமாட்டார்கள். வீட்டிலுள்ள ஆட்டின் பாலை அவர்களே கறந்துகொள்ளுவார்கள். ஒட்டகத்தை கட்டி அதற்கும் புல் முதலான தீனியைப்போட்டு அவர்களே கவனித்துக்கொள்ளுவார்கள். வீட்டை சுத்தம் செய்வதையும் கேவலமாகக் கருதாமல் அவர்களே செய்துகொள்வார்கள். கிழிந்த ஆடைகளை அவர்களே தைத்துக்கொள்ளுவார்கள். பாதரக்ஷை செப்பனிட்டுக்கொள்ளுவார்கள்.

மற்றவர்கள் வேலைசெய்து கொண்டிருக்கும் போது தாங்கள் சும்மாவிருக்கப் பிரியப்படமாட்டார்கள். அவர்கள் நபியாகவும் அரசருக்கு அரசராகவு மிருந்தும் ஒருதொழிலையும் அவர்கள் கேவலமாக மதிக்கவில்லை. மனிதனுடைய மேன்மை தாழ்மை தொழிலினால் உண்டாவதில்லை என்றும் அவனுடைய சக்தியினாலும் ஒழுக்கத்தினாலுமே உண்டாவதென்றும் அனுபவத்தில் காட்டினார்கள். உடையிலும் பெருமானார் (ஸல்.) அவர்கள் குறிப்பான ஓர் உடை அணிந்துகொள்ளுவதென்ற வழக்கமில்லை. அநேகமாக முரடான வஸ்திரங்களையே அணிந்துகொள்வார்கள். ஒன்றுக்கதிகமான ஆடை அவர்கள் வைத்துக்கொள்வதில்லை. ஆடம்பரமான உடையில் அவர்கள் பிரியங் கொள்வதில்லை. ஒட்டுப்போட்டுத் தைத்த உடைகளையும் மிகுதமாய் அணிந்து கொள்வார்கள்.



பெருமானின் பிரசாரம்

இவ்வுலகமே பிரசாரமயமாக இருக்கிறது. இவ்வுலகிலுள்ள சகல இயக்கங்களும் அது நன்மைசெய்வன வாயினும் சரி, அல்லது தீமைசெய்வன வாயினும் சரி, சகலமும் பிரசாரத்தின் மூலமாகவே வெற்றி யடைகின்றன. மறுமை சம்மந்தமான பிரசாரமாயினும் சரி, இவ்வுலகசம்மந்தமான பிரசாரமாயினும் சரி, அவையனைத்தும் பிரசாரத்திற்குள்ளிலேயே மறைந்திருக்கின்றன. எங்குபார்த்தாலும் பிரசாரத்திற்கென லக்ஷக்கணக்கான ஜனங்களது முயற்சியும், திரவியங்களும் செலவுசெய்யப்படுகின்றன. ஆயினும், எல்லாப்பிரசாரங்களும் வெற்றிபெற்று விடுவதில்லை. சிலவெற்றிபெற்றன வென்றால் சில தோல்வியும் அடைகின்றன. இங்கு நாம் மதப்பிரசாரத்தை மட்டிலும் கவனிப்போம். யூதரும் கிறிஸ்துவரும் பிறரும் பிரசாரம் புரிகின்றனர். ஒரு காலத்தில் யூதர்கள் தங்களது பிரசாரத்தின் வேகத்தால் கிறிஸ்துமதத்தை அடக்கினர். ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களுக்கும், அவர்களது சிஷ்யர்களுக்கும் பலத்த தொல்லைகள் விளைவித்தனர். அதற்கப்பால் அவர்களது பிரசாரத்தின்முறை தோல்வியுற்றது. கிறிஸ்துவப்பிரசாரம் ஓங்கிற்று. யூதமதம் ஒடுக்கப்பட்டது. யூதர்களிடம் கிறிஸ்துவர்கள் எவ்வளவு கஷ்ட சங்கடங்களை அனுபவித்தார்களோ அதனைப் பார்க்கினும் அதிகமான கஷ்டங்களையும் சங்கடங்களையும் கிறிஸ்துவர்கள்மூலமாக யூதர்கள் அடைந்தனர். அப்பால் இஸ்லாம்மதம் தோன்றியது. நபிபெருமானார் (ஸல்) அவர்களுடையவும், அவர்களது ஸஹாபிகள் தாபியீன்கள் ஆகியவர்களுடையவும் பிரசாரத்தின்முன் யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஷ்ரிக்குகள் முதலியவர்களின் பிரசாரம் தலைதூக்க முடியாமல் ஒழிந்தது. ஆகவே, முஷ்ரிக்குகளிலும், கிறிஸ்துவர்களிலும், யூதர்களிலும், பிறரிலுமாக லக்ஷம் லக்ஷமான மக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இதன்பலனாக முஸ்லிம்கள் இன்றைக்கும் பலகோடிமக்களாக இருந்துவருகின்றனர். என்றாலும், அன்று 1350-வருஷங்களுக்கு முன்னர் பிறமதவாதிகள் இஸ்லாத்திற்கு எதிராகச் செய்த பிரசாரம்மாத்திரம் குறையவேயில்லை. நித்தம் நித்தம் புதுப்புதுமாதிரியாகப் பிரசாரம் செய்யப்படுகிறது என்றாலும், இவர்களது இப்பிரசாரம் எதுவும் இஸ்லாமியப் பிரசாரத்தை வெல்வதாக இல்லை. ஆனால், முஸ்லிம்களில் பலர் எதிர்மதவாதிகள் செய்யும் இப்பிரசாரங்களையும், முயற்சிகளையும், முறைகளையும்கண்டு பயந்து நடுங்குகின்றனர். இஸ்லாத்திற்கு ஆபத்து வந்துவிடுமோ வென்றஞ்சுகின்றனர். அவர்களவ்வாறு அஞ்சவேண்டியதில்லை. இஸ்லாமியப் பிரசாரத் திட்டம் மிகவும் சாமான்யமானது. தனத்தை விரயம்செய்யவேண்டியதில்லை. இத்திட்டத்தின்முன் வேறெந்தத்திட்டமும் வெற்றியடைய முடியாது. இஸ்லாமியத்திட்டத்தை பிறமதத்தார் பின்பற்றுவார்களாயின் அவர்கள் முஸ்லிமாகிவிடுவதைத் தவிர

வேறுவழியில்லை. ஏனெனில், இஸ்லாமியப்பிரசாரத்திட்டம் மனிதரால் ஏற்படுத்தப்பட்டதன்று. இம்மனிதர்களைச் சிருஷ்டித்த 'மாலிக்'காகிய ஆண்டவனால் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தைவெல்ல சிருஷ்டிப்பொருள்கள் சிருஷ்டித்த திட்டத்தால் முடியாது. ஆனால், சிருஷ்டிக்கர்த்தாவினால் சிருஷ்டிக்கப்பட்ட இஸ்லாமியதிட்டத்தை முஸ்லிம்களாகிய நாம் கிரியாம்சையில் அமுல் நடத்த முன்வரவேண்டும். நாம் அவ்வாறு அமுல்நடத்தாமல் பிறமதத்தார்போடும் திட்டங்களைக்காப்பியடித்து வேறுதிட்டத்தை ஏற்படுத்துவோமாயின் நம்முடைய இப்புதிய திட்டமும் வெற்றியடையாதென்பது நிச்சயம். ஏனெனில், திட்டத்தை யுண்டு பண்ணுபவர்தான் அதனை வெற்றியடையச்செய்ய வேண்டும். நாமாக ஏற்படுத்திக்கொண்ட திட்டத்தை வெற்றியடையச்செய்தல் நமது முயற்சியையே பொறுத்திருக்கிறது. றஹ்மானின் சகாயமில்லாத எந்த முயற்சியும் திருவினையாகப் போவதில்லை. எனவே, றஹ்மான் ஏற்படுத்திய திட்டத்தைக் கைவிட்டு அதற்கு பதிலாக நாமாக ஏற்படுத்திக்கொள்ளும் திட்டத்திற்கு றஹ்மானின் அருளும் உதவியும் இருக்கமுடியாது. ஆதலின், நமது புதியதிட்டமும் வெற்றிபெறாது. நம்முடையநோக்கம் சித்தியடையவேண்டுமாயின் அவ்வல்லோன் வகுத்த திட்டத்தையே நாம் பின்பற்றவேண்டும்.

அவ்வல்லோன்வகுத்த திட்டம் யாது? என்பதை நம்மவர் அறியாமல் அதனைப் பின்பற்றுவதென்பது முடியாத காரியமாகும். அவ்வல்லோன் திட்டத்தை வகுத்ததுமல்லாமல் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மூலமாக நமக்குப் பிரத்தியக்ஷத்தில் காண்பித்து மிருக்கிறான். ஆதலின், வல்லோன் வகுத்த திட்டத்தை அறிய விரும்புவோர் எம் பெருமானர் (ஸல்) அவர்களது வாழ்க்கைமுறைகளையும், அவர்கள்செய்த இஸ்லாமியப் பிரசாரமுறைகளையும் நன்கு கவனித்து உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே, இந்தியாவில் மதப் பிரசாரம் இதுபோழ்து அதிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றுவருவதால் முஸ்லிம்களாகிய நாம் இப்பிரசார வேலையில் வெற்றிபெற்று இஸ்லாத்தின் ஜெயக்கொடியை நாட்டுவதற்கு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்குப் பிரத்தியக்ஷமாகச் செய்துகாண்பித்த பிரசாரத்திட்டமே மிகவும் வேண்டற்பாலதாகும். இத்திட்டத்தைப்பற்றி இவ்வாண்டின் ஸீரத்பிரசங்கம் வெளியிடப்படுகிறது. அதனை அன்பர்கள் வாங்கிப்படிப்பார்களாயின் பிறமதத்தார் செய்யும் அபார முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கான மார்க்கத்தை நாம் உணர்ந்துகொள்ளலாம். ஆனால், ஒரு விஷயத்தைமட்டிலும் இங்கு சிறிது கூற விரும்புகிறோம். இஸ்லாமியப் பிரசாரத்திற்கென்று பெரும்திரளான பணத்தை நாம்திரட்ட வேண்டிய அவசியமுமில்லை. பிறமதத்தாருக்குப் பண ஆசைகாட்ட வேண்டிய அவசியமுமில்லை. முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாத்தின் சட்டதிட்டங்களை முற்றிலும் பின்பற்றிநடக்கத் துணிந்து விடுவோமாயின் பிறமதத்தார் தாங்களாகவே இஸ்லாத்தைத்தழுவக் கூட்டங்கூட்டமாக முன்வருவர். நாம் அவர்களை அன்புடன்வரவேற்று இஸ்லாமிய சகோதரத்துவ உணர்ச்சியுடன் நடத்தினால் போதும். கிரியாம்சையில் நாம்செய்து காண்பிக்காமல் பண ஆசைகாட்டிப் பிறரை ஏமாற்றி இஸ்லாத்தைத் தழுவச்செய்வோமாயின், சிலகாலமாக பிறமதத்தார் சிலர் பணத்தாசைகாட்டிய தன்பலனாகத் தங்கள்மதத்தைத் தழுவிய பலர் வேறுமதத்திற்குத் திரும்பிச்செல்வதைப்பார்த்து விசனமுற்றிருப்பது போல் நாமும் இருக்கவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டுவிடும். ஆதலின், முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத்தின்படி முற்றமுற்றப் பின்பற்றி நடப்பதுடன்

தங்களுக்கு அறிமுகமான பிறமதத்தாரை அன்பாகவும் பிரியமாகவும் நடத்தி அவர்களுக்கு இஸ்லாமிய சகோதரத்துவத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விஸ்லாமியப்பிரசாரத்தை ஆரம்பிக்கும்போது திரளான பணத்தைத் திரட்டி வைத்துக்கொள்ள வில்லை. நூற்றுக்கணக்கான பிரசாரகர்களைச் சம்பளத்திற்கமர்த்திக்கொள்ளவு மில்லை. இஸ்லாத்தில் சேருபவர்களுக்குப் பணம் தருவதாகவோ கடனடைப்பதாகவோ கூறவில்லை. ஆனல், ஒவ்வொருவருக்கும் தக்கவாறு அவரவரின் அறிவு விவேகத்திற்கேற்றபடி இன்சொல்லால் இஸ்லாமியக் கொள்கைகளைப் போதித்தார்கள். அவர்கள்போதித்ததன் பிரகாரம் கிரியாம்சையிலும் செய்தார்கள். சுயநலக்காரர்கள் காட்டிய ஆசைவார்த்தைகளையும் செவியிற்கூட ஏற்றுக்கொள்ளாமல் எவருடைய தயையையும் தாட்க்ஷண்யத்தையும் கவனித்து விட்டுக்கொடாமல் கருமமே கண்ணுக இருந்து பிரசாரம் புரிந்தார்கள். இப்பிரசாரத்தைத் தடுப்பதற்காக எதிரிகள்செய்த முட்டுக்கட்டை, தடைமுறை முதலியஎந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தினர்களில்லை. எதுவரினும் வரட்டும். எல்லாவற்றையும் காக்கவல்லோ ஞெருவனுளன் என்ற வைராக்கியத்துடன் முன்வைத்தகாலை பின்வைக்காமல் இஸ்லாமியப்பிரசாரம் புரிந்தார்கள். இதன் விளைவாக பிறந்த அகத்தைவிட்டு வேறொரு அகம்செல்ல வேண்டியதும் வந்தது. ஆனுலும், மனமுடைந்துவிட வில்லை. அன்று பிரசாரத்தை ஆரம்பித்தபோது எந்த உறுதியிலும், நம்பிக்கையிலும் பிரசாரத்தை ஆரம்பித்தார்களோ அதே உறுதியில் கடைசிவரை இருந்தார்கள். இறைவனருளால் தங்களது பிரசாரத்தில் பூரண வெற்றிபெற்று ஜெயக்கொடி நாட்டினுர்கள்.

நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் இவ்வுலகின் பலபாகங்களிலும் பரவிய ஸஹாபிகளும், தாபியீன்களும், வலிமார்களும், வர்த்தகர்களும் தங்களுக்கெனப் பிரச்சாரச்சபையை ஏற்படுத்திக் கொள்ளவோ, பெருந்திரளான பணந்திரட்டவோ இல்லை. எனினும், லக்ஷக்கணக்கான மக்களை அவர்கள் இஸ்லாத்தில் சேர்த்தனர். இவர்கள் இவ்வாறு வெற்றியடைந்ததற்குக் காரணம் இவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வழிமுறையைப் பின்பற்றியதேயாகும். இற்றைநாளில் கிறிஸ்துவர்களும், சீக்கியரும், ஆரியரும், பிறரும் தங்களுக்குள் பெரும் பிரசாரசபைகளை ஏற்படுத்திக்கொண்டு திரண்ட பணத்தைச் செலவிடுவதால் ஏழைமக்கள் பண ஆசையின் மேலீட்டால் அவர்களது வலையில்சிக்கி பிறமதம் தழுவுகின்றனர். வருடந்தோறும் பல்லாயிரம் மக்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துவிட்டதாக அவர்களது பிரசார சபைகள் கணக்கிடுவதும் வழக்கமாக இருந்துவருகிறது. உற்றுக்கவனித்தால் ஒன்றுமில்லை என்பது நிச்சயம். இஸ்லாம் மதத்தவர் தங்களுக்கென பிரசார சபைகளைக் கட்டுப்பாடாக அமைக்கவில்லை. ஆயினும் ஆங்காங்கு சில சபைக ளிருக்கின்றன. இச்சபைகள் செய்யும் வேலையெல்லாம் வலியவருபவர்களை இஸ்லாத்தில்சேர்த்துவிடுவதுடன் நின்றுவிடுகிறது. அப்படி இருந்தும் இஸ்லாம் மதத்தில் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் சேர்ந்து வருகின்றனர். இதற்குக் காரணம் இஸ்லாம் மதத்திலுள்ள சிறந்த அம்சங்களேயாகும். இவ்விதநிலைமையில் முஸ்லிம்களாகிய நாம் நாயகம் (ஸல்.) அவர்களது பிரசார முறையைப் பின்பற்றுவோமாயின் லக்ஷக்கணக்காகப் பணத்தைச் செலவுசெய்யும் பிரசார சபைகளெல்லாம் காணுமற் போய்விடுமென்பது நிச்சயம். ஆகவே, நம்மவர் இவ்வாண்டின் சிரத்பிரசங்க நூலாகிய “ பெருமானின்

பிரசாரம்'' என்ற நூலை வாங்கிப்படிப்பதுடன், மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுத்து அதிற் சொல்லப்பட்ட திட்டத்தைக் கிரியாம்சையிற் செய்யமுயலுவார்களாக. எல்லாம்வல்ல இறைவன் தனது சன்மார்க்கத்தை உலகமெங்கும் பரவச்செய்ய அருள்புரிவதுடன், அவனது திட்டப்படி மக்கள் நடப்பதற்கும் கிருபைசெய்வானாக.

ஆமீன்.

நாயக நற்குண விசேஷங்கள்

வாக்குறுதி நிறைவேற்றல்

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் வாக்குறுதியை மீறியதே இல்லை. வாக்குறுதியின் படி நடப்பதுகொண்டு தங்களுக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதனை மிகச் சந்தோஷமாகவே ஏற்றுக்கொள்வார்கள். இது சம்மந்தமாகத் தங்களுக்கேற்பட்ட கஷ்டத்திற்காகப் பிறரை நொந்துகொள்ள மாட்டார்கள்.

ஒருமுறை மக்காவாசி ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை வழியில் கண்டு நான் திரும்ப வரும்வரை தாங்கள் இங்கிருக்கவேண்டும்; எனக்குத் தங்களிடத்தில் ஒரு வேலை இருக்கிறது என்று கூறினர். அதற்கு உத்தம தூதர் (ஸல்.) அவர்கள் ''நல்லது'' என்று கூறினார்கள். இதன்பேரில் அம் மனிதர் தமது காரியத்தைக் கவனித்துவிட்டுத் திரும்ப வர வேண்டுமென்ற எண்ணத்துடன் சென்றார். ஆனால், அவருக்கு ஞாபகப் பிசகு ஏற்பட்டுவிட்டதால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைக் காத்திருக்கும்படிச் செய்துவிட்டு வந்ததை மறந்துவிட்டார். ஆகவே, அந்த இடத்திற்கு அவர் அன்று திரும்ப வரவில்லை. மறுநாள் தற்செயலாக ஏதோ ஒரு காரியார்த்தமாய் அவ் வழியே வந்தார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் குறித்த இடத்தில் இருந்துகொண்டிருப்பதைப் பார்த்தவுடன் அவருக்கு முதல் நாள் கூறிய செய்தி ஞாபகத்திற்கு வந்தது. முதல் நாள் பகல், அன்றைய இரவு முழுவதிலும் நாயகம் (ஸல்.) அவர்கள் தம்முடைய வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்ததைக் கண்டு வெட்கினர்-வருந்தினர். நாயகம் (ஸல்.) அவர்களிடம் தம்முடைய செய்கைக்காக மன்னிப்புக் கேட்டார். ஆனல், நாயகம் (ஸல்.) அவர்கள் ''குற்றமில்லை, ஞாபகப் பிசகு மனிதனுடன் சேர்ந்தே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது'' என்று கூறி அவரைத் தேற்றிவிட்டுத் தமது இல்லம் திரும்பினர்கள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் ஸஹாபிகளும் மக்கமாநகருக்குச் சென்றார்கள். மக்காவிலுள்ள குறைஷ் முஷ்ரிக்குகள் முஸ்லிம்களுக்குப் பரம விரோதிகளாக இருந்ததால் மதீனாவிலிருந்து வரும் முஸ்லிம்களையும் நாயகம் (ஸல்.) அவர்களையும் மக்காவிற்குள் வர விடாமல் தடுத்துவிட வேண்டுமென்னும் சங்கல்பம் செய்துகொண்டனர். இதன்பேரில் ''ஹுதைபிய்யா'' என்ற இடத்தில் மக்கத்து குறைஷியருக்கும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது.

இவ்வுடன்படிக்கை அமுலி லிருந்த காலத்தில் குறைஷியர் 'அபூராபிஉ' என்பவரைத் தங்கள் சார்பாக நாயகம் (ஸல்) அவர்களிடம் தூது அனுப்பினர். அவர் மதீனா முனவ்வராவுக்கு வந்து, நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்தவுடனேயே இஸ்லாம் மதத்தின் சிறப்பும் மேன்மையும் அவரது அகத்தைக் கொள்ளை கொண்டன. இஸ்லாம் மதத்தின் ஞானவொளி அவரது அகத்தில் பிரகாசிக்கத் தொடங்கிற்று. ஆகவே, அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டார். மக்கமா நகருக்குத் திரும்பிச்செல்ல இஷ்டப்படாமல், மதீனாவிலேயே இருந்து கொள்ள நபிகள்நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கோரினர். நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி கொடுக்க மறுத்து ''தூதுவர்களை நாம் நிறுத்திவைத்து நம்பிக்கைத் துரோகம் செய்யமுடியாது. நீர் இப்பொழுது திரும்பச் சென்றுவிடவேண்டும். உமது இருதயத்தில் இஸ்லாமியப்பற்று அங்கும் உருதியுடனிருப்

பின் நீர் அங்கிருந்து மீண்டும் இங்கு வந்துவிடலாம்'' என்று கூறி விட்டார்கள். இக்கட்டளைப்படி 'அபூபஸீர்' மதீனாவிலிருந்து திரும்பி வந்து மீண்டும் மதீனா சென்று தாம் இஸ்லாம் மதத்தைத் தழுவி விட்டதாகப் பகிரங்கமாய் அறிவித்தார்.

'ஹுதைபிய்யா' உடன்படிக்கை நிபந்தனைகளில், மக்காவிலிருந்து முஸ்லிமாகி மதீனாவுக்கு வருபவர்களைத் திரும்ப அனுப்பவேண்டுமென்று குறைஷியர்கள் கேட்டால் அவர்களைத் திரும்ப ஒப்புவித்துவிட வேண்டும். முஸ்லிம்களில் எவரேனும் குறைஷிகளிடம் வந்துவிட்டால் அவர்களைக் குறைஷியர் வசம் திரும்ப ஒப்புவிக்கப்படமாட்டாது என்பதும் ஒன்று. இந்த நிபந்தனை அஸ்ஹாபிமார்களுக்கு மிகவும் சகிக்க முடியாததாக இருந்தது. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நிபந்தனையை அங்கீகரித்துக்கொண்டார்கள்.

இதனைப் பற்றி முஸ்லிம்கள் வருந்துவதை பெருமானார் (ஸல்) அவர்கள் உணர்ந்து பின்வருமாறு சமாதானம் கூறினார்கள்:—

''குறைஷியர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிற முஸ்லிம்களுக்கு அல்லாஹுதஆலா ஒருவழியை ஏற்படுத்துவான். ஆனால், நம்மிலிருந்து விலகிக் குறைஷியர்களிடம் போய்ச் சேர்ந்து கொள்பவர்களை நாம் வாபஸ் பெற்றுக் கொள்ளாவிடில் அதனால் நமக்கு எவ்வித நஷ்டமும் வந்துவிடாது. ஏனெனில், நம்மைவிட்டு விலகி முர்த்தத்தாகிப் போனவர்களை நாம் வாபஸ் பெற்றுக்கொண்டு என்ன செய்யப் போகிறோம்?'' என்று அறிவுறுத்தினார்கள்.

பிறகு, இவ்வுடன்படிக்கைப்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யாவிலிருந்து மதீனாவுக்குத் திரும்ப வந்துவிட்டார்கள். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பால் உண்மை அபிமானமும், விசுவாசமும் கொண்டுள்ள ஹஜ்ரத் அபூபஸீர் (றலி.) அவர்களும் மதீனாவுக்கு வந்துவிட்டார். இவர் இஸ்லாம் மதம் தழுவியதற்காக இவரை மக்கத்துக் குறைஷியர் கைதி செய்து வைத்திருந்தனர். ஆதலின், இவரைத் திரும்பவும் கைதி செய்துகொண்டு வருவதற்காக குறைஷியர்கள் இருவரை மதீனாவுக்கனுப்பி வைத்தனர். உடன்படிக்கை ஷர்த்துப்படி அபூபஸீர் (றலி.) அவர்களை நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்விருவரிடமும் ஒப்புவித்தார்கள். அபூபஸீர் (றலி.) அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் தம்மை மக்காவுக்குத் திரும்ப அனுப்பக்கூடாது என்று மிகவும் வினயமாக வேண்டிக்கொண்டார். ஆயினும், நாயகம் (ஸல்.) அவர்கள் ''நாம் வாக்குறுதிக்கு மாறு செய்யமுடியாது. ஆனால், அல்லாஹுத்தஆலா உமக்கு ஏதேனும் ஒரு வழியை உண்டாக்கிக் கொடுப்பான்'' என்று கூறி அனுப்பி விட்டார்கள்.

வழியில் 'துல்ஹுலைபா' என்ற இடத்தில் ஹஜ்ரத் அபூபஸீரும் மக்கத்தாரிருவரும் உணவருந்துவதற்காக உட்கார்ந்தனர். அது சமயம் இவர் எவ்விதமாகவோ அவ்விருவரில் ஒருவரைத் தந்திரமாக வாளுக்கிரையாக்கிவிட்டார். இரண்டாவது மனிதரையும் கொலை செய்துவிட எத்தனித்தபோது அவர் தப்பியோடி நாயகம் (ஸல்.) அவர்களிடம் வந்து முறையிட்டார். அபூபஸீரும் அங்கு திரும்ப வந்து சேர்ந்தார். நாயகம் (ஸல்.) அவர்கள் அவரைப் பார்த்து நீங்கள் யுத்தத் தீயை மூட்டிவிட்டீர்கள் என்று கூறி அவரை மறுபடியும் மக்கா செல்லவே உத்தரவிட்டார்கள். ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது வாக்கு தத்தத்திற்கு மாறுசெய்ய மாட்டார்கள் என்பதை அவர் உணர்ந்து மக்காவுக்குச் செல்லாமல் சமுத்திரக் கரையோரமாகவுள்ள ஒரு இடத்தில் குடியிருந்துகொண்டார்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது வாக்கு தத்தத்தை எவ்வளவு தூரம் கௌரவித்துக் காப்பாற்றினார்கள் என்பது மேலே சொல்லப்பட்ட சம்பவங்களிலிருந்து தெரியவரும். நாயகம் (ஸல்.) அவர்கள் இப்படிச் செய்துகொண்டிருந்தது மல்லாமல் மற்றவர்களும் தங்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று தாக்கீதும் செய்திருக்கிறார்கள். ''வாக்குறுதியில் பூரணமாக இல்லாதவருக்கு ஈமானுமில்லை'' என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆனால், இக்காலத்திலுள்ள நம்மவர் இவ்வுதாரணத்தின்படி செய்துவருகிறார்களா? அவர்கள் இப்படிச் செய்து வரவில்லையானால் இனிமேலேனும் தங்கள் வாக்குறுதியை மிகவும் கண்ணியமான முறையில் நிறைவேற்றுவார்களாக.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நீதம்

உலகில் இரண்டுகாரியங்கள் மிகவும் முக்கிய மானவைகளாகும். ஒன்று நற்குணம். மற்ருென்று சட்டம். நற்குணம் தனிப்பட்ட மனிதனுடன் சம்மந்தப்பட்டது. சட்டம் அரசாங்கத்துடனும், மனித சமூகத்துடனும் சம்மந்தப்பட்டது. மன்னித்தல், க்ஷமித்தல், சமாதானம், உறவு ஆகியவைகள் மனிதனின் சிறந்த தன்மைகளைச் சேர்ந்தவைகளாகும். ஆனல், அது தனிப்பட்ட மனிதரிடமிருந்து கடந்து அரசாங்கம், சமூகம் ஆகியவைகளுடன் சம்மந்தப்பட்டுவிடுமாயின் அது சட்டத்தின் எல்லைக்குள்வந்து விடுகிறது. அப்பொழுது தண்டனைகொடுக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் மன்னிப்புச்செய்து விட்டுவிடுவது பெருங் குற்றமாகவும் பாபமாகவும் அமைந்து விடு கிறது. அன்றியும் அப்படிச்செய்வது துணி கரகான குற்றமெனக் கருதப்படும். மனிதர்க ளுடைய உரிமைகளை அவைகளுக்குரியவர்க ளுக்கு அளிப்பதற்கு நீதியென்று பெயர். இதற்குமாருக நடந்துகொள்வதற்கு அநீதி யென்றுபெயர். இவ்வித அநீதியால் ஆண் டகையின் அடியார்களது உரிமைகள் பறிக்கப் படுகின்றன.

திருமக்காவில் பாத்திமா என்ற பெயருள்ள ஒரு ஸ்திரீ இருந்தனள். அவள் திருட்டுக் குற்றத்திற்காக நபிகள்நாயகம் (ஸல்) அவர்க ளால் விசாரிக்கப்பட்டனள். நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹுத ஆலாவினது சட்டத்தை அமுல்நடத்துவதில் எவருடைய தயவையும் தாட்க்ஷண்யத்தையும் பார்ப்ப தில்லை என்பது ஜனங்களுக்குத் தெரிந்த விஷ யம். ஆகவே, பாத்திமா என்ற இந்த ஸ்திரீ திருட்டுக்குற்றத்திற்காக அவசியம் தண்டிக்கப் படுவாள் என்பதை உணர்ந்திருந்தனர். ஆயி னும், நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதி கப் பிரியமானவரான ஹஜ்ரத் உஸாமத்துப் னுஜைத் (ஸல்) அவர்களைக் கொண்டு சிபாரிஷ் செய்விக்க வேண்டுமென்று விரும்பினர். அதன்படி அவரும் சிபாரிஷ் செய்தார். ஆனல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது சிபா ரிஷுக்கு மறுமொழியாக "உஸாமா! அல்லா ஹுத்த அலாவின் கட்டளைகளிலுமா சிபாரிஷ் செய்கின்றீர். முஹம்மதுடைய மகள் பாத்தி மா இக்குற்றத்தைச் செய்திருந்தாலும் நான் அவசியம் சட்டத்தை அமுல் நடத்துவேன்" என்று கூறினர்கள்.

நீதி வழங்குதல் என்ற விஷயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உற்றுர், உறவினர், பந்துமித்திரர் என்ற விஷயங்களில் எதையும் கவனியாமல் யாவருக்கும் நடுக்கண்ட நீதி வழங்குவார்கள். ஹஜ்றத் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் நபிகள்நாயகம் (ஸல்) அவர் களுக்குப் பெரிய தந்தையின் புதல்வராக இருந் ததுமட்டு மில்லாமல், மகளை மணந்த மருக ராகவும் இருந்தார்கள். தவிரவும் அவரது உண்மை, தியாகம், உழைப்பு, அறிவு ஆகியவை களினல் அவர்மீது அதிகப் பிரியமுள்ளவர்க ளாகவு மிருந்தார்கள்.

ஆனல், நீதி நியாயம் என்ற விஷயத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களுக்கும்கூட தயை காட்டிய தில்லை.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மக்காவை வெற்றிக் கொண்டபோது உதுமானுப்னு தல்ஹா என்பவரை அழைத்து பைத்துல்லா வைத் திறக்கும்படிச் செய்தார்கள். இவர் அக் காலத்தில் பைத்துல்லாவின் சாவியை வைத் திருக்கும் பணியில் நியமிக்கப்பெற்றிருந்தார். நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத்துச் செய்வ தற்கு முன்னர் ஒரு முறை கஃபாவிற்குள் செல்ல வேண்டுமென்ற விருப்பமேலீட்டால் இதே உதுமானுப்னு தல்ஹாவிடம் பைத்துல் லாவைத் திறந்து விடும்படி கேட்டார்கள். அப் பொழுது அவர் மறுத்துவிட்டார். அதுசமயம் நாயகம் (ஸல்.) அவர்கள் "இனி ஒரு சமயம் இந் தச் சாவி என் கைவசம் வரும்; அப்பொழுது யான் நினைத்தவரிடம் இந்தச் சாவியைக் கொடுப்பேன்" என்று கூறி இருந்தார்கள். அதற்கு மறுமொழியாக அவர் "அன்றைய தினம் குறைஷியர்கள் அனைவரும் கேவலமாகி அழிந்துவிடுவார்களா? என்று கேட்டார். நாய

கம் (ஸல்.) அவர்கள் "இல்லை! அப்பொழுது அவர்கள் இப்பொழுதிருப்பதைப் பார்க்கினும் அதிக கௌரவமும் மதிப்புமுள்ளவர்களாக இருப்பார்கள்" என்று பதில் கூறினூர்கள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் "அன்று கூறிய இம் முன்னறிவிப்புப்படி இன்றைய தினம் உதுமானுப்னுதல்ஹாவை அழைத்து பைத்துல்லாவைத் திறந்துவிடும்படி கட்டளையிட்டதுடன் அதன் தாக்கோலையும் தங்கள் கைவசம் வைத்துக்கொண்டார்கள். நாயகம் (ஸல்.) அவர்களது சிறிய தந்தையான ஹஜ்றத் அப்பாஸ் (றலி.) அவர்களும், மருகரான ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களும் அந்தச் சாவி தங்களிடம் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனுல், நாயகம் (ஸல்.) அவர்கள், அவர்களது இவ்வேண்டுகோளை மறுத்து "இல்லை, எவருக்கு இது பாத்தியமோ அவரிடம்தான் இது இருந்துவரும்" என்று கூறி உதுமானுப்னு தல்ஹாவினிடமே திரும்பக் கொடுத்து இந்தச் சாவி எப்பொழுதும் உங்களிடமே இருக்கும் என்றும் கூறினூர்கள். உதுமானுப்னுதல்ஹாவும் அவரது குடும்பத்தாரும் இஸ்லாம் மதத்தைத் தழுவி ஸஹாபியாக இருக்கும் பாக்கியத்தையும் பெற்றூர்கள். ஹஜ்றத் உதுமானுப்னுதல்ஹா (றலி.) அவர்கள் சந்ததியில்லாதவராதலின் அவருக்குப் பின் அது அவருடைய சகோதரரான ஹஜ்றத் ஷைபா (றலி.) அவர்களிடம் இருந்துவந்தது. இன்றும்கூட இந்தச் சாவி அவரது குடும்பத்தாரிடமே இருந்துவருகிறது.

பெருமானூர் அவர்களது உறுதியும் துணிவும்

சீர்திருத்தம் செய்தல், பிரசாரம் செய்தல் ஆகிய திருப்பணியைச் செய்வதற்கு உண்மையான உறுதியும், அளவுக்கு மீறிய துணிவும் இருக்கவேண்டியது அவசியமாகும். எவ்விதமான ஆசையூட்டுகையும் பிரசாரகருடைய பரிசுத்தமான எண்ணத்தை விட்டு அவரைத் தடை செய்யக்கூடாது. அவர்கள் அசையாத திடசித்தத்துடன் தங்களது வேலையைச் செய்துகொண்டிருக்கவேண்டும். எத்தனை அபஜயமும் தோல்வியும் ஏற்பட்டாலும் அவர் மனமுடைந்து தளர்ந்துவிடக்கூடாது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இருந்த பல்வேறு நற்குணங்களுடன் இந்தத் தன்மைகளும் மிகப் பரிபூரணமாக அமைந்திருந்தன. அல்லாஹு தஆலாவினிடமிருந்து தம்மீது எந்தக் கடமை சுமத்தப்பட்டிருந்ததோ அந்தக் கடமையை நாயகம் (ஸல்.) அவர்கள் ஆரம்ப முதல் தங்களது இறுதி வாணுள்வரை ஒரே சிரத்தையுடனும் உற்சாகத்துடனும் செய்து வந்தார்கள். மிக மிகப் பலமான எதிர்ப் பிரசாரங்களும், கட்டுப்பாடான தடை முறைகளும் நாயகம் (ஸல்.) அவர்களை திகைக்கச் செய்யவில்லை. தங்களது நல்ல கோரிக்கைகளை நிறைவேற்றும் விஷயத்தில் எவருடைய பழிப்புக்கும் அஞ்சவில்லை. எவருடைய ஏசல்களையும் லக்ஷியம் செய்யவில்லை. எவ்விதமான அயர்வும் நாயகம் (ஸல்.) அவர்களின் உறுதியையும் துணிவையும் மாற்றவில்லை.

காபிர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் "பைத்தியக்காரர்" என்று கூறிவந்தனர். பைத்தியக்காரர் என்றவுடன் ரஸ்தாக்களிலும் தெருக்களிலும் சித்த சுவாதீனமில்லாமல், அறிவு மழுங்கித் திரிதல் என்ற கருத்தில் அவர்கள் இந்தப் பதத்தை உபயோகிக்கவில்லை. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய நற்போதனையானது மிகவும் உன்னதமானது; பெரும் பெரும் அறிவாளிகளும் நுண்ணிய அறிவுள்ளவர்களும்கூடச் சொல்லமுடியாத அரிய விஷயங்களை நாயகம் (ஸல்.) அவர்கள் கூறுகிறூர்கள் என்பதை அந்த வங்காபிர்கள் அறிந்திருந்தனர். ஆனுல், நாயகம் (ஸல்.) அவர்கள் ஒரு காரியார்த்தமாக ஒன்றைக் கூறிவிட்டால் எக்காரணத்தைக்கொண்டும் அதனை விட்டு விலகுவதில்லை என்ற கருத்தில் அவர்களைப் பைத்தியக்காரர் என்று கூறினர்.

மக்கா முஅல்லமாவில் நாயகம் (ஸல்.) அவர்கள் ஆரம்பித்த இவ்வழைப்பின் தொனி மங்கிப்போவதற்குப் பதிலாகவரவர நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிக்கொண்டே இருந்தது. ஆயிரக்கணக்கான நோவினைகளைச் சகித்தார்

கள். கைது செய்துவிடவும், கொலை செய்துவிடவும்கூடத் திட்டம் போடப்பட்டது. பிறந்தகத்தை விட்டுப் பிரிந்தோரிடம் செல்லவும் நேரிட்டது. சகலவிதமான ஆசை வார்த்தைகளும் சொல்லப்பட்டன. அறபி தேசம் முழுவதிலுமுள்ள எல்லா காபிர்களும் நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்த்தனர். இவைகளில் எதுவும் நாயகம் (ஸல்.) அவர்களின் இப்பிரசாரத்தை அழித்துவிட முடியவில்லை.

நாயகம் (ஸல்.) அவர்கள் அற்புதமான பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இக் கஷ்டங்களனைத்தையும் சமாளித்தார்கள். பிறகு மதீனா முனவ்வராவுக்கு வந்தபின் ஹுஜூர் (ஸல்) அவர்களுக்கு முன்னேற்றமுண்டாயிற்று. காபிர்களெல்லாம் யுத்தங்கள் பல செய்து பார்த்து நரகத்திற் காளானார்கள். இறுதியாக நாடெங்கும் நாயகம் (ஸல்.) அவர்களுக்குக் கீழில் அடங்கிற்று. எங்கும் அமைதியும் சமாதானமும் உண்டாயிற்று. ஹுஜூர் (ஸல்.) அவர்களின் இப் பிரசார வேலையில் எவ்வித எதிர்ப்பும் தடையும் இருக்கவில்லை. இவ்விதச் சந்தர்ப்பத்திலும் ஹுஜூர் (ஸல்.) அவர்களது நாவிலிருந்து அதே தொனிதான் வெளிவந்தது. இதுதான் ஹுஜூர் (ஸல்.) அவர்களது வெற்றிகளுக்கு ஆணி வேராக இருந்தது. உலகம் ஒரு புதிய மாறுதலை யடைந்தது. இதன் பலனாக மணி அடித்துக்கொண்டிருந்த இடங்களிலும், லாத்து, உஸ்ஸா என்ற தேவதைகளை வணங்கிக்கொண்டிருந்த இடங்களிலும் "லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்ற கலிமாவின் நாதம் தொனிக்க வாரம்பித்தது. மதுபானமருந்தல், விபசாரம், பகிரங்கமான பாபத் தொழில் ஆகியவைகள் நடந்துகொண்டிருந்த இடத்தில் ஏக தெய்வத்தின் ஏக தெய்வ வணக்கம் ஏற்பட்டு, 'தக்வா' என்னும் பயபக்தி பரவிற்று. இவையனைத்தும் ஹுஜூர் (ஸல்) அவர்களது உறுதி, துணிவு, மனந்தளராமை ஆகியவைகளாலேயே நிகழ்ந்தன. இன்னும் இறுதி காலம்வரை இவ்விதமாகவே இருந்துவரும்.

ஆகவே, ஏக நாயகனின் பரிசுத்த வழியில் எவ்விதமான கஷ்டமும் சங்கடமும் நேர்ந்த போதிலும் அதனைக் கண்டு முஸ்லிம்கள் அஞ்ச வேண்டியதில்லை, நடுங்கவேண்டியதில்லை. மிகவும் பொறுமையுடன் சகிக்க வேண்டும். ஹுஜூர் (ஸல்.) அவர்கள், ஆரம்பித்த நல்ல காரியம் சம்மந்தமாக விளைந்த சகல கஷ்டங்களையும் சகித்து, அக்காரியம் பூர்த்தியடையும் வரை விடா முயற்சியாக இருந்ததை நாம் முன்மாதிரியாகக் கொண்டு, அவர்களது "உஸ்வயே ஹஸனா"வை பூரணமாகப் பின்பற்ற வேண்டும். அப்பால் சகல வெற்றிகளும் முன்னேற்றங்களும் நமது கால்களினடியில் தானிருக்கின்றன என்பதை உணர்ந்துகொள்வோமாக.

பெருமானாரின் புத்திரவாஞ்சை.

மனிதராகப் பிறந்த எவருக்குத்தான் புத்திர வாஞ்சை இருக்கமாட்டாது. மக்கள் பால் அபிமானமும் பிரியமும் கொள்ளுதல் இயற்கையிலேயே மனித சுபாவத்தில் அமைந்திருக்கிறது. நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு தஆலாவின் திருத்தூதராக இருந்தாலும் மனிதராகப் பிறந்தவர்களன்றோ? அவர்களிடம் புத்திரவாஞ்சை இருக்காதென்று எவரும் கருதவேண்டியதில்லை. நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மக்களிடம் அபிமானமும் பிரியமும் கொண்டிருந்தார்கள். மேலும், இவ்வபிமானமும் பிரியமும் மற்றெவரையும்விட அதிகமாகவே இருந்தது என்றுங் கூறலாம். அபிமானம் கொண்டிருந்தது மட்டுமில்லாமல் அதனைக் கிரியாம்சையிலும் காட்டினார்கள். என்றாலும், பொது ஜனங்கள் தங்கள் புத்திர புத்திரிகளிடம் காட்டும் அன்பைப்போல் காட்டவில்லை. அவர்களது சகல காரியங்களும் அல்லாஹு தஆலாவுக்காகவே, அவனது பொருத்தத்திற்காக அவனது கட்டளைக்குட்பட்டே இருந்ததுபோல், மக்கள்பால் அவர்கள் காட்டிய வாஞ்சையும் அபிமானமும் அவ்வல்லோனுக்காகவே இருந்தது.

நாயகம் (ஸல்.) அவர்களது புத்திரர்கள் அனைவரும் குழந்தைப் பருவத்திலேயே இவ்வுலகைவிட்டுச் சென்றார்கள். அன்னோரின் மறு உலகப்பிரயாணத்தின் போழ்து நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தங்கள் புதல்வர்கள் பாலுள்ள வாஞ்சை வெளியாயிற்று.

சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களது புதல்வரான ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் வபாத்தானபோது நாயகம் (ஸல்.) அவர்களது திருநேத்திரங்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. ஆனால், இவ்விதமான துக்கத்தின் போழ்தும் அவர்கள் நபித்துவத்தின் அந்தஸ்தை வெளிப்படுத்தவே செய்தார்கள். அதாவது ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களை நல்லடக்கம்செய்த போது சூரிய கிரணம் உண்டாயிற்று. நபியவர்களின் புதல்வர் என்ற முறையில் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களுக்கு மிகுந்த மகத்துவமுண்டல்லவா? அந்த மகத்துவத்தை யுத்தேசித்துப் பொதுஜனங்கள் "ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்களது வபாத்தினால் கிரகங்களுங்கூடத் துக்கப்படுகின்றன." என்று கூறவாரம்பித்தார்கள். இதனை நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் உணர்ந்து, இவ்விதமான எண்ணங்களை வளரவிடக்கூடாது, இவைகளை முளையிலேயே கிள்ளி எரிந்து விடவேண்டுமென்று முடிவு செய்து "ஒருவடைய மரணத்திற்காகவோ அல்லது ஜீவியத்திற்காகவோ சூரியசந்திர கிரணங்களுண்டாகுவதில்லை; இவ்விரண்டும் அல்லாஹுதஆலாவின் திருஷ்டாந்தங்களில் நின்றும் இரண்டு திருஷ்டாந்தங்களாகும்" என்று கூறி அவ்வெண்ணத்தை அகற்றிவிட்டார்கள்.

* * *

நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தங்கள் புத்திரபுத்திரிகள் மீது மிகவும் பிரியம் இருந்தபோதினும் ஹஜ்றத் காத்தூனே ஜன்னத் பீபீ பாத்திமா (றலி.) அவர்கள் மீதிலும், அவரது புதல்வர்களான இமாப் ஹஸன் (றலி.) இமாம் ஹுஸைன் (றலி.) ஆகியவர்கள் மீதிலும் அதிகமான அன்பும் பிரியமும் இருந்தது. ஆனாலும், அந்த அன்பும் பிரியமும் நபித்துவ அந்தஸ்திற்கு உட்பட்டதாகவே இருந்ததேயல்லாமல் மற்றஜனங்களது அன்பைப்போலிருக்கவில்லை. நாயகம் (ஸல்.) அவர்களது எந்தக்காரியமும் ரஹ்மானின் கட்டளைக்குப் புறம்பாக இருக்கவில்லை.

ஒருமுறை நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் செல்வப்புதல்வி ஹஜ்றத் காத்தூனே ஜன்னத் பீபீ பாத்திமத்துஜ்ஜஹ்றா (றலி.) அவர்களது இல்லம் சென்றார்கள். அதுபொழுது ஹஜ்றத்ஸெய்யிதா பாத்திமா (றலி.) அவர்கள் தமது கழுத்தில் ஒரு தங்காபரணம் அணிந்திருக்கக் கண்டார்கள். இவ்வாபரணத்தை அவரது மணாளர் ஹஜ்றத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு விலைக்கு வாங்கிக்கொடுத்திருந்தார்கள். இவ்வாபரணம் தமது அருமைப் புதல்வியின் கழுத்திலிருப்பதைப்பார்த்த எந்தத் தகப்பனும் சந்தோஷமடையாமலிரார். தன்னுடைய புத்திரியை ஆபறணமணியச் செய்து கண்டுகளிக்காத தந்தை யார்தானிருக்கமுடியும்? நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களோ அவ்வாபரணத்தைக் கண்டு சந்தோஷங்கொண்டார்களா? மகிழ்ச்சியடைந்தார்களா? அன்று! அன்று! தங்கள் புதல்வியை நோக்கினார்கள்! அழைத்தார்கள் "பாத்திமா! முஹம்மதுடைய புதல்வி பெருமைக்கார பிரபுக்களைப்போல் ஆபரணங்களை அணிந்திருக்கின்றனள் என்று ஜனங்கள் சொல்லமாட்டார்களா?" என்று கூறிவிட்டுத் திருப்பினார்கள்.

ஹஜ்றத் காத்தூனே ஜன்னத் இறுதி நபியின் புதல்வியன்றோ? தமது தந்தையாம் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய இவ்வறவுரையினுள் அமைந்திருக்கும் உட்கருத்துக்களை உணர்ந்தார். இவ்வுரைகளைக் கேட்டதும் தான் தாமதம், அவ்வணிகலன் கிரயம் செய்யப்பட்டது. அதிற்கிடைத்த தொகைக்கு ஒரு அடிமை விலைக்கு வாங்கப்பட்டு உரிமைவிடப்பட்டது. இச்சமாச்சாரம் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் தெரியவந்தபோது தமது அருமைப் புதல்வியின் இச்செய்கைக்காக மிகவும் ஆனந்தமடைந்தார்கள்.

அமானிதம்

ஒரு மனிதனுடைய தன்மை, ஒருவன் யோக்கியனா அயோக்கியனா? என்பதை உறைசிப்பார்ப்பதற்கு அமானிதத்தைப் பார்க்கினும் சிறந்த உறைகள் வேறொன்றுமிருக்கமுடியாது. இந்த உறை கல்லில் சரியான தங்கம் என்று தேர்ந்தவனே உண்மை மூமினாகவும் முஸ்லிமாகவும் இருக்கமுடியும்.

இவ்விஷயத்தில் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் எவ்வளவு உறுதியாக இருந்தார்கள் என்ற

விபரம் அவர்களது ஜீவிய சரித்திரத்தின் ஒவ்வொரு இதழிலும் நன்கு தெரியவரும். நாயகம் (ஸல்.) அவர்களிடம் அமானிதமாக வைக்கப்பட்ட பொருள்களையும், அவர்கள்மீதேற்பட்டுள்ள கடமைகளையும் மிகச்சிறந்த முறையில் நிறைவேற்றியதன் காரணமாக நாயகம் (ஸல்.) அவர்கள் எல்லா ஜனங்களாலும் கொண்டாடப்பட்டும் போற்றப்பட்டும் வந்தார்கள். கஷ்டமடைந்தோர், சஞ்சல மடைந்தோர், அநீதி செய்யப்பட்டோர், அவதிப்படுவோர் ஆகியவர்களுக்கு நாயகம் (ஸல்.) அவர்கள் அபயஸ்தலமாக இருந்தார்கள். அனாதைகள், விதவைகள் ஆகியவர்களைப் போஷிப்பது அவர்கள் பொறுப்பிலிருந்தது. ஏழைகளும், வறிஞர்களும் நாயகம் (ஸல்.) அவர்களது முகத்தையே நோக்கி நின்றனர். நாதியற்றோர், நோயாளிகள் ஆகியவர்களுக்குப் புகலிடம் அவர்களேயாகும்.

பிரபுவானாலும் சரி, பணக்காரனானாலுஞ் சரி, தலைவனானாலும் சரி, அதிகாரியானாலும் சரி அனைவரும் அவர்கள்மீது பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர். அத்தேசத்து ஜனங்கள் நாயகம் (ஸல்.) அவர்களிடமிருந்த இப் பெருந்தன்மையைக் கண்டு அவர்கள்பால் அதிகம் அன்புகொண்டு, தங்களாலளிக்கக்கூடிய மிகவும் உன்னதமான கௌரவப் பட்டத்தை அளித்திருந்தார்கள். இச்சிறந்த கௌரவப்பட்டத்தை அந்த ஜனங்களினுள்ள எவருக்கும் அவர்கள் ஏகமனதாகக் கொடுத்ததே இல்லை. நாயகம் (ஸல்.) அவர்கள் எங்கு சென்றாலும், எப்பக்கம் திரும்பினாலும் எல்லா ஜனங்களும் "அல்அமீன்-அல்அமீன்" என்றே அழைத்தார்கள். அவர்கள் எந்த ஜனங்களின் மத்தியில் வளர்ந்து வந்தார்களோ அந்த ஜனங்களே அவர்களிடமுள்ள இச் சத்குணத்தை மெச்சிக்கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தின்பாலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பாலும் அபூஜஹ்லைப் பார்க்கினும் அதிகப் பகைகொண்ட விரோதி வேறெவரும் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட கடும் விரோதியும் கூட அவர்களது இச்சிறந்த தன்மையை ஒருபோதும் மறுத்ததில்லை. ஒரு முறை அபூஜஹ்ல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடம் வந்து "முஹம்மதே! யானும்மைப் பொய்யர் என்று கருதவில்லை. ஆனால், நீர் போதிக்கும் விஷயம் மாத்திரம் எனது மனத்தில் பதியவில்லை" என்று கூறினான் என்றால், நாயகம் (ஸல்.) அவர்களுக்கிருந்த இச்சிறந்த தன்மைக்கு வேறு உதாரணமும் வேண்டுமோ?

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபிப் பதவியை அடைந்து மக்காவாசிகளிடமும் அக்கம் பக்கத்தாரிடமும் இஸ்லாம் மதப் பிரசாரத்தைச் செய்ததன் நிமித்தமாக முஷ்ரிக்குகளனைவரும் அவர்களைப் பகைத்தனர். பகைத்தது மட்டுமில்லாமல் எங்கெந்த வகையில் முஸ்லிம்களுக்கும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் கஷ்டத்தையும் தொந்தரையையும் விளைவிக்க முடியுமோ அவையனைத்தையும் குறைவறச் செய்தார்கள். இவர்களது தொந்தரையைச் சகித்துக்கொள்ள இயலாதவர்கள் அபிசீனியா போன்ற கிறிஸ்துவ நாட்டிற்கேனும் சென்று தங்கள் சத்திய இஸ்லாம் அறநெறிப்படி நடந்துகொள்ள நாயகம் (ஸல்.) அவர்கள் அனுமதியும் அளித்தார்கள். அம்மட்டுடன் நில்லாது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையே வேலை தீர்த்துவிட வேண்டும் என்று முஷ்ரிக்குகள் முடிவு செய்து அதற்கான முயற்சியும் செய்தனர். இதன்பலனாக இறைவன் கட்டளைப்படி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும் முஸ்லிம்களிற் பெரும்பாலரும் மக்காவை ஹிஜ்றத்துச் செய்து மதீனாவிற்கு குடியேறவும் செய்தனர். இவ்விதமாகவெல்லாம் அடியடித்தொறும் இடர் செய்த அந்த முஷ்ரிக்குகள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களிடமே தங்களது பொருள்களை அமானிதமாகக் கொடுத்துவைத்தார்கள். தங்களால் சொல்லொணாத் துன்பத்திற்குட்படுத்தப்பட்ட நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களது பணத்தை விழுங்கிவிடக் கூடுமோவென்று அவர்கள் சந்தேகம்கூடக் கொள்ளவில்லை. இவர்கள் வைத்த இந்த நம்பிக்கைக்குத் தகுதியாகவே நாயகம் (ஸல்.) அவர்களும் நடந்துகொண்டார்கள். மக்காவில் வசித்துவந்த காலத்தில் அவ்வமானிதப் பொருள்களைத் தாங்களே காப்பாற்றி வைத்திருந்தார்கள். பிறகு ஹிஜ்றத்துச் செய்யும்படி இறைவன் கட்டளை பிறந்த போதும்கூட தங்கள்உயிரைக்கொள்ளைகொள்ள முயன்ற அவ்வஞ்சினத்தோரின் பொருள்களை எடுத்துக்கொண்டு மதீனமாநகரம் வந்துவிட நாயகம். அவர்கள் நினைத்தார்கள் என்றா கருதுகிறீர்கள். அப்படி நினைக்கவே இல்லை. தங்களிடமிருந்த அமானிதப் பொருள்களத்தனையையும் தங்களது பெரிய தந்தையின்புதல்வரும் தங்கள் மருகருமான ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களிடம் கொடுத்து, அவைகளனைத்தையும் உரியவர்களிடம் கொடுத்துவரும்படி ஆக்ஞாபித்துவிட்டு மதீனமாநகரம் புறப்பட்டார்கள்

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபிப் பதவியை அடையும் முன்பே தங்கள் சமூகத்தாரால் இத்துணை நம்பிக்கைக்கு உரியவராக இருந்திருப்பின் அவர்கள் எவ்வளவு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது வாசகர்களுக்கு நன்கு புலப்படாமற் போகாது.

இஸ்லாமும் அதன் ஸ்தாபகரும்

தென்னிந்திய ஹிந்திப்பிரசார சபையின் 5-வது வருஷாந்திரப் பட்டமளிப்பு விழாவில் தலைமை வகித்த ஸ்ரீ ஜத்பண்டிட் சுந்தரலால் அவர்கள் செய்த முடிவுரைப்பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது. (ப. ர்.)

இன்றைக்கு 13 நூற்றுண்டுகளுக்கு முன்னர் ஆசியாக் கண்டத்திலுள்ள அறபிதேசத்தில் இஸ்லாம் பிறந்தது. இஸ்லாம் மதத்தையும் முஹம்மதுசாகிப் (ஸல்) அவர்களையும் சரிவர உணர்ந்து கொள்ளவேண்டுமாயின் அக்காலத்திலுள்ள அறபிகளின் நிலைமையை அறிந்து கொள்ளுவது அவசியமாகும். அக்காலத்தில் அறபி ஜனங்கள் அற்பத்தனம், மூட நம்பிக்கைகள், சந்தேகங்கள், கெட்ட செய்கைகள் முதலியவைகளில் மூழ்கி இருந்தனர். அவர்களில் எவ்விதத்திலும் ஒற்றுமை, ஐக்கியம் என்பவைகளில்லா திருந்தன. உள்நாட்டு கலகங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அத்தேசத்தின் வடபாகம் உரோமச்சக்கிரவர்த்திகளினுடையவும், கிழக்கு பாகத்தில் ஈரான் தேசத்தரசர்களினுடையவும், தெற்கிலும் மேற்கிலுமுள்ள பெரும்பாகம் அபிசினியாவின் கிறிஸ்துவஅரசர்களினுடையவும் ஆதிக்கத்தின் கீழிருந்தது. நடுவிலுள்ள சிலபாகம் மட்டிலும்தான் பெயரளவில் சுயேச்சையுள்ளதாக இருந்ததெனினும் அதனையும்கூடத் தங்கள் வசப்படுத்திக்கொள்ள உரோமர்களும் ஈரானியரும் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். இவ்வாறுன நிலைமையிலுள்ள தேசத்தில் தான் 1365 வருஷங்களுக்கு முன்னர் ஹஜ்றத் முஹம்மது சாகிப் (ஸல்) ஜனனமானுர்.

ஹஜ்றத் முகம்மது சாகிப் (ஸல்) அவர்களது முயற்சிகளையும் அவரது விருத்தாந்தத்தையும் பற்றி நான் இதர சரித்திரக்காரர்கள் கூறுவதையே இங்கு எடுத்துக் கூறவிரும்புகிறேன். ஹஜ்றத் முஹம்மது சாகிப் (ஸல்) அவர்களது முயற்சியையும், வெற்றியையும் பற்றி ரெவரென்ட் டபிள்யூ, ஆர்டபிள்யு, ஸ்டியூன்ஸ் என்பவர் தமது "கிருஸ்டியானிட்டி அண்டு இஸ்லாம்—திபைபிள் அண்டு தி குர்ஆன்" என்ற புத்தகத்தில் பின் வருமாறு கூறி இருக்கிறுர்:—

"முஹம்மது சாகிபுடைய காலத்தில் அறப் தேசத்தில் மிகவும் அதிகமாகப் பரவி இருந்ததும், திருகுர் ஆனில் மிகவும் பலமாக இகழ்ந்து கூறப்பட்டுத் தடை செய்யப்பட்டிருப்பதுமான கெடுதல்களான மதுபானமருந்தல், வியபிசாரம், கணக்கற்ற ஸ்திரீகளை மணந்து கொள்ளல், விவாக மில்லாத சிறுமிகளைக் கொலை செய்தல், சூதாடல், வட்டி வாங்குதல், கொள்ளையிடல், வஞ்சனை சூனியம் பில்லி முதலியவைகளில் குருட்டுத்தனமான நம்பிக்கை ஆகியவைகளாகும். ஹஜ்ரத் முஹம்மது சாகிப் (ஸல்) அவர்களது முயற்சியால் இத்திய காரியங்களிற் சில அடியுடன் இல்லாதொழிந்தன. சிலகாரியங்கள் மிகவும் குறைந்து போயின. இதனுல் அறபியர்களின் ஒழுக்கங்களில் அதிக முன்னேற்ற மேற்பட்டது. இவருடைய ஊக்கத்திற்கும் செல்வாக்கிற்கும் இது மிகவும் மதிக்கத்தக்க அத்தாட்சி யாகும். சிறுமிகளைக் கொலைசெய்தல், மதுபானம் அருந்துதல் ஆகிய இரண்டும் அடியுடன் ஒழிந்துபோனது முஹம்மது சாகிப் (ஸல்) அவர்களுடைய வேலையில் மிகவும் அற்புதமான வெற்றியாகும்.

ஹஜ்றத் முஹம்மது சாகிப் (ஸல்) தமது சமூகத்திற்கு மிகவும் பெரிய பிரயோஜனம் செய்தார். எவ்விதமான அரசாங்கமோ, யுக்தமான மதக்கொள்கையோ, சிறந்த ஒழுக்கமோ இல்லாத தேசத்தில் அவர் பிறந்தார். ஆனுலும், இம்மூன்று காரியங்களையும் அங்கு ஸ்தா

பித்தார். அவர் தமது மதிநுட்பத்தால் தமது தேசத்தில் வாழும் மாந்தருக்கு ஏககாலத்தில் இம்மூன்றையும் ஏற்படுத்திவிட்டார். அநேகம் தனித்தனிக் கோத்திரங்கள் இருந்த இடத்தில் ஒரு சமூகத்தை யுண்டாக்கிவிட்டார். எண்ணமுடியாத தேவிகள், தேவர்கள், தெய்வங்கள் என்ற குருட்டு நம்பிக்கை இருந்த இடத்தில் கருணையும், வல்லமையும், சர்வ அறிவுமுள்ள ஏக ஆண்டகை ஒருவன் உளன் என்ற உறுதி உண்டாகும்படிச் செய்து விட்டார். பரமாத்மா நம்மைப் பார்க்கிறார்; நமது நன்மை தீமையான சகல காரியங்களுக்கும் தக்க பலனைத் தருகிறார் என்ற விஷயத்தை அவர்ஜனங்களிடம் காண்பித்தார். இந்த உறுதியின்படி ஜனங்கள் நேர்மையான வாழ்க்கை நடத்தும் முறையையும் காட்டிக்கொடுத்தார்.

அக்காலத்தில் துண்டு துண்டாகப் பிரிந்திருந்த அறபி சமூகத்தாரை ஒரு லக்ஷியத்தில் ஒன்றுபட்ட நேசத்தில் ஐக்கியப்படுத்தி உண்மையான விதத்தில் ஐக்கிய சமூகமாக ஆக்குவதும், மிகவும் குறுகிய காலத்திற்குள் அவர்களை ரோம், ஈரான் போன்ற பலமான அரசாங்கங்களின் பஞ்சாவிலிருந்து விடுதலை செய்ததும் உலக சரித்திரத்தில் ஒப்பற்ற தனிப்பெரும் ஒரே சம்பவமாகும் என்பதிற் சந்தேகமே இல்லை. இந்த ஒரு சம்பவம் மாத்திரமே ஹஜ்றத் முஹம்மது சாகிப் (ஸல்.) அவர்களை உலகத்திலுள்ள மிகமிகப் பெரிய ஜனங்களின் மத்தியில் இடம் ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் போதுமானதாக இருக்கிறது. ஆனால், முஹம்மது சாகிப் (ஸல்.) அவர்களது மகத்துவம் இதனைப் பார்க்கினும் எவ்வளவோ அதிகமானது.''

மேஜர் ஆர்தர் லியோனார்டு என்பவர் தமது "இஸ்லாம் ஹெர் மாரல் அண்டு ஸ்பிரிச்சுவல் வால்யூம்'' என்ற புத்தகத்தில் பின் வருமாறு எழுதியுள்ளார்.

"ஹஜ்றத் முஹம்மது சாகிப் (ஸல்.) அவர்கள், ஒவ்வொரு காலத்திலும் மிக மிக ஆழமான பொருள்களில் மிகமிகப் பெரியதாகவும், உண்மையிலும் உண்மையான அபிமானம் கொண்ட ஆத்மசக்தி யுள்ளவர்களில் ஒருவராகவும்இருந்தார். அவர் மிகப் பெரிய மனிததத்துவமுள்ளவராக இருந்ததுமட்டுமில்லாமல்உலகில் மிகப் பெரிய உண்மையுள்ளவர்களாகப் பிறக்கும் மனிதர்களில் ஒருவராகவுமிருந்தார். அவர் நபீ என்ற முறையில் பெரியவராக இருப்பது மல்லாமல், தேசாபிமானி, அரசாட்சி செய்பவர் என்ற முறையிலும் பெரியவராக இருந்தார். அவரிடத்தில் இம்மை மறுமை ஆகிய இரண்டினுடைய உணர்ச்சிகளும் ததும்பிக் கொண்டிருந்தன. அவர் ஒரு பெரிய தேசத்தை சீர்திருத்தி ஒன்றுபடுத்தினார். மிகப்பெரிய அரசாங்கத்திற்கு அஸ்திவாரமிட்டார். இவ்விரண்டையும் காட்டிலும் பிரம்மாண்டமான ஒரு மதத்திற்கும் அஸ்திவாரமிட்டார். இனிமேல் எப்பொழுதேனும் ஒருதலைப்பக்ஷமான சமூக உணர்ச்சி குன்றி, விசாலமான மனிதத்தில மதத்தை ஜனங்கள் ஒப்புக்கொள்ளும் போது ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்கள் இப்பொழுதிருப்பதைப் பார்க்கினும் எத்தனையோ மடங்கு அதிகமான மகத்துவத்துடன் ஜனங்களால் கவனிக்கப்படுவார். வாஸ்தவத்தில் ஹஜ்றத் முஹம்மது சாகிப் (ஸல்.) அவர்கள் பெரிய மனிதர்களில் மிகப்பெரிய மகத்துவமுள்ளவராக இருந்தார்.''

ஹஜ்றத் முஹம்மது சாகிபுடைய சரித்திரத்தையும் அவருடைய உபதேசங்களையும் அவராற்றிய அருந் தொண்டுகளையும் விபரித்துக் கூறுவதற்கு எனக்கு நேரம் போதாது. முஹம்மது ஸாகிப் சம்மந்தமாகச் செய்யப்பட்டது போல் அவ்வளவு மகத்தான பொய்யும் புரட்டுகளும் இவ்வுலகில் வேறெந்தப் பெரியார்மீதிலும் செய்யப்பட்டதில்லை. இதனைப்பற்றி இந்த இடத்தில் கொஞ்சம் சொல்வதும் வீண் என்று நினைக்கிறேன். ஒரு ஹிந்திப் புத்தகத்தில் நான் ஒரு நீண்ட ஜாப்தாவைப் படித்தேன். அதில் ஹஜ்றத் முஹம்மது ஸாஹிப் இவ்வுலகைவிட்டு மாறும்போது விட்டுச் சென்ற பொருள்களின் விபரம் கூறப்பட்டிருந்தது. அவர் விட்டுச்சென்ற பொருள்களில் சிக்ரட் டப்பா ஒன்றும், ஒரு ஆசனமும் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. ஹஜ்றத் முஹம்மது ஸாஹிப் தமது வாணாள் முழுவதிலும் ஒருமுறைகூட ஆசனத்தில் அமர்ந்ததில்லை. அவர் இருந்த காலத்தில் அறபி தேசத்தின் எந்த இடத்திலும் புகையிலை விவசாயம் செய்யப்பட்டதுமில்லை என்ற உண்மையை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது ஜீவியம் கஷ்டங்களிலும் தொந்தரைகளிலுமே கழிந்தது. அவர் தமது வயதின் கடைசிப் பத்து வருஷ காலத்தில் அறப் முழுவதன் மீதும் ஆட்சிபுரிந்து, சுயேச்சையைப் பெற்றார். அப்படி இருந்தும் அந்தப் பத்து

வருஷ காலத்திலுங்கூட அவர் மிகவும் சாமான்யமாகவும், எப்பொழுதும் வணக்கம் புரிபவராகவும் தமது வாழுளைக் கழித்தார். தேசத்தின் வரும்படியிலிருந்தோ அல்லது ஜக்காத்திலிருந்தோ ஒரு காசையேனும் எடுத்துக் கொள்வது தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் ஹறாம் என்று மதித்தார். அவருடைய ஜீவியத்தின் பெரும்பாலான நாட்களைப் பட்டினியாகவே கழித்தார். அவர் அறப் தேசத்தில் அரசாங்கம் செலுத்திக்கொண்டிருந்த காலத்திலும்கூட மூன்றுநாள் தொடர்ச்சியாக வயிறு நிறம்ப ஆகாரம் அருந்தவில்லை. அவர் தமது வஸ்திரத்தைத் தாமே தைத்துக்கொள்வார். தமது பாதரக்ஷைகளுக்குத் தாமே வார் போட்டுக்கொள்வார். தமது ஒட்டகையைத் தாமே மேய்த்துவிடுவார். தமதுஆட்டில் தாமாகவே பால் கறந்துகொள்வார். தமது அறையைத் தாமே கூட்டிக்கொள்வார். வெற்றரையில் அல்லது பேரீத்தமரக் தடுக்கில் நித்திரை செய்வார். ஒருமுறை அவர் சுகவீனமாக இருந்தபோது அவரது முதுகில் கயிற்றின் தழும்பு பட்டிருப்பதைப் பார்த்த ஒருவர் மெத்தை கொண்டுவந்துதருவதாக உத்தரவுகேட்டதற்கு அவர் "நான் சுகத்தை அடைவதற்காகப் பிறக்கவில்லை" என்று கூறிவிட்டார்.

ஹஜ்றத் முஹம்மது ஸாஹிபுடைய மத சம்மந்தமான உபதேசங்களின் சாரம் இரண்டு வாக்கியங்களுக்குள் அடங்கி இருக்கிறது. ஒன்று அல்லாஹ்வின்மீது நம்பிக்கை வையுங்கள், மற்றொன்று நல்ல காரியம் செய்யுங்கள் என்பனயாகும்.

அவர்கள், அநாகரீகமானவர்களாகவும் துர்நடத்தையுள்ளவர்களாகவும் இருந்த அறபியர்களை நாகரீகமுள்ளவர்களாகவும் நன்னடத்தையுள்ளவர்களாகவும் ஆக்கினுர்கள். எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டே இருத்தல் என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்த அறபியரிடம் புத்துயிரை ஊதினர். அதன்பலனுக அவர்கள் தங்கள் தேசத்திற்குள் மட்டிலுமில்லாமல், ஈரானிய, ரோமன் ஏகாதிபத்தியங்களையும்கூட எதிர்த்து, சுயேச்சையடைந்த தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தினர். அவருக்குப் பிறகு 80-வருஷங்களுக்குள் கிழக்கே சீனுவின் எல்லைப்புறத்திலிருந்து மேற்கே ஸ்பெயின் வரையில் மிகவும் விஸ்தீரணமான அரசாங்கத்தை ஏற்படுத்திவிட்டனர். இது கிட்டத்தட்ட ஓராயிரம் வருஷம் வரை இருந்தது. மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா, ஐரோப்பாவில் பாதி ஆகியவைகளின்மீது அறபியர்களின் அதிகாரமிருந்தது.

இஸ்லாம் பரவியதெப்படி?

பண்டிட் சுந்தரலால்

இஸ்லாம் மதம் பரவியது சம்மந்தமாக அநேகருடைய இருதயங்களில் வருந்தத்தக்க விதமான தப்பபிப்ராயமிருந்து வருகிறது. D. W. அர்னுல்டு என்பவர் தமது "தி பிரீச்சிங்ஸ் ஆப் இஸ்லாம்" என்னும் புத்தகத்தில் உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் இஸ்லாத்தின் பிரசாரத்திற்கும், அது பரவியதற்கும் காரணம் என்னவென்பதைப்பற்றி எழுதியுள்ளார். ஸர். யதுநாத சர்க்காரும் இவ்விஷயம் சம்பந்தமாகக் கொஞ்சம் எழுதியுள்ளார். டாக்டர் தாராசந்த் என்பவர் தம்முடைய "தி இன்புளுயன்ஸ் ஆப் இஸ்லாம் அண்டு இண்டியன் கல்ச்சர்" என்ற புத்தகத்தில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் இஸ்லாம் பரவியதற்குரிய காரணங்களையும், அது பிரசாரம் செய்யப்பட்ட முறைகளையும் பற்றி எழுதியுள்ளார். இதர பண்டிதர்களும் இவ்விஷயமாக விசேஷ சிரத்தையெடுத்து எழுதி இருக்கிறார்கள். இவைகளிலிருந்து இந்தியாவின் ஒவ்வொரு பாகத்தினுடைய நிலைமையும் விபரமாகத் தெரியவருகிறது. இஸ்லாமிய அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னர்தான் இஸ்லாம் மதம் பிரதேசங்களில் பரவிற்று. இஸ்லாமிய அரசாங்கம் ஏற்பட்டபின் பரவிற்றென்று வைத்துக்கொண்டாலும் இஸ்லாம் பரவிய அக்காலத்தில் இஸ்லாமிய அரசாங்கம் மிகப் பலஹீனமாகவே இருந்தது. பிறகு, இஸ்லாமிய அரசாங்கம் பலமடைந்தவுடன் இஸ்லாம் மதம்

பரவுவதும் நின்றுவிட்டது. அப்பால் அது பெரிதாகவில்லை. இந்தியாவில் இஸ்லாம் மதம் தெற்கிலிருந்துதான் பரவ ஆரம்பித்தது. வட இந்தியாவிலிருந்து பரவவில்லை. இஸ்லாம் மதம் தெற்கில் பரவிய அக்காலத்தில் இங்கு இஸ்லாமிய அரசாங்கத்தின் வாடைகூட இல்லை. பல நூற்றாண்டுகள் வரை முஸ்லிம் அரசாங்கத்தின் மத்தியஸ்தலமிருந்துகொண்டிருந்த டில்லி, ஆக்ரா ஜில்லாக்களில் எப்பொழுதுமே முக்கால்வாசி ஜனத்தொகை ஹிந்துக்களுடையதாக இருந்துவந்திருக்கிறது. இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது. இவ் விபரங்களைப்பற்றி விபரமாகக் கூறுவதற்கு எனக்கு நேரமில்லை. ஆனால், பலவந்தமாக இஸ்லாத்தில் சேர்த்ததாகச் சொல்லப்படும் கதைகள் பல இடங்களில் மிகப்பிரபல்யமாக ஜனங்களிடை இருந்துவருகின்றன. இவைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு மடங்கு குயுக்தியால் உண்டுபண்ணப்பட்ட கதைகளாகும். இவைகளனைத்தையும் உண்மை என்றே ஒப்புக்கொள்வதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின் இந்தியாவில் வாழுகிற மக்கள் அனைவரும் இஸ்லாமிய தர்மத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்களா? என்று வினவுகின்றேன். இவர்கள் பல ஆயிரம் பேருக்கு ஒருவர்கூட பலவந்தம் செய்த காரணத்திற்காக இஸ்லாம் மதத்தைத் தழுவவில்லை. ஆரம்ப நூற்றாண்டுகளில் ஹிந்துக்களிலுள்ள தாழ்ந்த வகுப்பினர் பெருந் தொகையினராக இஸ்லாத்தைத் தழுவினர். இவர்கள் இப்படி இஸ்லாம் மதம் தழுவியதன் காரணம் மிகத் தெளிவாக இருக்கிறது. ஒரே அல்லாஹ்வும், ஒரே றஸூலும்தான் இஸ்லாத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பல தேவிகளும் தேவர்களும் இஸ்லாத்திலில்லை. மனிதனுக்கு மனிதன் சமமானவன் என்ற சட்டம் மிகச் சாமான்யமாகவும் எழிய முறையிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்தவர் ஒருவருமில்லை, தாழ்ந்தவர் எவரும் இல்லை, அல்லாஹ்வுக்கும் அவனது அடியார்களுக்குமிடையில் எந்தப் பிராமணனும் இருக்கவேண்டிய அவசியமில்லை என்ற சட்டங்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. மதத்தின் பார்வையில் பணக்காரனும், ஏழையும், அரசனும், ஆண்டியும், படித்தவனும் பாமரனும் ஒன்றுபோலவே காணப்படுகின்றனர். ஆனால், ஹிந்து மதத்திலோ அநேகம் தேவிகளும் தேவர்களுமிருக்கின்றனர். பல சாஸ்திரங்களை எழுதிய ஆசிரியர்கள், மத சம்மந்தமான மிகவும் சிக்கலான சட்டங்கள், வர்ணாசிரம தர்மம், உயர்ந்தவர், பஞ்சமர் என்ற பாகுபாடு, பிராமணனைத் தவிர வேறு யாரும் மார்க்க அதிகாரியாக முடியாது என்ற விஷயங்களெல்லாம் நிறம்ப இருக்கின்றன. இதுமட்டுமா? ஒரு தர்மத்தை ஒப்புக்கொண்டிருப்பவர்களுக்குள்ளாகவே இவ்விதமான பல பாகுபாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி நான் அதிகம் சொல்வதற்கு அவசியமில்லை.

எட்டாவது நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாவது நூற்றாண்டுவரையுள்ள ஹிந்துக்களின் மதக்கொள்கைகளையும் சமூக நிலைமையையும் நாம் சரியாகக் கவனித்து பார்ப்போமாயின், இந்தியாவில் இஸ்லாம் பரவுதற்கு ஏற்ற காலம் இதுதான் என்பதையும், பன்னிரண்டாவது நூற்றாண்டிற்குப் பின்னருள்ள காலம் அல்லவென்பதையும் தெரிந்துகொள்வோம். முஸ்லிம் பக்கீர்களின் ஜிவிய சரித்திரங்களைப் படித்துப்பாருங்கள். அக்காலத்தில் இந்த தர்வேஷ்கள் இந்தியாவெங்கும் பரவி இருந்தனர். இவர்களுக்கு ஹிந்துராஜாக்களின் தர்பார்களில் மிகவும் மரியாதைகள் செலுத்தப்பட்டு வந்தன. இவ்விஷயங்களை எல்லாம் நாம் கவனித்துப் பார்ப்போமாயின் இஸ்லாம் பரவிய முறையும் காரணமும் நமக்கு பளிங்குபோல் பளிச்சென்று தெரியவரும்.

இந்தக்காலத்தில் நிகழ்ந்த விஷயங்களையும் முழுச் சரித்திரங்களையும் படித்தபின் டி. டபிள்யு. அர்னால்டு என்பவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"ஹிந்துக்கள் தங்களிலுள்ள தாழ்ந்த வகுப்பு ஜனங்களிடம் மிகவும் வெறுப்புக் காட்டிவந்தனர். அவர்களை மிகவும் அகௌரவமாக நடத்தினர். தாழ்ந்த வகுப்பினரிலுள்ள ஒருவர் தனது நிலையை ஒழுங்குபடுத்திக்கொள்ள விரும்புவாராயின் அவருடைய வழியில் கணக்கற்ற தடைமுறைகளை உண்டுபண்ணிக்கொண்டிருந்தனர். இவ்வித நிலைமையில் உயர்வு தாழ்வு என்ற பாகுபாடும், பஞ்சமர் என்ற ஒரு வகுப்பும் இல்லாமலும், தனது நல்ல விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தக்க மைதானம் விஸ்தீரணமாகத் திறந்துவிடப்பட் டிருப்பதான ஒரு மதத்தில் சேர்ந்துகொள்வதால் எவ்வளவு பிரயோஜனம் கிடைக்கும் என்ற விஷயம் ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரிந்துகொண் டிருந்தது. உதாரணத்திற்காக வங்காளத்தை எடுத்

துக்கொள்வோம். அங்குள்ள தச்சர்களை ஹிந்துக்கள் அசுத்தவான்களாகக் கருதினர். ஆதலின், அவர்கள் தங்களுடைய தாழ்ந்த நிலைமையிலிருந்து மீட்சிபெறுவதற்காக பெரும் பெருந்தொகையினராக இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவ்விதமான உதாரணங்கள் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களி லிருந்தும் எடுத்துக் காண்பிக்க முடியும். ஆனால்இஸ்லாத்திற்குள் மதசம்மந்தமான வகுப்பினர் இவ்வளவு அதிகமாக இல்லை. இந்தியாவில் இதுதான் இஸ்லாத்தின் உண்மையான சக்தி. இதன் காரணமாகவே இவ்வளவு அதிகமான ஹிந்துக்கள் இஸ்லாம்மதத்தைத் தழுவினர்.

தவிரவும், வங்காளத்தில் பூர்வீக காலந் தொடுத்து வாசம்செய்து வந்தவர்களும், பஞ்சமர்களும் ஒருவிதமாக ஹிந்துமதத்தைவிட்டு ஒதுங்கியே இருந்து வந்தனர். இவர்களை அகம்பாவம்கொண்ட ஆரிய அரசர்கள் வெறுப்பான நோக்குடன் பார்த்துவந்தனர். ஆதலின், இவர்களை இஸ்லாமியப் பிரசாரகர்களின் திறந்த கைகள் வரவேற் றணைத்துக்கொண்டன. மீன் பிடிப்பவர்கள், கடற் கொள்ளைக்காரர்கள், தாழ்ந்த வகுப்பு விவசாயிகள், வேட்டைக்காரர்கள் ஆகிய ஏழைகளுக்கு இஸ்லாம்மதம் தெய்வீகமான ஒரு வரப்பிரசாதம் போல்போய்ச் சேர்ந்தது. சாமான்ய ஜனங்களின் இருதயங்களில் இஸ்லாம் அதிகமாகத் தைத்தது. ஆகவே, இந்த ஏழைகள் தாம் அதிகமாக இந்தப் புதிய மதத்தைத் தழுவினர். புதியமதத்தின் மூலமாக அல்லாஹ்வின் உண்மை, மிகவும் உயர்ந்த நோக்கங்கள், மனித சகோதரத்துவம் ஆகிய பரிசுத்தமான எண்ணங்கள் அவர்களின் முன்வந்தன. உயர் வகுப்பு ஹிந்துக்கள், வெகுகாலமாகத் தங்களது வீட்டு வாசற்படியினண்டைகூட வரக்கூடாது என்று ஒதுக்கி வைத்திருந்த கோடிக்கணக்கான வங்காள தாழ்ந்த வகுப்பு ஹிந்துக்களிடம் இப் புதியமதம் பலமான சங்கிலிக்குள் சேர்ந்துவிடும்படி மிகவும் கண்ணியமாக அழைத்தது. யாவரும் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். ஆகவே உலகில் இஸ்லாம் பரவியதற்கு இவைகளே உண்மைக் காரணங்களாகும்.

இஸ்லாமும் பெண்கள் ஆடையும்

மேனாட்டு நாகரீகம், நடை, உடை, பாவனை ஆகியவைகள் ஆங்கிலம் கற்ற ஆடவர்களைமட்டும் பற்றிக்கொண் டிருக்கிறது என்பதில்லை; இக்காலை பெண்களும் நவ நாகரீக மோகங்கொண்டு உச்சிதொடுத்து உள்ளங்கால்வரை புதிய பேஷன்களில் தங்கள் உடைகளை அமைத்துக்கொள்வ தென்னும் வியாதியில் மூழ்கிக்கிடக்கின்றனர். இதன் பயனாக, நாம் கைகொள்ள வேண்டிய சிக்கன வாழ்க்கைக்குமட்டில் ஹானி ஏற்பட்டுவிடுகிற தென்பதில்லை; நம்முடைய நற்குண நல்லொழுக்கங்களையே கை இழக்கும்படி ஏற்பட்டு விடுகிறது. இஸ்லாம் சாதாரண வாழ்க்கையைக் கைகொள்ளுமாறு முஸ்லிம்களுக்கு போதிக்கிறது. ஆனால் இக்காலை மிருதுவான அழகு, சிங்காரிப்பு முதலியவற்றை முஸ்லிம்கள் அவசியமெனக் கருதி அவைகளை கைகொள்ள முயற்சிக்கின்றனர். முஸ்லிம் ஸ்திரீகள் கைகொள்ள முயற்சிக்கும் இந்நூதன அனுஷ்டானம் வெட்கக்கேடானதும் இஸ்லாமிய ஒழுக்கத்திற்கு நேர் மாற்றமானதுமாகும். நம் இஸ்லாம் மார்க்கம் இந்தவிதமாக உடை அணிந்துகொள்ளுமாறு ஒருக்காலும் அனுமதியளிக்கவில்லை.

குர்ஆன், ஹதீதுஷரீப் ஆகியவைகளில் மாதர்கள் அணிந்துகொள்ளும் உடை சம்பந்தமான கட்டளைகள் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. அதாவது, பெண்கள் தங்கள் போர்வையின் முந்தாணியைக்கொண்டு தங்கள் நெஞ்சுகளை மூடிக்கொள்ள வேண்டும் என்றும், ஓ நபியே! உங்கள் பெண்சாதிமார்கள், பெண்மக்கள், இன்னும் மூமினானவர்களின் பெண்சாதிமார்கள் ஆகியவர்களுக்கு, துப்பட்டி போர்த்திக்கொள்ளும்படி அறிவித்து விடுங்கள். அது பேணுதலுடைய பெண்கள் என்பதை அறிவிப்பதாகவும், பல துர் எண்ணங்களை உண்டாக்காததாயு மிருக்கும் என்றும் அல்லாஹ் தஆலா அறிவிக்கிறான்.

இந்த ஆயத்துகளினால், பெண்களின் தன்மை உடை இவைகளில் பிரதான விஷயம், உறுப்புகள் வெளியாகாமல் மறைத்துக்கொள்ளுவது தான் முக்கியமாகுமென்பது வெளியாகிறது. இந்நிலைமையில் நம் முஸ்லிம் மாதர்கள் நாணங்கெட்ட அறை நிர்வாணமான உடைகளை அணிய முயற்சிப்பது கைசேதத்திற் குறிய விசனகரமான விஷயமாக இருக்கிறது.

இது சம்மந்தமாக நமது நபிகள்பிரான் (ஸல்) அவர்கள், உலகில் (அறை நிர்வாண) உடை அணிந்துகொள்ளும் எத்தனையோபெண்கள் கியாமத்நாளில் அம்மணமாக இருப்பார்களென்று கூறி யிருக்கிறார்கள். அதாவது, திரேகத்திலுள்ள அங்கம் நிறம் முதலியவைகள் வெளியில் தெரியும் விதத்தில் உடை அணிந்துகொள்ளும் மாதர்கள் மறுமைநாளில் அம்மணமாகத் தோன்றுவார்களென பெருமானார் (ஸல்.) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பெண்கள் மெல்லிய உடை அணிவதை ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் விலக்கி, "இதனால் திரேகத்தின் தோற்றம் தென்படாவிட்டாலும் இவ்வுடை திரேகத்துடன் சேர்ந்துவிடுவதால் உறுப்புகளின் கோலம் வெளியாகிறது" என அறிவித்திருக்கிறார்கள். மேலும் பெண்கள் தங்கள் உறுப்புகளின் கோலம் தெரியும்படியான விதத்தில் நெருக்கமான உடைகளை அணிந்துகொள்ளுவதும் ஆண்பிள்ளைகள் அணியும் விதமான உடைகளை அவர்கள் அணிந்துகொள்ளுவதும் இஸ்லாம் மார்க்கத்தில் விலக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஆண்களைப்போல் உடை அணிந்துகொள்ளும் பெண்களையும் பெண்களைப்போல் உடை அணிந்துகொள்ளும் ஆண்களையும் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் சாபமிட்டிருக்கின்றார்கள்.

ஒருநாளன்று அஸ்மாஉபின்து அபூபக்ர் (ரலி.) அவர்கள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம் சென்றகாலை ரொம்ப மெல்லிய உடை தரித்திருந்தார்கள். சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் அப்பெண்ணைப் பார்த்தவுடன் முகத்தைத் திருப்பிக்கொண்டு அஸ்மாவே! எதுபொழுது பெண்கள் வயதை அடைந்துவிடுவார்களோ அதுமுதல் அவர்களின் முகம் கை இவைகளைத் தவிரவுள்ள வேறெந்த உறுப்புகளும் பார்வையில் வருவது கூடாது என்று அறிவித்ததாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களால் அபூதாஊது என்ற ஹதீது கிரந்தத்தில் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக, நம் முஸ்லிம் மாதுக்கள் அல்லாஹ் ரஸூல் இவர்களின் கட்டளைக்கு மாற்றமாக, நாணங்கெட்ட முறையில் தங்களை வெளிக்குக் காட்டவேண்டுமென்னும் எண்ணத்திலும் தங்களை அழகுபடுத்திக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தோடும் தலைமயிர்களைச் சிங்காரித்துக் கொள்வதற்கும் திரேகத்தை அழகுபடுத்துவதற்கும் பலவாறான மேனாட்டு முறைகளைக் கைக்கொள்ளுகின்றனர்.

இக்காலை தங்களை அழகுபடுத்தி வெளியில் காண்பிக்க வேண்டும் என்னும் எண்ணம் பெண்களில் மிதமிஞ்சி ஏற்பட்டுப்போய் அது அவர்களின் தற்சுபாவம்போலவே யாகிவிட்டது. ஆனால் இஸ்லாம் மார்க்கமோ பெண்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்வதை விலக்காமல், சீவி சிங்காரித்துக் கொள்வதற்கு அனுமதியளித்திருப்பதுடன் இவ்வாறான சிங்காரிப்பு வெளியில் காட்டிக்கொள்ளுவதற்கில்லாது தங்கள் பர்த்தாக்களின் மனங்களைத் திருப்தி செய்துகொள்ளுவதற்காகச் அனுமதித்திருக்கிறது. ஆனால் நமது மாதர்களோ வீட்டிலிருக்கும்போது தங்களை எவ்வாறான அழகும் படுத்திக்கொள்ளாது பங்கரையான கோலத்திலேயே தோன்றுவதுடன் வெளியில் கிளம்பும்போது தங்களை மிதமிஞ்சிய அழகுபடுத்திக்கொண்டு வெட்க நாணமின்றி உல்லாசமாய்ச் செல்லுகின்றனர். இவ்வாறு செல்லுங்கால் பற புருடர்களின் பார்வைகளுக்கு தாங்கள் இலக்காகுவதைக்கூட இவர்கள் கவனிக்கிறார்களில்லை.

மேலும் பெண்கள் தங்களுக்கு அழகைக் கொடுத்துவரும் கூந்தலைக் கத்தரித்துக்கொள்வதனால் ஆண்கள் கோலங்கொண்டு விடுகின்றார்கள். இவ்வாறு ஆண் கோலம் கொள்வதைத்தான் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் விலக்கியிருக்கின்றார்கள். மேனாட்டு நாகரீகப் பெண்களின் உடையை இதுகாலை முஸ்லிம்களில் நவநாகரீகத்தை விரும்பும் மாதர்களும் அணிய முற்பட்டிருக்கின்றனராதலின் இஸ்லாம், உடை சம்பந்தமாக விலக்கியிருக்கும் சகல குணங்களும் அன்னோரில் காணப்படுகிறது.

இக்காலை ஏற்பட்டுள்ள நவநாகரீக உடை அணிவதுகொண்டு மாதர்களது உறுப்புகளின்

கோலம் வெளியாகிறது. இவ்வாறு கோலம் வெளியாகும்படியான உடைகளை அணிவது அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும் பகிரங்கமாக மாற்றம் செய்வதுபோலவும் அல்லாஹ் ரஸூலின் கட்டளையை விட்டு முகத்தைத் திருப்பிக்கொள்வதுபோலவுமிருக்கிறது.

ஆகவே நம் முஸ்லிம் மாதர்கள் மேனாட்டு நவநாகரீகமென்னும் பகட்டு வலையில் சிக்கிக்கொண்டு நம்சன்மார்க்கத்திலேற்பட்டுள்ள உடைகளைப் புறக்கணித்து மேனாட்டு உடைகள்மீது மோகங் கொள்ளாதிருப்பார்களாக. மேலும் வெளிரங்கமான இந்த அழகைவிட உள்ரங்கமான அழகே மகா சிரேஷ்டமானதென்பதையும், வெளிரங்கமான அழகைவிட உள்ரங்கமான அழகையே சன்மார்க்கம் விரும்புகிறதென்பதையும் நம் பெண்மணிகள் நன்குணர்ந்து தக்க முறையில் நடந்துகொள்வார்களாக. அல்லாஹ்தஆலா நம் பெண்மணிகளுக்கு, நாகரீகமற்ற மேனாட்டு உடைகள்மீது வெறுப்பைக்கொடுத்து, சன்மார்க்கம் கட்டளையிட்டிருக்கும் உடைதான் தங்களுக்கு பெருமை அளிக்கக்கூடியதாக இருக்கிறது என்னும் எண்ணம் உண்டாவதற்கான கிருபை புரிந்து சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடந்து சிறப்புற்ற மாதர்களாய் சிறந்து விளங்கும்படி அருள்புரிவானாக.

முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?

(சென்ற மாதம் 144-ம் பக்கத் தொடர்)

(அமீர் ஷக்கேப் அர்ஸலான் வரைவது)

நாவினால் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்ளுதல், அல்லது துஆச் செய்தல் மாத்திரம் போதுமானது என்று சில முஸ்லிம்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். துஆச் செய்வதனால் மாத்திரமே யுத்தத்தின் காரியம் நிறைவேறி விடுகிறது என்றிருக்குமாயின் நபிய்ய கரீம் (ஸல்.), சங்கைவான்களான ஸஹாபிகள், முன்னோர்கள் ஆகியவர்களின் துஆவை அல்லாஹ்தஆலா கபூல் செய்துகொண்டிருப்பான்; அவர்கள் ஜிஹாது செய்யவேண்டிய நிர்ப்பந்தமோ மரணமென்ற பானத்தை அருந்தவேண்டிய அவசியமோ நேர்ந்திருக்கமாட்டாது. துஆவினாலும், நினைப்பினாலும் மாத்திரமே காரியசித்தி யடைவதென்றிருந்தால் உலகத்தின் நிர்மாணம் தலைகீழாகப் புரண்டுவிடும். "மேலும், மனிதனுக்கு அவனுடைய முயற்சியை யல்லாமல் வேறில்லை" என்று இறைவன் திருமறையிற் கூறியுள்ளான். வெற்றியும் காரியசித்தியும் கிடைப்பது துஆக்களின் பேரிலேயே மட்டில் பொறுப்பாக இருக்குமாயின் "மேலும் (நபியே.) நீங்கள் அமல் செய்யுங்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களுடைய அமல்களைச் சீக்கிரத்தில் பார்ப்பார்கள் என்று கூறிவிடும்" என்று இறைவன் கூறி இருக்கவேமாட்டான்.

தொழுகை, நோன்பு, இன்னும் இவைகள் போன்ற அமல்களை மாத்திரம் செய்துவிட்டால் அதாவது ரத்தம் சிந்தவேண்டிய அவசியமோ பொருளைச் செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தமோ இல்லாமல் சிலர், அமல்களை மட்டிலும் செய்துவிடுவது பரிபூரணமான முஸ்லிம் என்று சொல்லிக்கொள்வதற்குப் போதுமானது என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தவிரவும் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருந்துவிடுவதுகொண்டு இறைவன் தங்களுக்குக் கண்ணியத்தையும் பெருமையையும் அளித்துவிட வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நடக்கத் திரிய செலவு செய்யச் சக்தியுள்ளவர்களாக இருந்துகொண்டு (முனாபிக்குகளைப்போல் யுத்தத்திற்குச் செல்லாமல்) பின்னால் உட்கார்ந்துகொண்டு துஆச் செய்பவர்களின் துஆக்களை இறைவன் எவ்வாறு கபூல் செய்வான்?

அல்லாஹ்தஆலாவின் பாதையில் முஸ்லிம்கள் குறைவாகச் செலவு செய்கிறார்கள் என்பதை மாத்திரம் நாம் காணவில்லை. அவர்கள் தங்கள் மூதாதையர் செய்துவைத்திருக்

கும் வக்புச் சொத்துக்களையும்கூட ஜீரணித்து விடுகிறார்கள். இவ்வண்ணம் அவர்கள் கோழை யர்களாகவும் உலுத்தர்களாகவும் இருந்து கொண்டு பொது வேலைகளில் தாராளமாய் பணத்தை வாரிக்கொடுப்பதில் பர்வாஹ வென்னும் விளக்குப் பூச்சியைப்போல் வந்துவிழும் பரங்கியர்கள்போல் காரியசித்தியடைவதற்கு எவ்வாறு ஆதரவு வைக்க முடியும்? உலகில் அரசாங்கம் செலுத்துவதானது விவசாயம் செய்வதற்கு ஒப்பாகவே இருக்கிறது. அதாவது வேலை செய்த அளவிற்குப் பலன் கிடைக்கும். ஆனல், இன்றைய முஸ்லிம்கள் தங்களுக்குள்ள சுகபோகங்களில் எதுவும் குறையக் கூடாது; அத்துடன் பரங்கியர்களைப் போல் பலமும் சக்தியும் வல்லமையும் பொருந்திய அரசாங்கம் தங்களுக்குக் கிடைத்துவிட வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.

"மேலும், நிச்சயமாக நாம் உங்களைப் பயம் பசி, பொருள் நஷ்டம், உயிர் நஷ்டம், பலன் நஷ்டம் ஆகியவைகளைக்கொண்டு சோதிப்போம். ஆனல், பொறுமையாளருக்கு (நபியே) நீர் நற்செய்தி கூறுவீராக"

என்று இறைவன் திருமறையில் கூறி இருப்பதை நாம் மறந்துவிட்டோம்.

நாங்கள் அநேகம் சந்தர்ப்பங்களில் தியாகம் செய்திருக்கிறோம். அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்திருக்கிறோம். பொருள், செல்வம், உயிர், பலன் ஆகியவைகளில் நஷ்டப்பட்டுச் சோதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனலும், அதன்பலன் எங்களுக்குத் திருப்திகரமாகக் கிடைக்கவில்லை, வழக்கம்போல் பரங்கியருக்கு அடிமைத்தனம் செய்வதில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறோம் என்று சில ஜனங்கள் கூற நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவர்கள் அல்லாஹ்வின் பெயரால் செலவுசெய்த பொருள்களை கிறிஸ்துவர்கள் யூதர்கள் ஆகியவர்கள் செலவுசெய்த பொருள்களுடன் எவ்விதத்திலும் ஒப்பிட்டுக்கூற முடியுமா? என்று நான் அந்த முஸ்லிம்களை வினவ விரும்புகிறேன்.

பாலஸ்தீன் சம்பவம்

பாலஸ்தீனத்தில் எஹூதிகளுக்கும் அறபியர்களுக்கு மிடையில் கலகம் நடந்தது. இரண்டு கக்ஷியிலும் அநேகம் ஜனங்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதன் பேரில் உலகம் முழுவதிலுமுள்ள யூதர்கள் பாலஸ்தீனத்து யூதர்களுக்காக சந்தா சேர்த்து 10-லக்ஷம் பவுன்கள் வசூல் செய்தனுப்பினர் உலக முஸ்லிம்களும் பாலஸ்தீனத்து முஸ்லிம்களுக்காக நிதிதிரட்டினர். இது சம்மந்தமாக அபார முயற்சிசெய்த பின்னர் 13 - ஆயிரம் பவுன்கள்தான் கொடுத்துதவ முடிந்தது. அதாவது யூதர்களது உதவியில் ஒரு சதவிகிதமே முஸ்லிம்கள் உதவிசெய்திருக்கின்றனர்.

யூதர்கள் முஸ்லிம்களைப் பார்க்கினும் தனவந்தர்களாதலின் அவர்கள் அதிக திரவியம் திரட்டிவிட்டனர் என்று சொல்லலாம். யூதர்கள் தனவந்தர்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஆனல், ஜனத்தொகையில் முஸ்லிம்கள் 70 கோடிக்கதிகமாக இருக்கின்றனர். யூதர்கள் 2 கோடிப் பேர்கள்தான். ஒவ்வொரு முஸ்லிமும் பாலஸ்தீனத்து முஸ்லிம்களுக்கு ஒரு பியாஸ்டர் வீதம் கொடுத்தால் 40 - கோடி பியாஸ்டர் சேர்ந்துவிடும். (100 பியாஸ்டர் சேர்ந்தது ஒரு பவுன்) இந்தத் தொகையை ஒவ்வொரு முஸ்லிமும் கொடுப்பது சிரமமன்று. ஆனல், முஸ்லிம்கள் அவ்வாறு எங்கே செய்யப்போகிறார்கள். முஸ்லிம்களில் பத்துப் பேருக்கு 1 பியாஸ்டர்வீதம் வசூல்செய்தாலும் கூட எழுகோடி பியாஸ்டர் வசூலாகிவிடும். இந்தத் தொகையை பாலஸ்தீனத்திற்கு அக்கம் பக்கத்திலுள்ள தேசங்களில்மாத்திரமே வசூல் செய்து விடலாம். இவ்வித நிலைமையில் "நாம் தியாகம்செய்தோம்" என்று சொல்லிக் கொள்ளமுடியுமா? இப்படித்தான் அல்லாஹ்வின் பாதையில் பொருளாலும் உயிராலும் ஜிஹாது செய்வதோ? உங்களுக்கு பதிலாக "மஸ்ஜிது அக்ஸா"வில் தங்களது உதிரத்தைச் சிந்திக்கொண்டிருப்பவர்கள்பால் உங்களுக்கு இவ்வளவுதான் பிரீதி இருக்கிறதோ?

ஆங்கிலேயர்கள் உலகத்தை எப்படி ஆளுகின்றனர் என்று ஜனங்கள் கேட்கின்றனர். அவர்கள் தங்கள் சிறந்த நற்குணத்தாலும், முயற்சியாலும், ஒற்றுமையாலும் காரியசித்தி யடைகின்றனர். இது சம்மந்தமாக ஒரு சிறு உதாரணம் கூறுகின்றேன். ஒரு ஆங்கிலேயர் கீழ் நாட்டில் ஒரு பெரும்பதவியை வகித்து வந்தார். அவர் தமது வீட்டுச் சாமான்களனைத்தையும் ஆங்கிலேயரின் கடையிலேயே வாங்க வேண்டும் என்று தனது வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஒருமுறை அவ் வேலைக்காரன் சுதேசியின் கடையில் சாமான்

வாங்கினன். மொத்தச்செலவில் 20 - பவுன் மீதமேற்பட்டது. இந்த மீதத்திற்குக்காரண மென்னவென்று அவ்வுத்தியோகஸ்தர் விசாரித்தார். அவ்வேலைக்காரன் உண்மையைக் கூறினன். பிறகு, அவ்வுத்தியோகஸ்தர் தமது வேலைக்காரனிடம் ஆங்கிலேயரின் கடையிலேயே வாங்கவேண்டும் என்று தாக்கீது செய்தார். மறுபடியும் அவ்வேலைக்காரன் அப்படியானல் செலவு மாதந்தோறும் 20 - பவுன் அதிகரித்துவிடுமே என்று கூறினன். அதற்கவர் "குற்றமில்லை, ஆங்கிலேயரிடமே வாங்கவேண்டும்" என்று கட்டளையிட்டார். இவ்விபரத்தை எனது நண்பர் ஒருவர் என்னிடம் கூறினர்.

திருப்போலி யுத்தம்

ஒருமுறை நான் எகிப்திலுள்ள ஒரு பெரிய அந்தஸ்துள்ளவரிடம், நீங்கள் திருப்போலி, புர்க்கா ஆகிய தேசங்களிலுள்ள முஸ்லிம்களுக்கு உதவிசெய்வதில் அசட்டைசெய்து விட்டீர்கள் என்று கூறினேன். அதற்கவர் இத்தாலியர்கள் திருப்போலியின்மீது படையெடுத்தபோது எகிப்தியர் தங்கள் முஸ்லிம் சகோதரர்களுக்கு வேண்டிய உதவிசெய்தனர் என்று கூறினர். ஆனல், அவர்கள் செய்த உதவியெல்லாம் மொத்தத்தில் 150 - ஆயிரம் பவுன்களுக்கு அதிகமில்லை. இந்தத் தொகையைக்கொண்டு இத்தாலியர்களைவிட்டுத் தங்களைத் தற்காத்துக்கொள்ள முடியுமா? இத்தாலியர்கள் இந்த யுத்தத்தில் செய்த செலவின் முன்னிலையில் ஒன்றுமில்லை என்றே கூறவேண்டும். இந்த யுத்தத்தில் உதுமானிய அரசாங்கத்தார் (துருக்கியர்) 10 - லக்ஷம் பவுன் செலவு செய்தார்கள்.

இந்தச் சொற்ப உதவியானது திருப்போலியருக்கு அதிக தைரியத்தை யுண்டாக்கிவிட்டது. இதனல் இத்தாலியர் அநேகம் நஷ்டங்களை அனுபவித்தனர். திருப்போலியின் மீது படையெடுத்ததற்காக இத்தாலிய ராஜதந்திரிகள் பின்னர் வருத்தமடைந்தனர்.

ரீப் யுத்தம்

ரீபிலுள்ள முஜாஹிதுகள் பல வருஷங்களாக ஸ்பானியர்களை எதிர்த்து யுத்தம் செய்தனர். கடைசியாக வெற்றியுமடைந்தனர். இந்த யுத்தத்தில் ஸ்பானியச் சிப்பாய்களில் 26 ஆயிரம் பேர்கள் கொல்லப்பட்டனர். ரீப் ஜனத்தொகை மொத்தம் 80-ஆயிரம்தான். ஸ்பானியரின் ஜனத்தொகை $2\frac{1}{4}$ கோடி. ரீப் வாசிகள் ஏழைகள், அவர்கள் நாடு பாலைவனம். அவ்வாறிருந்தும் உலகம் முழுவதும் பிரமிக்கத்தக்க வேலையை அவர்கள் செய்தனர். இந்த ஜனங்கள் கிறிஸ்துவர்களாக இருந்திருப்பார்களாயின் இவர்களுக்குப் பலகோடிப் பவுன்கள் உதவி கிடைத்திருக்கும். ஆனல், முஸ்லிம்களாகிய நாம் ரீப் முஜாஹிதுகளுக்கு இதுவரை எவ்வளவு தொகை உதவிக்கனுப்பி இருக்கிறோம் என்று உங்களை வினவுகின்றேன்.

ஸ்பானியர்கள் தோல்வியடைந்த பிறகு பிரஞ்சுக்காரர்களும் ஸ்பானியர்களும் சேர்ந்து 3 லக்ஷம் போர்வீரர்களைக் கொண்ட பெரும் படையுடன் யுத்தம் செய்து கிராமங்களிலெல்லாம் வெடிக் குண்டுகளைப் போட்டனர். பிரஞ்சு, ஸ்பானிய ஆகாய விமானங்கள் மாத்திரம் இந்த யுத்தத்தில் உபயோகிக்கப்படவில்லை. இவ்விரு அரசாங்கங்களின் உதவிக்காக நியூயார்க்கிலிருந்து அமெரிக்கன் ஆகாய விமானங்களும் வந்தன. இக்காரியாதிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் முஸ்லிம் உலகம் தூரத்தில் நின்றுகொண்டு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தது. ஒருவரும் இதைப்பற்றி மூச்சுக்கூட விடவில்லை. கடைசியாக சிலர் காயமடைந்த ரீப் முஸ்லிம்களுக்கு உதவி செய்ய முன்வந்தனர். இப்படி உதவி செய்ய முன்வந்தும் முஸ்லிம் உலகம் முழுவதிலும் கூடி மொத்தம் 1500 பவுன்களே வசூலாயின. முஸ்லிம்களுக்கு வெட்கம் வரவில்லையா? இவ்வித நிலைமையில் முஸ்லிம்கள் தங்களின் வீழ்ச்சிக்குக் காரணமென்னவென்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? (தொடரும்.)

"யவ்முந்நபீ" விழாவை 3—6—36 புதன்கிழமையன்று தக்க முறையில் கொண்டாடுங்கள். அன்று மாபெரும் மகாநாடுகள் கூட்டி "பெருமானின் பிரசாரம்" என்னும் ஸீரத் பிரசங்க நூலை வாசித்துக் காட்டுங்கள்!

இஸ்லாமிய நாகரீகமும் அதன் வீழ்ச்சியும்.

(அல்லாமா, அமீர் ஷகிப் அர்ஸலான் எழுதியது)

இஸ்லாம் மதம் தனக்கென பிரத்தியேகமான ஒரு நாகரீகத்தை ஏற்படுத்தவில்லை என்று சிலர் தாவாச் செய்கின்றனர். இவ்வாறு தாவாச் செய்பவர்கள் இரண்டு வகையினர். இஸ்லாம் மதத்தின் விரோதிகள் ஒரு வகையினர். *முல்ஹிதுகள் மற்றொரு வகையினர். முஸ்லிம்களை மேனாட்டினரின் சக்கரத்தில் சுற்றவைக்க வேண்டும் என்று இஸ்லாத்தின் விரோதிகள் முயலுகின்றனர். இஸ்லாத்தில் மாறுதல் என்னும் வித்தை விதைத்துவிட வேண்டும் என்பது மற்றொரு வகையினரின் முயற்சி. நாகரீகத்தின்மீது மதத்திற்கு அதிகச் செல்வாக்கிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோமாயினும் ஒரு மதத்தின் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டுமாயின் அதனுடைய நாகரீகத்தை உரைகல்லாக ஏற்படுத்தவேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை. ஏனெனில், அநேகம் சந்தர்ப்பங்களில் ஜனங்களிடம் மதத்திற்கிருக்கும் செல்வாக்குக் குறைந்து கொண்டே வருகிறது. இதனால், அந்த மதத்தைத் தழுவி இருக்கிற ஜனங்களின் ஒழுக்கம், நாகரீகம் ஆகியவைகளிலும்கூடக் குறைவேற்பட்டு, அந்த சமூகம் முழுவதும் அடியுடன் வீழ்ந்துவிடுகிறது. எனவே, ஒரு சமூகம் வீழ்ச்சியடைவதும் கீழ்நிலைமைக்கு வருவதும் அந்த மதத்தின் காரணமாகவல்ல, அந்த மதத்தைப் பின்பற்றி இருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்களில் சிறந்த சத் ஒழுக்கங்கள் இல்லாமற் போவதேயாகும். சில சந்தர்ப்பங்களில் வெளியிலுள்ள சில காரணங்களின் நிமித்தமாக மத சம்மந்தமான நாகரீகத்தின் அஸ்திவாரம் பலஹீனமடைந்து விடுகிறது. இதன் பலனாக அந்தச் சமூகம் முழுவதும் அழிந்துவிடுகின்றது. என்றாலும், இதற்குக் காரணம் மதமல்லவாதலின், மதத்தின்மீது குற்றம் கூறுவதற்கில்லை. இந்த முறையில் முஸ்லிம்களின் நிலைமையைக் கவனித்துப் பார்ப்போமாயின் முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கும் விநாசத்திற்கும் அவர்களது மதம்தான் பொறுப்பாளி என்று முடிவு செய்துவிட முடியாது. இதற்குக் காரணம் மதத்தை அவர்கள் அறியாதிருப்பதும் மதக் கட்டளைகளை அலக்ஷியம் செய்ததுமேயாகும். ஏனெனில், முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டதிட்டங்களின்படி நடந்துகொண்டிருந்த காலம்வரை கண்ணியம், சக்தி, செல்வம் ஆகியவைகளுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் ஷரீஅத்தின் சட்டங்களின்படி நடக்கும் விஷயத்தில் அசட்டை செய்ய ஆரம்பித்த அன்றுமுதல் அழிந்து நாசமாகிவிட்டனர்.

இஸ்லாம் மதத்திற்குச் சொந்தமான நாகரீகம் எதுவுமில்லை என்று கூறுவது நமது நோக்கமல்ல. இஸ்லாத்திற்கெனப் பிரத்தியேகமான நாகரீகம் இருக்கிறது என்ற விஷயம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதேயாகும். இதற்கு ஆதாரம் காட்டவேண்டிய அவசியமே இல்லை. எனவே, மேனாட்டினரிடம் அதாவது இத்தாலியராலும் சரி, ஜெர்மானியராயினும் சரி, பிரஞ்சுக்காரராயினும் சரி, பிரிட்டிஷாராயினும் சரி எல்லோரிடத்திலும் இஸ்லாம் மதத்தின் நாகரீகத்தைப்பற்றி கணக்கற்ற நூல்கள் எழுதப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். இஸ்லாத்தில் நாகரீகம் இல்லாதிருக்கும்பக்ஷத்தில் இஸ்லாத்தை எப்பொழுதும் எதிர்த்துவருபவர்களான மேனாட்டு அறிஞர்கள் இஸ்லாமிய நாகரீகத்தைப்பற்றி இத்தனை வால்யூம்களை எழுதி இருக்கமாட்டார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து, இஸ்லாமிய நாகரீகத்தைப்பற்றி ஐரோப்பிய நூலாசிரியர்கள் இனியில்லா வண்ணம் அநேகம் நூல்களை எழுதி இருக்கின்றனர்.

இஸ்லாமிய நாகரீகத்தின் காக்ஷிகள்

நாம் சில அடி தூரம் பின்வாங்கி நின்றுகொண்டு இஸ்லாமிய நாகரீகத்தைப் பார்ப்போ

* (முல்ஹிதென்பது மார்க்கபக்தியற்று அதிலுள்ள முக்யாம்சங்களை உதாசீனம் செய்து ஜனங்கள் மத்தியில் குப்ரை மறைமுகமாய் பரப்புபவர் கருத்து.)

மாயின் நமது எண்ணத்திலும் நினைப்பிலும் கூட வராத அநேகம் காக்ஷிகளைப் பார்க்கமுடியும். மன்ஸூர், ஹாரூன் ரஷீத், மாமூன் ஆகிய கலீபாக்களின் ஆட்சிகாலத்தில் பகுதாது நகரத்தின் ஜனத்தொகை 25 லக்ஷமாக இருந்தது. இந்த நகரத்தின் நாகரீகம், செல்வம், சந்தோஷ நிலைமை ஆகியவைகளுக்கு முற்காலத்திலும் தற்காலத்திலும் நிகர் எதுவுமில்லை. அக்காலத்தில் பஸரா நகரில் 5 லக்ஷம் பேர் வாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். திமிஷ்கு, கைரோ, அலப்போ, ஸமர்கந்து, இஸ்பஹான் முதலிய பல நகரங்கள் இஸ்லாமிய நாகரீகத்திற்கு மத்திய ஸ்தானங்களாக இருந்துகொண்டிருந்தன. ஆப்பிரிக்காவிலுள்ள கைருவான், பெஜ், (பாஸ்) தில்மிஸான், மராக்கஷ் ஆகிய நகரங்களுக்கு உதாரணம் ஐரோப்பாவிலும் இல்லை எனலாம். கர்த்தபா நகரை ஐரோப்பின் மாப்பிள்ளை என்று கூறுவது மிகைப்படக் கூறியதாகாது. அந்த நகரத்தில் மாத்திரம் 15 லக்ஷம் ஜனங்கள் வாசம் செய்துகொண்டிருந்தனர். இங்குள்ள ஜாமிஆ மஸ்ஜிதினுள் 50 ஆயிரம் பேர்கள் தொழவும், ஸஹனில் 30 ஆயிரம் பேர்கள் தொழவும் தகுந்தவிதமாக அவ்வளவு பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது. இந்த மஸ்ஜிதைத் தவிர்த்து இந்நகரில் வேறு 700 மஸ்ஜிதுகள் இருந்தன.

நான் "ஜஹ்ரா" என்ற அரண்மனையைப் பார்க்கச் சென்றபோது எனக்கேற்பட்ட ஆச்சரியத்திற்கோரளவில்லை. அதை அரண்மனை என்று சொல்வதைப்பார்க்கினும் பூர்த்தியான ஒரு நகரம் என்று கூறுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இவ்வரண்மனையின் நீளம் 900 மீட்டராகவும், அகலம் 800 மீட்டராகவும் இருந்தது. ஸ்பானியர்கள் இவ்வரண்மனையை ஜஹ்ராப்பட்டணம் என்றே அழைக்கின்றனர். ஐரோப்பாவில் முஸ்லிம்களின் மிகச் சிறிய அரசாங்கத்தின் தலைநகரமான 'கர்னாத்தா' என்ற நகரை எடுத்துக்கொள்வோம். கி.பி. 15-வது நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் இதற்குச் சரியான அழகானதும் பிரம்மாண்டமானதுமான நகரம் இல்லை. இதன் ஜனத்தொகை 50 ஆயிரம்தான், என்றாலும் அக்காலத்தில் இதன் ஜனத்தொகையில் பாதி ஜனத்தொகையுள்ள நகரம் ஐரோப்பாவில் இருந்ததில்லை. அல்ஹமராவின் அழகிய அரண்மனையை எடுத்துக்கொள்வோம். இதனைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. உலகம் முழுவதிலும் இதற்கு நிகரான அரண்மனை ஒன்றுமில்லை என்று கூறிவிடுவதே போதுமானது. இதனைப்பற்றி இன்னும் அதிகமாக எவ்வளவு வேண்டுமானாலும் எழுதலாம். விரிவஞ்சி இவ்வளவுடன் நிறுத்திக் கொள்கிறோம். ஆனால், இஸ்லாத்தின்பால் மிக மிக துவேஷங் கொண்ட விரோதியும்கூட இஸ்லாத்தின் நிகரற்ற நாகரீகத்தை மறுக்கத் தைரியம்கொள்ள முடியவில்லை என்பது நம்மெல்லோருக்கும் பெருமையை அளித்துக்கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய நாகரீகத்தின் பலன்கள்

இஸ்லாம் புதிதாக ஒன்றையும் உற்பத்தி செய்துவிடவில்லை. பழைய நாகரீகத்தையே மறுபடியும் உயிர்ப்பித்து கிழக்கு தேசத்தை மேற்கு தேசத்துடன் ஒன்றுசேர்த்தது என்று இஸ்லாத்தின் விரோதிகள் கூறுகிறார்கள். இது சரியன்று. முஸ்லிம்கள் பழைய கலைகளை மொழிபெயர்த்ததுமட்டுமில்லாமல் அநேகம் புதிய கலைகளையும் உற்பத்தி செய்திருக்கிறார்கள். அநேகம் புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்புக்கூட அவர்கள் மீதிலேயே இருந்து வந்திருக்கிறது.

இஸ்லாம்மார்க்கம் தோன்றும் காலத்தில் கீழ்நாட்டு நாகரீகம் காணாமற்போயிருந்தது. இஸ்லாம் அதனை மறுபடியும் உயிர்ப்பித்தது மட்டுமில்லாமல், சிப்பிக்குள்ளிருந்து முத்துக்களை எடுப்பதுபோல் அவைகளைப் பொறுக்கி எடுத்துச் சுத்தம்செய்து அவைகளின்மீது இஸ்லாத்தின் முத்திரையையும் வைத்து திருகுர்ஆனின் ஒழுக்கங்களைக்கொண்டு அழகுபடுத்திக் கீழ்நாட்டிலும் மேனாட்டிலும் பரவச்செய்தது. இதனையல்லாமல் முஸ்லிம்கள் இதர சமூகங்களிலிருந்து எடுத்துக்கொண்டவைகளும், இதர சமூகத்திலிருந்து மொழிபெயர்ப்புச் செய்தவைகளும், யுத்தமுறைகளிற் சிலவற்றை இதரர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதும் இஸ்லாத்தின் நாகரீகத்தைக் குறைப்பதற்கு எவ்வித ஆதாரமுமாக ஆக முடியாது. ஏனெனில், ஒரு மனிதன் பிறருடைய உதவியைக்கொண்டு தன்னிலுள்ள குறையைப் பூர்த்திசெய்துகொள்ள முயலுவது இயற்கையாகவுள்ள காரியமேயாகும். உண்மையைக் கூறுமிடத்து கல்வியின் உண்மையான - யதார்த்தமான மதிப்பும் கௌரவமும் "அறிவு முமினுடைய காணாமற்போன பொருளாகும். ஆகவே, எங்கேனும் அதனைக்

கண்டால் அதற்கு அம்மூமின் மிகவும் பாத்திய முள்ளவனாகி விடுகின்றான்" என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய ஹதீதில்தானிருக்கிறது.

இஸ்லாம்மதம் 50-வருஷகாலத்திற்குள் உலகில் ஆத்மார்த்த சம்மந்தமாகவும், அறிவு சம்மந்தமாகவும், பிரகிருதி சம்மந்தமாகவும், ராஜீய சம்மந்தமாகவும் அடைந்துள்ள வெற்றிகளை அதற்கு முந்தியுள்ள எந்தச் சமூகமும் அடையவில்லை என்ற விஷயத்தை இஸ்லாத்தின் பெரும் பெரும் விரோதிகள்கூட ஒப்புக்கொள்ளத் தயங்குவதே இல்லை. அறபியர்கள் உலகத்தை 50 வருஷகாலத்தில் ஜெயித்துவிட்டார்கள் என்று நெப்போலியன், செண்ட் ஹெலன் போன்றவர்களும், ஆச்சரியத்துடன் கூறி இருக்கிறார்கள். நெப்போலியன் போன்ற வெற்றிவீரர்களுக்கு அறபியர்களின் வெற்றியானது ஆச்சரியத்தை யுண்டாக்குவதென்றால் அறபியர்கள் உலகில் எவ்வளவு பெரிய அருங்காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறது. இவர்கள் மூன்று நான்கு நூற்றாண்டுகள்வரை உலகில் நிகரற்ற கௌரவத்துடனும் நேர்மையுடனும் திறமையுடனும் அரசாட்சி புரிந்திருக்கிறார்கள். ஆனால், இவ்வளவு நீண்டகாலத்திற்குப் பின்னர் கொஞ்சங் கொஞ்சமாக ஒழுக்க ஹீனமும், ஊக்கக்குறைவும், தெய்வக்கட்டளையில் அசட்டையும், ஒருவருக்கொருவர் மனஸ்தாபமும்ஏற்பட்டுவிட்டபடியால் அவ்வரசாங்கம் நாளுக்கு நாள் பலஹீனமடைய வாரம்பித்தது. இறுதியாக 'கைஸ்' கபீலாக்களும் 'யமனிக்' கபீலாக்களும் தலைமைத்தனத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொள்ள வில்லையானால் ஆப்பிரிக்காவின் வடபகுதியை அறபி நாடாக ஆக்கியதுபோல் ஐரோப்பா முழுவதையும் ஜெயித்து, அறபி நாடாக்கி இருப்பர் என்பது நிச்சயம். எனவே, முஸ்லிம்களுக்கு வந்த ஆபத்துகளெல்லாம் அவர்களுடைய செய்கைகளின் காரணமாகவே வந்துள்ளன. ஷரீஅத்தின் கட்டளைகளின்படி நடக்காத காரணத்தினாலேயே அவர்கள் ஆளப்படும் ஜாதியினராயினர்.

கிரேக்கர்கள், ரோமர்கள் வீழ்ச்சியின் சரித்திரம் மதம் வீழ்ச்சிக்குக் காரணமா?

கிறிஸ்துவ மதம் உண்டாகு வதற்குமுன் கிரேக்கர்கள்தாம் உலகத்தில் மிகவும் முன்னேற்றமடைந்த சமூகத்தராக இருந்தார்கள் என்று சொல்லமுடியா தென்றாலும் அவர்கள் மிகவும் முன்னேற்றமடைந்த சமூகத்தாரில் ஒருவர் என்பது மட்டும் நிச்சயம். அவர்களிற் பலர் தத்துவசாஸ்திரக்கலையின் ஸ்தாபகர்களாகவும் இதர பல கலைகளை வளர்ப்பவர்களாகவும் இருந்தனர். அவர்களிற் பலர் இன்றுங்கூட கல்வித்தத்துவம் என்ற வானத்தில் நக்ஷத்திரங்களைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். கிரேக்கர்களின் முன்னேற்றமும் நாகரீகமும் கலைகளிலும் கல்விகளிலும் மட்டுமில்லாமல் அவர்களில் அநேகம் பெரிய அதிபதிகளும் இருந்தனர். அலக்ஜாண்டர் என்பவர் மகா பெரிய வெற்றி வீரராக இருந்தார். அவருக்கு நிகரானவர் உலகச் சரித்திரத்தில் மிகச்சிலரே இருக்கின்றனர். அவர் தேசங்களை ராணுவ பலத்தில் மட்டும் ஜெயிக்கவில்லை, அவர் சென்றவிடமெல்லாம் கல்வியையும், கலையையும் தம்முடன் கொண்டு சென்றார். ஜெயிக்கப்பட்ட தேசத்தார் இவைகள் மூலம் செழித்துத் தழைத்து ஓங்கினர்.

பிறகு, கிறிஸ்தவக்காலம் தலைதூக்கிற்று. கிரேக்கர்கள் கொஞ்சகாலத்திற்குப் பிறகு இப்புதிய மதத்தைத் தழுவி கிறிஸ்தவர்களாயினர். ஆகவே, அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாக வீழ்ச்சியடைந்து தங்களிலுள்ள மேன்மைகளை இழந்து கடைசியாக சுதந்திரத்தையும்கூட விட்டு, உதுமானிய ஏகாதிபத்தியத்தில் அவர்கள் நாடு ஒரு மாகாணத்திற்குச் சமமாக ஆகிவிட்டது. இன்று அவர்கள் சுயேச்சையுள்ளவர்களாகி விட்டபோதிலும் தற்போது அவர்களுக்கிருந்துவரும் அரசாங்கம் பழைய அரசாங்கத்தின் முன்னிலையில் அணுவுக்குச் சமமாகவும் கூட இல்லை.

இப்பொழுது நீங்கள் யோசித்துப் பாருங்கள். கிரேக்கர்களின் வீழ்ச்சிக்கு அவர்கள் கிறிஸ்து மதத்தவரானதுதான் காரணம் என்று கூறமுடியுமா? முஸ்லிம் சமூகத்தின் வீழ்ச்சிக்கு இஸ்லாம் மதந்தான் காரணம் என்று கூறுபவர்கள் கிரேக்கர்களின் வீழ்ச்சிக்குக் கிறிஸ்து மதம்தான் காரணமாக இருந்தது என்று ஒப்புக்கொள்ளவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

கிரேக்கர்களுக்குப் பிறகு ரோமர்களை எடுத்துக் கொள்வோம். ஒருகாலத்தில் அவர்கள் மிகப்பிரம்மாண்டமான அரசாங்கத்திற்கதிபதி

களாயிருந்தனர். உலகத்திலுள்ள எந்த சமூகமும் அரசாங்கமும் அவர்களுக்குச் சரியாகத் தலைதூக்க முடியாமலிருந்தது. ஆனால், 'குஸ்தன்தீன்' சக்கிரவர்த்தியின் காலத்தில் அவர்கள் கிறிஸ்துமதத்தைத் தழுவிய பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வீழ்ச்சியடையத் தலைப்பட்டனர். இவர்கள் ஐரோப்பாவில் தங்கள் ஆதிக்கத்தை முதலில் இழந்தனர். இரண்டாவதாக ஆசியாவிலும் இழந்தனர். கி. பி. 15-வது நூற்றாண்டில் இவர்களது பெயர் நாமம்கூட இல்லாதழிந்தது. இப்பொழுது அவர்கள் கிரேக்கர்களைப்போல் மறுபடியும் உயிர்பெற்றுவிட்டார்களாயினும் ஒருகாலத்திலிருந்த அரசாங்கம் கையைவிட்டுப் போனபின் மறுபடியும் அது கிடைப்பதில்லை.

இந்த இடத்திலும் மேற்கண்ட அதே வினாதான் உண்டாகின்றது. ரோமர்களையும்கூட கிறிஸ்து மதம்தான் வீழ்த்தி விட்டதா? உரோமர்களின் வீழ்ச்சிக்குக் கிறிஸ்துமதம்தான் காரணம் என்று சிலர் கூறுகின்றனர் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், இது சரியான வாதமன்று. அவர்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவிய பின்னர் அவர்களில் அநேகம் கெடுதல்கள் உண்டாகி விட்டன. அதாவது உயர்ந்த ஒழுக்கங்கள் இல்லாமை, ஊக்கக் குறைவு, துர்த்தன்மை, மானங்கெட்டதன்மை முதலியவைகள் உண்டாகிவிட்டன. இவ்வாறான உள்கெடுதிகளுடன் வெளியில் பகைவர்களின் தாக்குதல்கள் அவர்களைப் பலஹீனப்படுத்திவிட்டன. இதனால் அவர்கள் வீழ்ச்சியடைவது அவசியமாகிவிட்டது. கிறிஸ்து மதம் உலகில் தோன்றாமல் இருந்தாலும்கூட வீழ்ச்சி யடைவதை அவர்கள் தடுத்துக் கொள்ளமுடியாது.

ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவதில் சில அனுஷ்டான முறைகளும் ஆசாரங்களும் சட்டங்களும் மாறுகின்றனவேயன்றி ஜனங்கள் அடியுடன் இல்லாதொழிந்து போவார்கள் என்பதில்லை. ஒழுக்கத்தைச் சீர்திருத்திக் கொள்வதற்காக கிறிஸ்துவ மதத்தைப் பார்க்கினும் விக்கிரக ஆராதனை சிறந்ததென்று ஒருவரும் தாவாச் செய்ய முடியாது. இதுபோல இஸ்லாம் மதம் தோன்றுவதற்கு முன்னர் கீழ்நாட்டார் நல்ல ஸ்திதியில் இருந்தனர்; அவர்களுடைய நாகரீகம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது; இஸ்லாம் மதம் தோன்றி அவர்களுடைய நாகரீகத்தை அழித்துவிட்டது என்று சொல்ல முடியாது. தவிரவும், நியாயமாகக் கவனிக்குமிடத்து இஸ்லாம் மதம் தோன்றுவதற்கு முன்பே கீழ்நாட்டு நாகரீகம் கிட்டத்தட்ட இல்லாதொழிந்துவிட்டதென்பதும் இஸ்லாம் மதம் அதனை மறுபடியும் உயிர்ப்பித்து அதற்கு அஸ்திவாரங்களை ஏற்படுத்திற்று என்பதும், இதன் பலனாக பகுதாது, பஸரா, ஸமர்க்கந்து, புகாரா, ஷாம், மிஸ்று, கைருவான், கர்த்தபா முதலிய பெரிய பெரிய நகரங்கள் தோன்றின என்பதும் புலனாகும். உண்மை கூறுமிடத்து உலகில் கீழ்நாட்டு நாகரீகத்தின் சின்னம் எந்த அளவிற்கிருக்கிறதோ அவைகளெல்லாம் இஸ்லாம் மதத்தின் பொருட்டாலேயே இன்னமும் இருந்துவருகிறது என்பது மிகையாகாது.

எனவே, கீழ்நாட்டு நாகரீகம் அழிந்துபோவதற்கு இஸ்லாம் மதத்தின்மீது குற்றமுமில்லை, திரு குர்ஆன்மீது குறைகூறவுமிடமில்லை. இதற்கு இரண்டு காரணங்களேயுள. ஒன்று இஸ்லாமிய தேசங்களில் சிலுவைக்காரர்களின் புறப்படையெடுப்பு, மற்றொன்று மங்கோலியரின் உள்ளுக்குள்ளிலுள்ள கலகங்கள். இவ்விருவர்க்கத்தவரும் இஸ்லாத்தின் முயற்சியைத் தங்களது மிருகத்தனமான செய்கைகளால் பாழாக்கிவிட்டார்கள். இதனையல்லாமல் முஸ்லிம் அரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டதும், அவர்கள் தங்கள் மன இச்சையின்படி நடந்துகொண்டதும், திரு குர்ஆனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமலிருந்ததும், ஒழுக்கங்களை விட்டுவிட்டதும் இஸ்லாத்திற்கும் இஸ்லாத்தின் நாகரீகத்திற்கும் மகத்தான நஷ்டங்களை விளைவித்தன. இந்நஷ்டங்களை வெளியிலிருந்துவரும் விரோதிகளாலும் உண்டுபண்ண முடியவில்லை.

ஆனால், கீழ்நாட்டு நாகரீகத்திற்கேற்பட்ட நஷ்டங்கள் மிருகத்தன்மையான பரங்கிகள், மங்கோலியர்கள், திரு குர்ஆனின் கட்டளைகளை அலக்ஷியம் செய்த முஸ்லிம்கள் ஆகியவர்கள் மீதே இருக்கின்றன. இந்த மற்றொரு விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பரங்கியர்கள் கிறிஸ்துவ மதத்தை கி. பி. 3-வது, 4-வது, 5-வது, 6-வது நூற்றாண்டுகளிலேயே ஒப்புக்கொண்டுவிட்டனர். ஆனால் கல்வி, கலை ஆகியவைகளின் மூலமாக ஐரோப்

பாவுக்கேற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் சென்ற 4 நூற்றாண்டுகளாகத்தான் கொஞ்சங் கொஞ்சமாக ஏற்பட்டிருக்கின்றது. அதாவது அவர்களுடைய இந்த முன்னேற்றம் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய பின் 1000 வருஷங்களுக்கு அப்பால்தான் ஏற்பட்டிருக்கின்றது. நாம் இப்படிக் கூறுவதிலிருந்து அக்காலத்திலுள்ள ஐரோப்பியர் அறியாமையிலும், அஞ்ஞான அந்தகாரத்திலும் இருந்தனர் என்பது நமது கருத்தல்ல. இந்தக்காலத்தில் அறபியர்களின் நாகரீகம் ஐரோப்பிய நாகரீகத்தைப் பார்க்கினும் எவ்வளவோ உன்னதமான நிலைமையில் இருந்தது என்பதுதான் எமது கருத்து. இதனை ஐரோப்பிய சரித்திர ஆசிரியர்களில் சிலரைத் தவிர மற்றவர்களனைவரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

பூர்வீக ஐரோப்பாவின் வீழ்ச்சிக்கும் தற்கால முன்னேற்றத்திற்கும் காரணங்கள்

ஐரோப்பாவின் ஆயிரம் வருஷ வழிகேடும், மத்தியகால அறியாமையும் கிறிஸ்துவ மதத்தினாலேயே ஏற்பட்டது என்று நாம் கூற முடியும். புரோட்டஸ்டன்ட் கிறிஸ்துவர்கள் மதத்தை அதாவது ரோமன் கத்தோலிக் மதத்தைக் குற்றவாளியாக்குகின்றனர் என்பதிற் சந்தேகமில்லை. லூத்தரும் அவரது சகாக்களும் புரோட்டஸ்டன்ட் வகுப்புக்கு அஸ்திவாரமிட்ட காலத்திலிருந்துதான் கிறிஸ்துவர்கள் முன்னேற்றத்தின் மைதானத்தில் கால் வைத்திருக்கிறார்கள் என்று புரோட்டஸ்டன்ட் கிறிஸ்துவர்கள் கூறுகிறார்கள். ஆனால், வால்டிர் போன்ற கிறிஸ்துவர்கள் புரோட்டஸ்டன்ட், கத்தோலிக்கர் ஆகிய இரு வகுப்பினருக்கிடையிலும் குறிப்பிடத்தக்க பிரமாதமான வித்தியாசம் எதுவுமில்லை என்றும், இவ்விரு வகுப்பும் மனித முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன என்றும் கூறுவதுடன் லூத்தர் முதலியவர்களைப்பற்றி பிரஸ்தாபிக்கும்போதெல்லாம் வால்டிர் "இவர்கள் உற்பத்தி செய்த மதம் உலகத்திற்குச் செய்துள்ள சீர்திருத்தங்கள் ஹஜ்றத் முஹம்மது நபி (ஸல்.) அவர்களுடைய சீர்திருத்தங்களுக்கு முன்னிலையில் எவ்வித அந்தஸ்திலுமில்லை என்று கூறிக் கொண்டிருந்தார்.

பரங்கியர்கள் மத்திய காலத்திலிருந்த அறியாமைக்கும், ஆயிரம் வருஷகால வழிகேட்டிற்கும் கிறிஸ்துவ மதம் பொறுப்பாளியல்லவென்றும், ஐரோப்பியரைக் கிறிஸ்துவ மதம் ஓரளவு நாகரீகமுள்ளவர்களாக ஆக்கி இருக்கிறது என்றும் நாம் தக்க ஆதாரத்துடன் கூற முடியும்.

இதற்கு உதாரணம் கூறுவதற்கு தூரத்தில் போகவேண்டிய அவசியமில்லை. ஜப்பானின் உதாரணத்தை நமக்கு முன் வைத்துக்கொள்வோம். அவர்களில் விக்கிரக ஆராதனைக்காரர்களுமிருக்கின்றனர். புத்தர்களுமிருக்கின்றனர், கன்பூஷியஸின் சிஷ்யர்களுமிருக்கின்றனர். 2000 வருஷ காலமாக அவர்கள் பெயர் நாமம் கூட மற்றவருக்குத் தெரியாது. இறுதியாகச் சென்ற 50, 60 வருஷ காலத்திற்குள் உலகத்திலுள்ள சகல தேசத்தாரும் பாடங் கற்றுக் கொள்ளத்தக்க விதமான கண்ணியத்தையும் அரசாங்கத்தையும், முன்னேற்றத்தையும் செய்துகொண்டனர். ஆனால், ஜப்பானியர் வழக்கம்போல் விக்கிரக ஆராதனைக்காரர்களாகவே இருந்துவருகின்றனர். ஆகவே ஜப்பானியரின் சென்றகால அறியாமைக்கோ அல்லது தற்கால முன்னேற்றத்திற்கோ அவர்களது விக்கிரக ஆராதனை காரணமாக இல்லை என்பது இதிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. தவிரவும், ஜப்பானியர் ரஷ்யர்களை யுத்தத்தில் தோற்கடித்தனர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், ரஷ்யரின் ஜனத் தொகையில் ஜப்பானியர் பாதிகூட இல்லை. அத்துடன் ரஷ்யர்கள் வைராக்கியமுள்ள கிறுஸ்துவர்களாக இருப்பதுபோல ஜப்பானியர் விக்கிரக ஆராதனையில் அளவுகடந்தவர்களாக இருக்கின்றனர்.

இதிலிருந்து, இஞ்ஜீல் வேதத்தின் போதனைதான் ரஷ்யர்களின் அவமானத்திற்குக் காரணமாக இருந்தது என்றோ, சூரியனையும் தேவதைகளையும் ஜப்பானியர் வணங்கியதுதான் அவர்களது முன்னேற்றத்திற்கும் கண்ணியத்திற்கும் காரணம் என்றோ நாம் சொல்லமுடியுமா? ஆகவே, புத்தியுள்ளவர்கள் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வீழ்ச்சிக்கும் அந்த சமூகத்தின் மதம்தான் காரணம் என்று கூறுவது கூடாது. முன்னேற்றத்திற்கும் வீழ்ச்சிக்கும் அநேக காரணங்கள் இருக்கின்றன. அவைகளின் முன்னிலையில் மதத்திற்கு எவ்விதக் குணபாடுமில்லை என்று கூறுவதுதான் அறிவுடமையாகும்.

இந்த இடத்தில் ஜப்பானியரின் முன்னேற்றத்திற்கும் நாகரீகத்திற்கும் நாம் காரணம் கூற விரும்பவில்லை. இல்லையேல், கடவுளின் சவாரிக்காக பரிசுத்த குதிரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென ஜப்பானியர் கருதி இருக்கும் கொள்கையானது ஜப்பானியரின் முன்னேற்றத்திற்குத்தடையாக இருக்கவில்லை என்பதையும், அவர்கள் தங்களது இயற்கையான துணிவு, புத்திசாலித்தனம் ஆகியவைகளைக்கொண்டு பிரயோஜனம் அடையவிடாமல் தடுத்துவிடவுமில்லை என்பதையும் தக்க ஆதாரத்துடன் ருஜுப்பித்துக் காண்பிக்கமுடியும்.

பற்பல தேசத்தாரின் சரித்திரங்களிலிருந்து நமக்கு இதுசம்மந்தமாகத் தக்க உதாரணம் கிடைக்கிறது. ஆயினும் இந்த இடத்தில் மேலேகண்ட ஒரு உதாரணத்துடன் நிறுத்திக்கொள்கிறோம். தவிரவும், முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு அவர்களது மதம்தான் காரணம் என்று சில கிறிஸ்துவர்கள் குற்றச்சாட்டுச் செய்யவில்லையானால் நாம் இது சம்மந்தமான வியாசம் எழுத எழுதுகோலை எடுத்தே இருக்கமாட்டோம். மொரோக்கோவிலுள்ள பிரஞ்சு கவர்னர் ஜெனரலான மோஸியோஸான் என்பவர் பிரஞ்சுப் பத்திரிகை ஒன்றில் ஒரு வியாசம் எழுதி மொரோக்கோவின் வீழ்ச்சிக்கு இஸ்லாத்தின் இரவுதான் காரணம் என்று கூறி இருக்கிறார். சில இஸ்லாமிய நாடுகள் சில நாட்களாக வீழ்ச்சியடைந்து விட்டதற்கு "இஸ்லாமிய இரவு" என்று பெயர் வைப்பதாயின் "கிறிஸ்துவ இரவு" என்றும் நாம் கூறவேண்டியது அவசியமாகி விடுகின்றது. ஏனெனில், கிறிஸ்துவ இரவில் ஐரோப்பா ஓராயிர வருஷம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஆகவே, இஸ்லாமிய இரவு அதிகமா அல்லது கிறிஸ்துவ இரவு அதிகமா என்பதை வாசகர்கள் முடிவுசெய்து கொள்வார்களாக. ஆகவே எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் மதத்தைக் காரணமாகக் கூறுவது நீதியாகாது என்பது இதிலிருந்து நன்கு தெரியவருகிறது.

வாழ்க்கையின் முன்மாதிரி.

நிச்சயமாக அல்லாஹ்வின் ரஸூலில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது.
(அல் குர்ஆன்.)

சோதரீர்! ஒவ்வொரு மனிதனும் தான் சதாவும் அல்லாஹ்வின் முன்னிருப்பதாக எண்ணிக்கொள்வதுடன், தான் அல்லாஹ்வுக்காகவே உயிர்வாழ்வதாகவும் கருதவேண்டும். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது தூய்மை பொருந்திய வாழ்க்கையானது இதற்கோர் தக்க முன்மாதிரியாக விளங்கிக்கொண்டிருக்கிறது. தங்களின் மனம் அறிவாற்றல் முதலியவைகள் யாவும் சதாவும் அல்லாஹ்வின் வலுப்பத்தைக் கொண்டு இலங்கா நின்றது. எனவே பெருமானார் உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும்போதும் அல்லாஹ்வின் ஞாபகத்திலேயே மூழ்கி யிருப்பார்கள். எந்த வேலையை ஆரம்பிப்பதாயினும் துவக்கத்தில் 'பிஸ்மில்லாஹ்' என்னும் அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டே ஆரம்பிப்பார்கள். இராப்பகல் காலங்களில் 8 முறை ஒளுச்செய்து கொண்டு தூய்மையான உடை, சுத்தமான திரேகத்துடன் தொழுகையை நிறைவேற்றுவார்கள். இராக்காலங்களில் மிகுதமாக வணங்குவதற்கு இடுப்புக்கட்டிக் கொள்ளுவார்கள். உலகம் முழுதும் நித்திரையில் மூழ்கியிருக்குங்கால் தங்களுடைய மனமும் நாவும் அல்லாஹ் தஆலாவை ஞாபகப்படுத்துவதில் சந்தோஷமடைந்து கொண்டிருக்கும். அல்லாஹ் தஆலாவின் தியானத்தில் அதிக நேரம் நிற்பது கொண்டு கால்களில் வீக்கமேற்பட்டுவிடும். இவ்வளவு வணக்கத்திற்குப்பின் படுக்கையின் பக்கல் வருவார்களாயின் குர்ஆன் ஷரீப் ஓதஆரம்பித்து விடுவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் குர்ஆன்ஷரீப் ஓதுவதை மக்கள் செவியுறுவார்களாயின் அப்படியே மனம் உறகி பிரமித்துப்போய்விடுவர். சிலகால் இராக்காலங்களில் கபரஸ்தான்களுக்குச் சென்று கண்ணீர் வடிப்பார்கள். வேதனையைப்பற்றிக்

கூறப்பட்டிருக்கும் ஆயத்துகள் இறங்கும் போது மனேசஞ்சலத்தோடு அழுவார்கள். சஹாபாக்கள் பெருமானர் (ஸல்.) அவர்களின் இச்சம்பவத்தைக்கண்டு, 'யாரஸூலல்லாஹ்' தாங்கள் அல்லாஹ்வின் ரஸூலாக இருக்கும் போது எதற்காக இவ்வாறு சஞ்சலமடைகின் றீர்கள்'' என வினவுவார்கள். அதுபொழுது பெருமானர் (ஸல்.) அவர்கள், "என்ன யான் அல்லாஹ்வின் நன்றியறிதலுள்ள அடியாராக இருக்கவேண்டாமா?'' வெனக் கூறுவார்கள்.

சமூக சேவை.

சத்தியதூதர் (ஸல்.) அவர்களது வாழ்க்கையை நோட்டமிட்டுப் பார்ப்போமாகில் அவர்கள் அல்லாஹ்வை தியானித்ததுபோக மீதமுள்ள நேரங்களை சமூக சேவையிலேயே ஈடுபடுத்தியிருக்கிருர்களென்பது இனிது புலனகும். மானிடன் அல்லாஹ்வின் படைப்புகளின் ஊழியகாரனக ஆகிவிடுவதுதான் அல்லாஹ்த ஆலாவுடன் சம்மந்தம் வைத்துக்கொள்வதின் பிரயோசனமாகுமென்று கருதிவந்திருக்கிருர்கள். "எவன் மக்களின் ஊழியகாரனக இருக்கிருனே அவன்தான் அவர்களின் தலைவனகும்' என்பது பெருமானரின் திருவாக்காகும். எனவே எவன் அல்லாஹ்வின் படைப்புகளுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளுகிருனே அவன்தான் மானிடர்களில் சிரேஷ்டமானவனகும். இதனை நம்பெருமானர் (ஸல்.) அவர்கள் அநுஷ்டான முறையில் செய்துகாட்டிய சில உதாரணங்களை கீழே தருகிறேம்:—

சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஏழை மிஸ்கீன் ஆகியோர்களுடன் பிரீதிகொண்டிருப்பார்கள். சிநேகிதன் பகைவன் எல்லோரையும் சந்தோஷமாக சந்திப்பார்கள். தங்களுடைய வேலைக்காரரின் வேலையில் தாங்களும் பங்கெடுத்துக்கொள்ளுவார்கள். தங்களுக்காகவும், அயல்பாகக்காரர்களில் ஆட்கள் இல்லாதவர்களுக்காகவும் கடையிலிருந்து சாமான் வாங்கி வருவார்கள். உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவருக்கும் தாங்களே முதலில் சலாம் சொல்லுவார்கள். ஒவ்வொருவருக்கும் நல்ல யோசனை கூறி நலமான விஷயத்தில் ஆசை வார்த்தை கூறுவார்கள். ஏதாகிலும் நல்ல விஷயத்தைக் காண்பார்களாயின் உடனே அதனைச் செய்வதற்கு முற்படுவார்கள். முஸாபிர், அநீதி புரியப்பட்டோர், எதீம், கைம்பெண் ஆகியோர்களை சதா விசாரித்து அவர்களுக்கு வேண்டியனவற்றைச் செய்வார்கள். வியாதிஸ்தர்களை விசாரித்து ஆதரவு கூறுவார்கள். அவர்கள் ஏதாகிலுமொரு வஸ்துவின்மீது விருப்பங்கொள்வார்களாயின் அந்த வஸ்து வியாதிஸ்தர்களுக்குக் கெடுதி செய்யாததாக இருக்குமாயின் அதனைத் தேடிக் கொடுப்பதற்கு முயற்சிப்பார்கள். சிறு பிள்ளைகளுக்குச் சமீபமாகச் செல்லுவார்களாயின் துவர்க்கத்திலேயே அவர்களுக்கு சலாம் சொல்லி தங்கள் அன்பை வெளியாக்குவார்கள். முதியோர்களுக்கு சங்கை மரியாதை செய்வார்கள். ஒரு வஸ்துவை சுவால் செய்பவனுக்கு அவ்வஸ்து தங்களிடமிருந்தால் கொடுத்துவிடுவார்கள். இல்லாதுபோயின் கடன் வாங்கியேனும் அவனுடைய நாட்டத்தை நிறைவேற்றி வைப்பார்கள். சிநேகிதர்கள் மரணமாய்விடுவார்களாயின் அவர்களுடைய சொத்துக்களை வாரிசுகளுக்கு பாகித்துக்கொடுப்பார்கள். மரணமடைந்து விடுபவர் கடன்பட்டவருக இருப்பாருகில் முதலில் அவருடைய கடனைத் தீர்ப்பதற்கு முயற்சிப்பார்கள். எவனகிலும் தங்களுக்குத் தொந்திரை கொடுக்க நாடி சமீபத்தில் வருவானகில் அவன் வெட்கத்தால் தலைகுனிந்து மன்னிப்புத் தேடிச்செல்வான்.

அல்லாஹ்வின் அடியார்களுக்குச் சேவை புரிவதின் நலவுகளை எடுத்து விளக்கி, அடியார்களுக்கு அவர்களின் பாத்தியதைகளை அளித்து அவர்களை விடுதலைசெய்துவிடுங்க ளென்றும், வெள்ளாட்டிகளுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளுங்களென்றும், பசித்து வருவோருக்கு சாப்பாடு கொடுங்களென்றும், எதீம்-அகதிகளின் சொத்துக்களைக் காப்பாற்றுங்க ளென்றும், கடன் ஹிம்ஸையில் கஷ்டப்படுபவர்களுக்கு உதவிசெய்யுங்க ளென்றும் கூறுவார்கள். மேலும் மானிடர்களுக்கு சதா பிரயோசனம் கொடுக்கக்கூடிய காரியங்களை அறிவித்து, பலன் கொடுக்கக்கூடிய மரங்களை நடுவதற்கும், மஸ்ஜிதுகளைக் கட்டுவதற்கும், கிணறுகள் தோண்டுவதற்கும் ஏவுவார்கள். இன்னும் உயிர்ப்பிராணியான மிருகங்களிடத்திலும் அன்பு பக்ஷம்காட்டுமாறு கட்டளையிட்டிருக்கின்றுர்கள். ஒருநாள் வேகமான காற்று வீசிற்று. ஒருவன் ஏதோ காரணத்தினல் அதை ஏசினன். உடனே பெருமானர் (ஸல்.) அவர்கள், அது தனது கடமையை நிறைவேற்றுகிறது. ஆதலின் அதனை யேசவேண்டாம் என்று கண்டித்தார்கள்.

208348

ஹஜ்ரத் அனஸ் (ரலி.) அவர்கள் கூறுகிறார்கள்:—நான் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இடம் 10 வருடகால மிருந்திருக்கிறேன். இந்த பத்துவருடங்களுக் கிடையே யான் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுக்கு எவ்வளவு தொண்டாற்றியிருப்பேனோ அதைவிட அதிகமாக பெருமானார் (ஸல்.) அவர்கள் என் வேலையைப் பார்த்திருக்கிறார்கள்.

மதீனாவில் அறை பைத்தியம்பிடித்த மாதொருத்தி யிருந்தாள். அவள் தன் வேலைக்காக வழியில் பெருமானார் (ஸல்.) அவர்களைப் பிடித்துக்கொண்டாள். அதுபொழுது நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள், அம்மாதை நோக்கி, "நீ மதீனாவின் எந்தத் தெருவிலாகிலும் இருந்துகொள். யான் அங்குவந்து உனது காரியத்தை முடித்துத் தருகிறேன் என்றுகூறி அவளிருக்கும் இடத்திற்குச் சென்று காரியத்தை முடித்துக் கொடுத்தார்கள்.

தேவையுள்ளார்களின் தேவைகளை அவர்களின் முகக்குறி, வார்த்தைகளைக் கொண்டு தெரிந்து கொள்ளுவார்கள். ஒரு தடவை ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்கள் பசியின்கொடுமை தாங்கமுடியாது வழியில்வந்து உட்கார்ந்து விட்டார்கள். ஹஸ்றத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அந்த வழியாகச் செல்லுங்கால் தனது நிலைமையை ஹஸ்ரத் ஸித்தீக் அவர்கள் தெரிந்துகொள்ளுவதற்காக அவர்களிடம் ஒரு ஆயத்தின் அர்த்தத்தைக் கேட்டார்கள். ஹஸ்ரத் ஸித்தீக அக்பர் (ரலி.) அவர்கள் அந்த ஆயத்தின் கருத்தை விளக்கி விட்டுச் சென்றார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அங்குவந்தார்கள். அவர்களுடனும் இவ்வாறான சம்பவமே நடைபெற்றது. சற்று நேரத்திற்கெல்லாம் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் அந்தவழியாகச் சென்றார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அந்த ஆயத்தின் அருத்தத்தைக் கேட்டார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் சிரித்தவர்களாய் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.)யை தங்களுடன் வீட்டுக்கு அழைத்துப்போய் அங்கிருந்த பால் கிளாஸ் ஒன்றைக்கொடுத்து "அஹ்லசுப்பாக்கள்" யாவரும் புசியுங்களென்று கூறினார்கள்.

கையாலே வேலைசெய்தல்

தாங்கள் சகலவிதமான காரியங்களையும் தங்கள் கையாலேயே செய்தார்கள். மிருகங்களுக்குத் தீனிபோடுவார்கள். பால்கறப்பார்கள். கிழிந்த துணிகளுக்கு தங்கள் கையினாலேயே ஒட்டுப்போடுவார்கள். வீட்டைக் கூட்டிவிடுவார்கள். வேலைக்காரனுடன் சேர்ந்து வேலைசெய்வார்கள். 'மஸ்ஜித நபவி கட்டப்பட்டகாலை வேலைக்காரர்களுடன் தாங்களும் சேர்ந்துகொள்வார்கள். மண்குழைப்பார்கள். 'அஹ்ஜாப்'-யுத்தத்தில் அகிழ் வெட்டப்பட்டபோது தாங்களும் எல்லோருடன் மண்தூக்க ஆரம்பித்தார்கள். இதன் பயனாக தூய்மைபொருந்திய திரேகம் தூசுபுழுதி நிறப்பியதாகிவிட்டது.

வார்த்தையாடுவது

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் அநேக நேரங்களில் மௌனமாகவே இருப்பார்கள். எப்பொழுதும் அவசியமின்றி வார்த்தையாடமாட்டார்கள். சந்தர்ப்பம் நேர்ந்துவிடின் சுருக்கமாகவும் அருத்தபுஷ்டியாகவும் பேசுவார்கள். பிரசங்கம் புரியுங்கால் சஹாபாக்கள் ஒவ்வொரு வாக்கியத்தையும் விரல்களால் கணக்கிட்டுக்கொள்ளுவார்கள். தாழ்ந்த மனிதன் தங்களை அழைத்தபோதிலும் 'லப்பைக்' இதோ வருகிறேன் என்று பதில் சொல்லுவார்கள். சிறிய சிறிய விஷயங்களுக்காகவும் நண்பர்களுக்கு நன்றி செலுத்துவார்கள். ஒரு மனிதன் பெருமானார் (ஸல்.) அவர்களிடம்வந்து, யான் மிக மிக பயப்படக்கூடிய வஸ்து எதுவாகுமென வினவினார். தாங்கள் தங்களுடைய நாவைப்பிடித்துக் கொண்டு 'இதுவாகும்'என அறிவித்து மனிதன் அதிகாலையில் எழுந்திருக்கும்போதே அவனுடைய சகல உறுப்புக்களும் நாவிடம் முறையிட்டுக் கொள்ளுகின்றன. அதாவது நாவே! ஆண்டவனுக்கு பயந்துகொள்வாயாக, நீ ஒழுங்காக இருப்பாயாகில் நாங்கள் சலாமத்தாக இருப்போம். நீகெடுதியில் பிரவேசித்துவிடுவாயாகில் நாங்கள் கஷ்டமடையும்படி நேரிடும் எனக் கூறுவதாக அறிவித்தார்கள்.

பெருமானார். (ஸல்.)அவர்களின் சபை அளவற்ற தூய்மை பொருந்தியதாகவும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவுமிருக்கும். தாங்கள் ஏழைமக்களுடன் கூடி உறவாடுவதையே அதிகமாக விரும்புவார்கள். சாப்பிடுவதற்கு முற்படுத்தப்படும் வஸ்து எவ்வளவு குறைவானதாக விருந்தபோதிலும் அதைச்சாப்பிடும் போது சிநேகிதர்களையும் சேர்த்துக்கொள்வார்கள். குதிரையில் சவாரிசெய்வார்களாயின் மற்றொருவரை பின்னால் உட்காரவைப்பார்கள்.

எவ்வளவு கேவலமான மனிதன் தஅவத்திற் கழைத்தபோதிலும் அன்புடன் ஒப்புக்கொள் வார்கள். தங்கள்முன் வைக்கப்படும் எவ்வஸ்து வையும் அன்புடன் சாப்பிடுவார்கள். தங்களின் நா, கை இவைகளைக்கொண்டு யாருக்கும்கஷ்டம் கொடுத்தது கிடையாது. விருந்தாளிகளை மனேதிருப்தியுடன் உபசரிப்பார்கள். அவர்க ளுக்காக தங்கள் போர்வையைக்கூட கீழே விரித்திருக்கின்றார்கள். யாரையும் கெடுதி சொல்வதையோ, யாருடைய பின்னங்களை வெளியாக்குவதையோ விரும்பமாட்டார்கள். "என்னிடம் யாரைப்பற்றியும் தூஷணை கூறு தீர்கள். யான் இவ்வுலகத்தை விட்டுச் செல் லுங்கால் என்னுடைய மனம் எல்லாரிடமும் துப்பரவாக இருப்பதை நாடுகிறது" என்று சிநேகிதர்களிடம் கூறுவார்கள். பங்காளியின் பாத்தியதை விஷயத்தை ரொம்ப பேணுத லுடன் கவனிப்பார்கள். உதாரணமாக, தாங் கள் ஒருநாளன்று ஒருமனிதருடன் கானகம் சென்றார்கள். அதுபொழுதுபூமியைத்தோண்டி இரண்டு பற்குச்சிகள் எடுக்கப்பட்டது. அதி லொன்று நேரானதாயும் மற்றொன்று வளை வானதாகவுமிருந்தது. சத்தியத்தூதர் (ஸல். அவர்கள் கோணலாகவுள்ளதை தாங்களெடுத் துக்கொண்டு நேராகவுள்ளதை கூடவந்தவருக் குக் கொடுத்தார்கள். அதுபொழுது அவர் நல்ல பற்குற்சி தங்களிடமிருக்கட்டும். "என்று கூறினர். அதற்கு பெருமானர் (ஸல்.) அவர் கள்," அப்படியில்லை; அது உம்மிடமே இருக் கட்டும். ஒருமனிதன் மற்றொருவனுடன் ஒரு மணிநேரமாகிலும் சேர்ந்திருப்பானகில் கூட் டாளியின் கடமையை நிறைவேற்றினனு என கியாமத் நாளில் கேழ்க்கப்படும் எனத்தெரிவித் தார்கள்.

மஸ்ஜித நபவியைப் பெறுக்கிச் சுத்தஞ் செய்து கொண்டிருந்த ஓர் ஏழை மனிதர் வியாதியால் பீடிக்கப்பட்டு வருந்துங்கால் நபி கள் பெருமானர் (ஸல்.) அவர்கள் எத்தனையோ முறை சென்று விசாரித்து வந்திருக்கிறார்கள். திடுகூறுக அம்மனிதர் நடு இராத்திரியில் மரண மடைந்து விட்டதால் உடனே அடக்கம்செய்து விட்டார்கள். காலையில் நபிகள் பெருமானர் (ஸம்.) அவர்களுக்கு இச்செய்தி தெரிந்து ரொம்ப வருத்தமுற்று அவருடைய கப் ரண்டை சென்று பிரார்த்தனை புரிந்தார் கள்.

சோந்தவாழ்க்கை

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் அனுஷ்டித்துக் காட்டிய ஏழ்மைத்தனமான சாதாரண வாழ்க்கையின் சில நமூனக்கள் வருமாறு:—

தாங்கள் தொலிக்கோதுமை ரொட்டிகளையே அநேக நேரங்களில் புசித்திருக்கிறார்கள். வீட் டில் மாவுவடிக்கட்டும் சல்லடை இல்லாதிருந்த தால் வாயினல் மாவை ஊதித் தொலியைப் போக்குவார்கள். சிலகால் மாதக்கணக்கில் தங்கள் வீட்டில் அடுப்பு எறிந்தது கிடை யாது. தாங்களும் வீட்டிலுள்ளவர்களுடன் பேரீச்சம்பழத்தைத் தின்றுவிட்டு தண்ணீர் குடித்து காலங்கழிப்பார்கள். சிலகால் பசி அதிகரித்துவிடுமாகில் வயிற்றில் துணியைக் கட்டிக்கொள்ளுவார்கள். ஒருநாளன்று ஒரு சஹாபி பசியின்கொடுமையால் வயிற்றில் ஓர் கல்லைவைத்துக் கட்டிக்கொண்டு நபிகள் பெரு மானர் (ஸல்.) அவர்களிடம் முறையிட்டுக் கொண்டார். உடனே சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் தங்கள் சட்டையை உயர்த்தினர்கள். அதுபொழுது அவ்வயிற்றில் இருகற்கள் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. ஒருநாளன்று ஒரு பகீர் தான் மிகவும் பசியோடிருப்ப தாக பெருமானர் (ஸல்.) அவர்களிடம் முறை யிட்டுக்கொண்டார். உடனே நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தங்கள் பத்தினிமார்கள் ஒவ் வொருவரின் வீட்டிற்கும் ஆள் அனுப்பினர் கள். அங்கெல்லாம் தண்ணீரைத் தவிர வெறொன்றுமில்லை எனத் தெரியவந்தது.

சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் சாதாரண மானதும் கெட்டியானதுமாகிய உடுப்புகளையே அணிந்துகொண்டு "மனிதனுடைய உடுப்பு அவனுடைய பேணுதலையாகும்" என்று சொல்லிக்கொண் டிருப்பார்கள். இராக்காலங் களில் தொலியினல் தைக்கப்பட்டு பேரீச்சம் நார்கள் நிறப்பப்பட்ட படுக்கையில் துயில்புரி வார்கள்.

சத்தியத்தூதர் (ஸல்.) வாசஞ்செய்த அறை மண்சுவர்கள் வைக்கப்பட்டதாகவும், பேரீச் சக்கொம்புகளையும் ஒட்டகத்தின் உரோமங் களையும் கொண்டு முகடுபோடப் பட்டதாகவு மிருந்தது. ஒருநாள் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அந்த அறைக்குட் சென்றபோது பெருமானர் (ஸல்.) அவர்கள், பேரீச்சம் கம்பு ளால் செய்யப்பட்ட ஓர் கட்டிலில் படித்திருப்

பதையும் அந்த கட்டிலில் பின்னப்பட்டிருக்கும் கயிற்றின் அடையாளம் உலகரட்சகர் (ஸல்.) அவர்களது தூய்மைபொருந்திய திருமேனியில் பதிந்திருப்பதையும், ஒருமூலையில் கொஞ்சம் தொலிக்கோதுமை இருப்பதையும், மற்றொரு மூலையில் ஓர் தொலி தொங்கவிடப்பட்டிருப்பதையும் பார்த்து அழ ஆரம்பித்தார்கள். உடனே சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், 'ஏ உமரே!' கைஸர், கிஸ்ராபோன்ற சக்கிரவர்த்திகள் இவ்வற்பநாள் வாழ்க்கைக்காக அபரிமிதமான சுகபோகங்களை அனுபவிப்பதையும், நாம் சதா காலத்தின் சுகவாழ்க்கையைக்கொண்டு சிரப்பிக்கப்படுவதையும் நீங்கள் பொருத்திக்கொள்ளவில்லையா" எனக் கூறினர்கள். உலகரட்சகர் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களின் அருமைப்புதல்வியான ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் திருகையில் மாவு அரைத்துக்கொண்டும் தோளில் தண்ணீர் குடம் தூக்கிக்கொண்டு மிருந்தார்கள். ஹிஜ்ரீ 2-ம் ஆண்டில் தங்களருமைப் புதல்வியை ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கட்கு விவாகம் செய்து கொடுத்தார்கள். அதுகாலை ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடம் ஆட்டுத்தோலி ஒன்றும் பழையதோர் எமன் போர்வையும் ஓர் உறுக்குச்சட்டையு மிருந்தது. விவாகச் செலவுக்காக அவ்வுறுக்குச்சட்டை விற்கப்பட்டு வாசனைதிரவியம் முதலியன வாங்கப்பட்டன. நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் தங்களின் அருமை மகளிற்கு மூங்கிலினல் செய்யப்பட்ட கட்டில், தோல்தலையணை, மண்கூஜா, மண்குடம், தோற்குடம், திருகை ஆகியவைகளைச் சீதனமாகக் கொடுத்தார்கள். விவாகத்திற்கு பின் தனிவீடு தேவைப்படுமாதலால் 'ஹாரிதிப்னுநுஃமான்' தன் வீடொன்றில் பீபி பாத்திமா (ரலி.) அவர்களை வாசம்செய்யுமாறு செய்தார்.

குடும்பவாழ்க்கை

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் தங்களின் 25 ஆண்டுமுதல் 50 ஆண்டுகள்வரை ஒரேமனைவியுடன் வாழ்க்கை நடத்திக்கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் கதீஜா (றலி.) அவர்கள் மரணமடைந்த பின் பலவாருன சமயசந்தர்ப்பங்களுக்கேற்ப பல விவாகங்கள் செய்துகொண்டார்கள். ஆனல், அவர்களெல்லோருடனும் நீதி ஒழுங்குமுறையோடு நிருவாகம் நடத்திக்கொண்டு போனர்கள். கைபர் யுத்தத்திற்குப் பின் ஒவ்வொரு மனைவியர்க்கும் வருஷமொன்றுக்கு ஓரளவுகோதுமையும் ஓரளவு பேரீச்சம்பழமும் ஏற்பாடுசெய்து பாலுக்காகத் தனித்தனியே ஒவ்வொரு ஒட்டகமும் கொடுத்துவிட்டார்கள். தாங்கள் ஒவ்வொரு நாளும் அஸர் தொழுகைக்குப்பின் ஒவ்வொரு மனைவியர் இல்லத்திற்கும் சென்று அவரவர்களின் தேவைக்கு ஏற்பாடு செய்வார்கள். மகரீப் தொழுகைக்குப்பின் ஒருமுறை அவர்களெல்லோருடைய இல்லங்களுக்கும் சென்றுவிட்டு இராக்காலத்தை முறைப்படி ஒருவரிடம் கழிப்பார்கள். பிரயாணம் செல்லவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டு விடுமாயின் சீட்டுப்போட்டு யாருடைய பெயருக்கு சீட்டு விழுந்ததோ அவர்களை தங்களுடன் அழைத்துச் செல்வார்கள். இவ்வாறு பெருமானர் (ஸல்.) அவர்கள் நீதத்தைக் கைகொண்டு தாங்கள் சுகயீனமாயிருக்கும்போது கூட இம்முறையை அனுஷ்டித்துவந்து நடக்கமுடியாமற் போன காலத்தில்இரண்டுமனிதரின்தோள்மீது ஊண்டுதல்கொண்டு ஒவ்வொருநாளும் பிராட்டிமார்கள் இல்லம்சென்று திரும்புவார்கள். இதனல் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கட்கு அதிக கஷ்டசங்கட மேற்படுவதைக்கண்ட பிராட்டிமார்கள் தாங்கள் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி.) அவர்களது இல்லத்திலேயே இருப்பதற்கு அனுமதி கொடுத்துவிட்டார்கள். நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை திறந்துவிடும்வரை அவ்வில்லத்திலேயெ இருந்து வந்தார்கள்.

"உங்களில் எவன் தன் குடும்பத்தாருடன் தக்கமுறையில் நடந்துகொள்கிறனே அவன் தான மிக மிக மேலானவனகும்" என பெருமானர் (ஸல்.) அவர்கள் கூறி "யான் என்குடும்பத்தாரின் பாத்தியதைகளை அளிப்பதில் தக்கமுறையில் நடந்து கொள்கின்றேன்" என அறிவித்தார்கள். மேலும் தன் பெண்சாதியுடன் பிணங்கிக்கொள்பவன் தன் படுக்கையை தனியாக்கிக்கொள்ள வேண்டுமே யன்றி அவளை வீட்டைவிட்டு வெளியாக்கவோ, அல்லது தான் வெளியில் புறப்படவோ கூடாதென்றும் அவளை அடிப்பதன்றி நிருவாகம் சீர்கெட்டுப் போய்விடும் சந்தர்ப்ப மேற்பட்டுவிடுமாகில் முகம் தவிரவுள்ள இடங்களில் அடிக்கவேண்டு மென்றும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள். இவ்வாறு நம்பெருமானர் (ஸல்.) அவர்கள் தங்கள் மனைவியர்க

ளுடன் சமத்துவத்தை அனுஷ்டித்துக் காட்டியிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களது மரணத்திற்குப்பின் பெருமானார் (ஸல்.) அவர்கள் பல விவாகங்கள் செய்திருந்த போதினும் அம்மாதின் மீதேற்பட்டிருந்த பிரீதி நம் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களது மனதை விட்டு ஒருக்காலும் நீங்கவேயில்லை. எப்பொழுதாகிலும் அம்மாதைப்பற்றிய ஏதாகிலும் பேச்சுவந்துவிடுமாகில் நபி பெருமானார் (ஸல்.) அவர்களது கண்களிலிருந்து தண்ணீர் வடியும். எங்கிருந்தாகிலும் நன்கொடை வருமாகில் அதில் ஒரு பாகத்தை ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்களின் தோழிகளுக்குக் கொடுப்பார்கள்.

தயாளத்தன்மை

உம்மத்துகள்மீது நாற்பதிலொரு பாகம் 'ஜகாத்' விதியாக்கப்பட்டிருந்தது. ஆனால் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்களிடமிருக்கும் யாவற்றையும் அல்லாஹ்வின் பாதையில் தானம்செய்து விடுவார்கள். ஒரு முஸ்லிம் மரணமாய் விடுவாராகில் அவருடைய சொத்திலிருந்து அவருக்குக் கேற்பட்டிருக்கும் கடனைக்கொடுத்துவிட்டு மீதத்தை வாரிசுகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

ஒருமுறை பஹ்ரைனிலிருந்து வரிப்பணம், தான்யம் முதலியவைகள் கொண்டு வரப்பட்டு மஸ்ஜிதின் முற்றவெளியில் குவித்து வைக்கப்பட்டது. நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் பஜர் தொழுகைக்காக வருங்கால் சஹாபாக்கள் இச்சமாசாரத்தை அறிவித்தார்கள். அதுபொழுது பெருமானார் (ஸல்.) அவர்கள் அதன்பக்கல் கண் எடுத்துப் பார்க்கவுமில்லை. பின்னர் தொழுகையை நிறைவேற்றி முடிந்தவுடன் அக்குவியலுக்குச் சமீபம்வந்து உட்கார்ந்து அவைகளை பங்கிட ஆரம்பித்து சற்று நேரத்திற்கெல்லாம் வெறுங்கையுடன் எழுந்து விட்டார்கள்.

ஒருதடவை 'பிதக்'கிலிருந்து நான்கு ஒட்டகம் சுமக்கக்கூடிய தானியம் வந்தது. அதனைப் பெற்றுக்கொள்பவர் கிடைக்காததால் அத்தானியம் மாலைவரை அப்படியே இருந்தது. இச்சமாசாரம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு தெரியவே, உலகச் சம்மந்தமான வஸ்து மீதமிருக்கும் வரை யான் வீட்டுக்குச் செல்லமாட்டேனென நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மஸ்ஜிதிலேயே இருந்துவிட்டார்கள். பின்னர் அத்தானியங்களெல்லாம் செலவாகிவிட்டதாக காலையில் பிலால் (ரலி.) அவர்கள் அறிவித்தவுடன் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவர்களாய் தங்களில்லம் சென்றார்கள்.

ஒருநாள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் அஸர் தொழுகை முடிந்த உடனேயே வீட்டிற்குள் சென்றார்கள். ஸஹாபாக்களுக்கு இது விஷயம் பெரும் ஆச்சரியமாகத் தோன்றிற்று. அதுபொழுது நாயகம் (ஸல்.) அவர்கள், "வீட்டில் இந்த தங்கத் துண்டொன்றிருந்தது; இரவைக்குமுன் இதனை ஒழுங்குசெய்து விட வேண்டியது அவசியமாகவிருக்கிறது" எனத் தெரிவித்தார்கள்.

சத்தியத்தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மரணப் படுக்கையிலிருக்கும்போது சிலதங்கக்காசுகள் வீட்டில் கிடப்பது ஞாபகத்திற்கு வந்தது. உடனே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களை அழைத்து அவைகளை அல்லாஹ்வின் பாதையில் தானம் செய்துவிடுமாறு கூறியதுடன் முஹம்மது அல்லாஹ்வின் சன்னிதானஞ் செல்லும்போது அவருடைய வீட்டில் தங்க நாணயமிருப்பது ஒழுங்குமுறையாக மாட்டாதெனத் தெரிவித்தார்கள்.

நம் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது கொடையளிக்கும் தன்மை மிக மிக ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாக விருக்கிறது. தங்கள் நிலைமை எவ்வளவு கஷ்டதிசையிலிருந்த போதிலும் தங்களிடம் வந்து சுவால் செய்பவரை வெறுங்கையாக திருப்பியனுப்பியது கிடையாது. தங்கள் வீட்டில் ரொட்டி வைக்கும் பெட்டி ஒன்றிருந்தது. ஒருவர் வந்து சுவால் செய்தார். பெருமானார் (ஸல்.) அவர்கள் அப்பெட்டியை அவரிடம் கொடுத்துவிட்டார்களாதலின் வீட்டுடையவர்கள் இரவு முழுதும் பசியுடன் காலங் கழிக்க நேர்ந்தது. மற்றொருவர் வந்து அல்லாஹ்வுடைய ரஸூலே! ஏதாகிலும் கொடுங்களென்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்.) அவர்கள், இதுபொழுது என்னிடம் எந்த வஸ்துவும் கிடையாது; நீர்

சென்று என் பெயரால் கடன் வாங்கிக்கொள்ளும்; அதனை யான் நிறைவேற்றி விடுகிறேன் என அறிவித்தார்கள். ஒருமுறை ஓர் சஹாபி நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு ஓர் துப்பட்டியை நன்கொடை அளித்தார். பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு துப்பட்டியின் தேவையிருந்ததால் அதனை அங்கிகரித்துக்கொண்டார்கள். அங்கிருந்த ஓர் மனிதர் அத் துப்பட்டியைப்பற்றி புகழ்ந்து பேசினர். உடனே நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் அத் துப்பட்டியை அவரிடம் கொடுத்துவிட்டார்கள். ஒருநாள் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஆட்டு மந்தையில் நின்றுகொண்டிருந்தார்கள். அதுபொழுது ஓர் ஏழை மனிதர் அங்கு வந்து சுவால் செய்தார். உடனே கொடைவள்ளலவர்கள் அம்மந்தை முழுவதையும் அவ்வேழை மனிதரிடம் கொடுத்துவிட்டு தாங்கள் தனியாய்விட்டார்கள்.

ஸீரத் பிரசுரமெழுதுபவர் கவனிக்க!

சோதரீர்! சமீபகாலமாக முஸ்லிம் பெரியார்களிற் பலர் கூடி நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களது ஜனன தினத்தை விமரிசையாகக் கொண்டாடி, அன்றைய தினத்தில் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களது அருமை பெருமைகளையும், வாழ்க்கை வரலாறுகளையும் எழுதி அச்சிட்டு ஜாதி மத பேதமின்றி எல்லோருக்கும் வினியோகிக்க வேண்டுமென்றும், அன்றைய தினத்தில் பொதுக்கூட்டங்கள் கூட்டி பெருமானர் (ஸல்.) அவர்களது விருத்தாந்தத்தையும் விசேஷத்தையும் பிரசங்க மூலமாக அறிவிக்கவேண்டுமென்றும் முடிவு செய்தனர். இம்முடிவிற்கேற்ப சென்ற சில வாண்டுகளாக இவ்விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. ஆனல், சில சுயநலமிகள் தங்களது வழிகெட்ட கொள்கைகளைப் புகுத்துவதற்கு இதுதான் சமயம் என்று இவ்விழாவைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்து ஸீரத் பிரசாரம் என்ற பெயரால் புத்தகங்களை எழுதி அவைகளில் தங்களது வழிகேட்ட காதியானிக் கொள்கைகளைப் புகுத்திவிடுகின்றனர். இதனை, நாம் கண்டிக்காமலும் வெறுக்காமலுமிருக்க முடியவில்லை. இந்நிலைமையில், சென்ற வருஷம் கொழும்பிலுள்ள இலங்கை ஸீரத் சபையாரால் வெளியிடப்பட்ட "வெற்றி வாழ்க்கைக்கு வழிகாட்டிய வீரர்" என்ற பெயருள்ள ஸீரத் பிரசுரநூலொன்று இப்பொழுதுதான் நமது பார்வைக்கு வந்தது. இஸ்லாத்தின் பகைவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றிக் கூறுகிற அபவாதங்களுக்கும், தப்பருத்தங்களுக்கும் பதில் கூறி அவைகளை அகற்றி உண்மையான சரித்திரத்தைப் பொதுமக்களுக் கறிவிக்க வேண்டும் என்ற நன்னேக்கத்தின் பேரில் கொண்டாடப்படும் இவ்விழாவில் ஒரு ஸீரத் கமிட்டியாரே இத்தகைய உண்மைக்கு மாருன விஷயங்களமைந்த பிரசுரத்தை வெளியிடுவதென்றால் அதனைப்பற்றி வருந்தாமலும் கண்டிக்காமலும் இருக்கமுடியவில்லை. ஷை பிரசுரத்தின் 5-வதுபக்கத்தில் 7-வது 8-வது வரிகளில் கூறப்பட்டவிஷயம் இங்கு ஆக்ஷேபிக்கத் தக்கதாக இருக்கிறது. "நான் எவரும் நம்பக்கூடாத ஸ்திதிக்கு வந்திருக்கிறேன்; அதாவது பயித்தியமாயிருக்கும்" என்று நாயகம்(ஸல்.) அவர்கள் கூறியதாக எழுதப்பட்டிருக்கிறது. அதாவது நாயகம் (ஸல்.) அவர்களே தங்களுக்குப் பயித்தியம் ஏற்பட்டிருப்பதாக பீபி கதீஜா (ரலி.) அவர்களிடம் கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் சுத்தத் தவருகும். இதே விஷயத்தை இதர மத வாதிகள் கூறியபோது நாம் அதற்கு தக்க மறுப்புகள் வரைந்து இக் கூற்றைக் கண்டித்தோம். எனவே இதர மத வாதிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்பற்றிக் கூறும் தவருன விஷயங்களுக்கு மறுப்புக் கூறுகிற நாமே இதனைக் கூறுவதென்றால் இதைப் பார்க்கினும் வருந்தத்தக்க விஷயம் வேறொன்றுமில்லை.

மேலும் ஷை பிரசுரம் 11-வது பக்கத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது புத்திரிகளுள் ஒருவரை 'ஹ்பார்' என்ற ஒரு குறைஷி

சாட்டியால் தாக்கித் தரையில் வீழ்த்திக் கொன்றதாக எழுதப்பட்டிருக்கிறது. இது சுத்தத் தவருகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது புதல்விகளுள் எவரும் பிறரால் கொல்லப்படவில்லை என்பது பிரத்தியக்ஷமாகும். ஆதலின், ஸீரத் பிரசுரங்களை எழுதுபவர்கள் ஸஹீஹான ரிவாயத்துகளையும் தக்க ஆதாரமுள்ள விஷயங்களையும் நன்கு கவனித்து எழுதுவது மிகவும் அவசியமாகும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு ... காப்பக நூலகம் சென்னை-600 008

பெருமானரின்மீது அன்பு

ஒரு மனிதர் ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி.) அவர்களிடம் வந்து எனக்கு மரணத்தின் மீது பெரும் பயம் ஏற்படுகிறதென்று கூறினர். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் நீர் உமது ஐசுவரியங்களின் மிகுதத்தை பிந்திய சந்ததினருக்காக விட்டு வைத்திருக்கிறீர். அப்படியில்லாது உனக்கு முன் உன்னுடைய ஐசுவரியங்களில் மிகுத பாகத்தை முற்கூட்டியே அனுப்பி வைத்திருப்பீராகில் மறுமை என்ற பெயரைக் கொண்டு உமக்கு கவலை, துக்கமேற்படாது ரொம்ப சந்தோஷமடைவாய் என்று கூறினர்கள்.

மனிதன் ஐசுவரியங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதென்ருல் பெரும் கஷ்டங்களும் நெறுக்கடியான நிலைமையும் அவனுக்கேற்படுகிறது. ஆனல் இவனுக்கேற்படும் இவ்விடைகூறுனகவலை நீங்கி அதனலேற்படும் நற்பயன் அப்படியே இருந்து விடுகிறது. எனவே எவர்கள் 'நப்ஸை' அடக்கி அல்லாஹ்வின் பாதையில் கஷ்டங்களை சகித்துக் கொண்டு காரியாதிகளை நடத்திச் செல்லுங்கால் எந்த வகையிலும் தங்களுக்கு முற்கூட்டியே அல்லாஹ்வின் பாதையில் மறுமை அளவில் அனுப்பிவைக்கின்றுர்களோ அந்த ஐசுவரியங்களைத்தான் சிரேஷ்டமானதாகக் கருதமுடியும். ஏனெனில், மனிதன் தனது ஆரோக்கியம் சுவண்டிக்காக செலவுசெய்த ரூபாய்களை அவனுடைய முதலாக கருதமுடியாது; எதை மறுமைக்காக செலவு செய்கின்றுனே அது அவனுடைய மறுமைக்குக் கட்டு சாதமாக அமைந்துவிடுகிறது.

முஸ்லிம்கள் சம்பாத்தியஞ் செய்யும் ஐசுவரியங்களை செலவிடும்வகையில் மிக மிக மேலானது அவர்கள் நபிகள் பெருமானர் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் மகிமை, கியாதிகளைப் பிரபல்யப்படுத்துவதில் செலவிடுவதுதான் உகக்கப்பட்ட செலவாகக் கருதப்படுகிறது. நபிகள் பெருமானர் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களது மேன்மை மேதை மரியாதைகளை பிரசாரம் செய்வது, பிரபல்யப்படுத்துவதில்தான் முஸ்லிம்களின் சங்கை மரியாதையின் இரகசியங்கள் பொதிந்து கிடக்கின்றன. ஏற்கனவே இவ்வுலகின்கண் தோன்றி சென்ற பல ஆயிரக் கணக்கான நபிமார்களின் உம்மத்துகள் அவ்வக் காலங்களில் அந்தந்த நபிமார்களின்மீது பெரிதும் பிரீதி கொண்டவர்களாக விருந்தனர். ஆனல் காலஞ் செல்லச்செல்ல அந்தமக்களுக்கு தங்கள் நபியின் பெயர் நாமங்கூட ஞாபகமில்லாதுபோய்விட்டது. அந்த நபிமார்களின் உம்மத்தோர்கள் அவர்களைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு ஞாபகார்த்தத்தைக்கூட ஒழுங்கு படுத்தி வைத்துக்கொண்டார்களில்லை. இந்நிலைமையில் நாளுக்கு நாள் மக்களின் மனதுகளில் இருள் ஏற்பட்டு தங்கள் நபியையோ அல்லது தங்கள் மார்க்கத்தையோ தங்கள் வேதத்தையோ ஞாபகத்திற்குக்கொண்டுவரும் ஸ்திதியில் அன்னேரில்லை.

இதுகாலை இஸ்லாமிய உலகம் உலகரட்சகர் நபிகள் பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் விஷயத்தில் தன் கடமையை யாற்றுவதினின்றும் மறதி கேட்டிலிருந்து வருகிறது. ஒருகால மிருந்தது அதில் 'ஹுதைபிய்யா' என்ற இடத்தில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் 'ஒளு' ச்செய்தபோது முஸ்லிம்கள் அந்த தண்ணீரை மிகமிக மகிமை பொருந்தியதாகக் கருதியதினல் தண்ணீரில் ஒரு துளிகூட பூமியில் விழ மனம் சகித்துக்கொண்டார்களில்லை. இச்சம்பவ நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்

டிருந்த குரைஷிகளின் தூதுவரான 'உர்வா பின் மஸ்ஊது' என்பவர் மிக்க விரைவாக குரைஷியர்களிடம் சென்று, "குரைஷிகாள்! சீக்கிரமாக வந்து முஹம்மது (ஸல்.) அவர்களிடம் சமாதானஞ் செய்துகொள்ளுங்கள். யான் எத்தனையோ முறை கைஸர், கிஸ்ரு முதலிய சக்ரவர்த்திகளின் தர்பார்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் முஹம்மதுவை (ஸை)ப் பின்பற்றி யிருப்பவர்கள் அவருக்குச் செய்யும் சங்கை மரியாதையைப்போல் யான் எங்கும் பார்த்ததில்லை. அவர்களெல்லோரும் அவருடைய ஒரே சயிக்கினையைக் கொண்டு அடிமைகள்போலாய் விடுகின்றார்கள்; அவருடைய வார்த்தைக்கு சங்கைமரியாதையோடு செவி சாய்க்கின்றனர். அவருடைய உமிழ்நீரை பூமியில்கூட விழ விடுகிறார்களில்லை" எனக் கூறினர்.

'பத்ரு' யுத்தத்திற்காக இறுதி அறிக்கை வெளியிட்டபோது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி இதுபொழுது யுத்தவிஷயமாக உங்கள் அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறதென்று வினவினர்கள். அதுபொழுது ஹஸ்ரத் ஸஅதிப்னுமுஆத் (ரலி.) முன்வந்து "அல்லாஹ்வுடைய ரஸூலே! எந்த நிலைமையிலும் தாங்கள் யாருடன் உடன்படிக்கை செய்துகொண்ட போதிலும் அல்லது உடன்படிக்கையை நீக்கிக்கொண்டபோதிலும் நாங்கள் தங்களுடனேயே இருப்போம். தாங்கள் எங்களுடைய சொத்து சுதந்திரங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு எங்களுக்காக கொஞ்சம் விடுவதைப் பொருந்திக் கொள்கிறோம். நாங்கள் தங்களது ஒவ்வொரு கட்டளைகளையும் சிரமேற்றாங்கி நடப்பதற்குத் தயாராக விருக்கிறோம். தங்களிடம் கொடுக்கும் காசுபணங்களானது எங்களிடம் மீத மிருப்பவைகளைவிட மேலானதாக விருக்குமென்று கருதுகிறோம். நாங்கள் தங்களுடனேயே இருப்போம். தாங்கள் கடலிற்குள் குதிப்பதற்கு அனுமதி அளிப்பீர்களாயினும் உடனே குதித்துவிடத் தயாராகவிருக்கிறோம்" எனத் தெரிவித்துக் கொண்டார். ஹஸ்ரத் மிக்தாத் (ரலி.) அவர்கள், "அல்லாஹ்வுடைய ரஸூலே! யாங்கள் ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களுடைய கூட்டத்தார்களைப் போன்று, 'நீங்களும் உங்களுடைய ஆண்டவனும் சேர்ந்து சண்டை போடுங்கள் 'நாங்கள் இந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்' என்று ஒருக்காலும் சொல்லமாட்டோம். நாங்கள் தங்களது முன்பின் வலதுபக்கம் இடதுபக்கம் சூழ்ந்துகொண்டு தங்களுக்காக எங்களது உயிர்களை தியாகஞ் செய்வோம்" எனக் கூறினர்கள்.

தூர்அதிர்ஷ்டவசமாக தூய்மைபொருந்திய அந்தக்காலம் நம்மைவிட்டுச் சென்றுகொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் முஸ்லிம்களின் இரத்தத்தில் குளிர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. பிரீதி என்னும் தீபச்சுடர் தூர்ந்து கொண்டே போகிறது. ஈமான் - உறுதியின் சூடு கம்மியாகிக்கொண்டே போகிறது. நாம் தூய்மை நபியின்மீது உண்மையான பற்றும் பிரீதியும் கொள்வதின் பாதையைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டோம். இதற்கெல்லாம் முஸ்லிம்களில் அறியாமை, விஷயத்தை நன்குணராமை என்னும் வியாதி பரவியதே காரணமாகும். எனவே, நம்மில் ஆயிரக் கணக்கான முஸ்லிம்களில் ஒருவருக்குக்கூட நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது ஆத்மார்த்த வேலைத்திட்டம் எவ்வாறிருந்தது என்பதுகூடத் தெரியாதிருக்கிறது.

அன்புற்ற நேயர்காள்!

நபிகள் பெருமான் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் திருஜனனம்புரிந்த 'யவ்முந்நபி' உங்கள்முன் வருகிறது. உலக முஸ்லிம்கள் நபிகள்பெருமானார் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறை, சரித்திர வரலாறு, மார்க்கசேவை ஆகியவைகளை மக்கட்பால் எடுத்துக்காண்பிப்பதற்கு இந்நாள் தக்க நந்நாளாகும். ஆகவே, ஒவ்வொரு முஸ்லிமும் தங்களது முழு பிரயாசையையும் இதில் செலவிட்டு ஒரேநாளில் படித்தவர், கல்வி யறிவில்லாதோர் ஆகியவர்கள் யாவருக்கும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது கம்பீரம் மகிமை உண்மை ஆகியவைகளை எத்திவைத்துவிட வேண்டியது முக்கியப்பிரதானமாகும்.

ஆகவே முஸ்லிம் நேயர்காள்! சற்று எழுந்திருங்கள். சமய சந்தர்ப்பத்தை கைவிடாது அருஞ் சேவையைத் தொண்டாற்ற முன்வாருங்கள். சேவைபுரியாது காலத்தைக் கைவிட்டு விடாதீர்கள். மார்க்க சம்மந்தமான இத்தொண்டை தக்கமுறையில் யாற்றுவதற்கு முன் வாருங்கள். இதில் புரியவேண்டிய காரியங்கள் இரண்டுள. ஒன்று ஒவ்வொரு ஊர்களிலும், ஸீரத்பிரசங்க கூட்டம் ஏற்படுத்து

வதற்கு முயற்சித்து அதில் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் மகிமை கியாதி இவைகள் வெளியாவதற்கு ஏற்பாடுசெய்து இந்து முஸ்லிம், தாழ்த்தப்பட்டோர் கிறிஸ்தவர் யாவரும் அக்கூட்டங்களுக்கு வரும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவது, இதர மதஸ்தர்களிலுள்ள தக்க சொற்பெருக்காற்றரைக்கொண்டு பிரசங்கம் புரியச்செய்ய வேண்டும். இவ்விரண்டு காரியங்களும் அன்று கைக்கொள்வதற்குள்ள பிரதானவைகளாகும்.

முஸ்லிம் நேயர்காள் ! தாங்கள் அல்லாஹ்வுக்காகவே இவ்விரண்டு காரியங்களுக்காக இடுப்புக்கட்டி முன்வருவீர்களாயின் நீங்கள் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் விஷயத்தில் தக்க சேவை புரிந்தவர்களாவீர்கள். அல்லாஹ்த ஆலா உங்களுக்கு அளவற்ற நற்கூலியை சன்மான மளிப்பான். இவ்விஷயத்திற்காக நீங்கள் செய்யும் பிரயாசை காசு பணம் தியாகம் ஆகியவைகளின் பிரயோசனங்கள் அப்படியே அழியாதிருந்து கொண்டிருக்கும். ஆகவே நம் முஸ்லிம் நேயர்கள் இப் புண்ணியம் தங்கிய கண்ணியமுடைய நாளை நங்நாளாகக் கொண்டாடி அதனுற் கிடைக்கும் அளவற்ற நற்பயன்களைப் பெற்று இகபர சாதனங்களை அடைவார்களாக.

நபிகள் பெருமானாரும் அன்னிய மதஸ்தரும்

சமூக வேற்றுமைகள், வருண பேதங்கள், சமூக பிணக்குகள் முதலிய சகல வஸ்துக்களையும் ஒழித்து முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதாருக்கும், நண்பனுக்கும் விரோதிக்கும், உற்றானுக்கும் மாற்றானுக்கு மிடையே எவ்வித உயர்வும் தாழ்வும் பாராட்டாது மனித கோடிகளுக்குச் சத்திய போதனையை அறிவித்தது இஸ்லாத்தினுடையவும் அதனைப் பிரசாரஞ்செய்த நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களுடையவும் தனிப் பெரும் சிறப்பேயாகும். பல சமூகங்களுக்குள்ளும் எவ்வித அபிப்பிராய பேதமிருந்தபோதிலும் எவரும் இது காரணத்தை முன்னிட்டு பரஸ்பரம் விரோதமும் குரோதமும் கொள்ளக்கூடாதென்பதும், நியாய வழி பற்றியே நடக்க வேண்டுமென்பதுமே முக்கியக் கடமையாகும்.

இதுகாலை உலகெங்கும் ஒழுங்குபட்ட அரசாங்கங்கள் ஏற்பட்டுவிட்டனவென்றும், ஜனங்கள் நாகரீகத்தின் உச்சஸ்தானத்தை யடைந்துவிட்டனரென்றும் கூறப்படுகிறதாயினும் எங்கு பார்த்தாலும் நிறவேற்றுமைக் கொடுமையும், ஜாதிப்போராட்டமும், மார்க்க சச்சரவுகளும், இராஜீய யுத்தங்களும் கலகங்களும் நிகழ்ந்த வண்ணமாயிருக்கின்றன. ஆனல் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே உலக சிரேஷ்டர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அகில உலக சமாதானத்தை நிறுவச் செய்யக்கூடிய மனித சகோதரத்துவத்தை உலகத்தினருக்குப் போதித்துச் சென்றதுமல்லாமல் தாங்களே அத் தத்துவத்தின்படி நடந்தும் காட்டியுள்ளார்கள். முஷ்ரிக்குகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் முதலிய இஸ்லாத்திற்குப் புறம்பான மார்க்கத்தினருடனும், தங்களை சதா ஹிம்ஸித்து வருவதில் ஆனந்தங்கொண்ட கொடிய விரோதிகளுடனும் அவ்விரோதிகள்பால் எத்தகைய சமரசப்பான்மையுடனும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டும் நடந்துகொண்டார்களென்பதை நிரூபிக்கும் சம்பவங்கள் பல உள. அவற்றுள் சிலவற்றை கீழே தருகிறோம் :—

அக்கால யூதர்கள் மிகவும் நயவஞ்சகர்களாதலின் ஹஸ்ரத் ஈஸா (அலை.) அன்னேரை பாம்புகளென்றும் பாம்புக்குட்டிகளென்றும் கூறியுள்ளார்கள். ஆனல் உலக ரட்சகர் முஹம்மது நபி (ஸல்.) அவர்கள் அந்த யூதர்களுடன் அன்னியோன்யமாய்ப் பழகி வந்திருக்கின்றார்கள்.

ஹிஜ்ரீ முதலாவதாண்டில் யூதர்கள் நாயகம் (ஸல்.) அவர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டிருந்தும் அவர்கள் தம் இயற்கையான விஷமத்தைக் காட்டாமலில்லை. உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதைச் சற்றும் லக்ஷி

யஞ்செய்யாது அதன் நிபந்தனைகளுக்கு முற்ற முற்ற விரோதமாக நடக்கத் தொடங்கினர். அச்சமாதான உடன்படிக்கையின் சில முக்கிய நிபந்தனைகள் வருமாறு :—

"யூதர்களும் முஸ்லிம்களும், பரஸ்பரம் சிநேகபாவத்துடன் நடந்துகொள்ளவேண்டும். யூதர்களையோ அல்லது முஸ்லிம்களையோ இதரர் தாக்குவராயின் அவரை எதிர்ப்பதற்கு இருவரும் பரஸ்பரம் உதவிசெய்து கொள்ளுதல் வேண்டும். மதீனா நகர் அன்னியரால் தாக்கப்படுமாயின் முஸ்லிம் யூதர் இவ்விருவரும் சேர்ந்து விரோதியை எதிர்த்து மதீனாவைக் காப்பாற்ற வேண்டும். இருசாரார்களுக்குள்ளும் ஒருசாரார் எந்த விரோதியுடனாவது சமாதானஞ் செய்துகொள்வாராயின் மற்றொரு சாராரும் அவ்விதமே சமாதானஞ் செய்து கொள்ளுதல் வேண்டும். இருசாரார்களிலெவரும் குறைஷியர்களுக்குப் பாதுகாப்பளித்தல் கூடாது."

மேற்கூறிய நிபந்தனைகளெல்லாம் நிரந்தரமான சமாதான உடன்படிக்கைகளைப் போன்றிருந்தும் யூதர்கள் இந்த உடன்படிக்கைக்கு விரோதமாகவே நடந்துகொண்டார்கள். முஸ்லிம்கள் 'பத்ரு' யுத்தத்திற்குச் சென்றிருந்தபோது யூதர்கள் மதீனாவில் பல அனீதங்களைச் செய்யத் துடங்கிவிட்டனர். நகரக் கடை வீதியில் சென்றுகொண்டிருந்த பால்விற்கும் முஸ்லிம் ஸ்திரீயை யூதர்கள் மானபங்கப் படுத்தி நடுவீதியில் நிர்வாணமாகச் செய்து விட்டார்கள். அச்செய்தியை முஸ்லிம்கள் ஆக்ஷேபித்தபோது அவர்கள் பெருங்கலகஞ் செய்தனர். பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் யுத்தகளத்திலிருந்து வந்து உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு விரோதமாக இவ்விதம் அக்கிரமம் புரியலாமாவென யூதர்களை வினவியபோது அவர்கள் உடன்படிக்கை பத்திரத்தை வாபஸ் செய்து விட்டனர்.

யூதர்கள் தாமாகவே உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்துகொண்டதுடன் அதனை ஒப்புக்கொள்ளவும் மறுத்து விட்டதைக் கண்ட குறைஷியர்கள் அவர்களுக்கு ஒரு கடிதம் விடுத்து "முஹம்மதுடன் சண்டை போடுங்கள்" என்று தூண்டிவிட்டார்கள். இதன்பயனும் 'பனூநுலைர்' கூட்டத்தினர் உடனே முஸ்லிம்களுடன் போர் தொடுக்கத் தயாராகி விட்டனர்.

ஹிஜ்ரீ நான்காவதாண்டில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 'பனூநுலைர்' கூட்டத்தினர் வசித்துவந்த பகுதிக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்ப மேற்பட்டது. அச்சமயத்தை நழுவவிடாது நாயகம் (ஸல்.) அவர்களது உயிரைப் போக்கிவிட வேண்டுமென அத்திய கூட்டத்தினர் தீர்மானித்துவிட்டனர். அவர்கள் நபிகள் நாதர் (ஸல்.) அவர்களை ஒரு சுவருக்கருகாமையில் உட்காரவைத்து இப்னு ஹிஷாமைக் கொண்டு ஒரு பெரிய கருங்கல்லை அவர்கள்மீது தள்ளவேண்டுமென ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் அல்லாஹ்வின் கிருபையால் அந்த சூக்ஷி பலிக்காதுபோயிற்று.

யூதர்களில் ஒரு கூட்டத்தினரான 'பனூ குறைலா'க்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்துகொணடு சமாதானமாக வாழ்ந்துவந்தனர். அதுசமயம் 'பனூநுலைர்' கூட்டத்தினர் முஸ்லிம்களை அடியோடொழித்து விடவேண்டுமென்று நிச்சயித்து காபிர்களையும் பிறமதத்தினரையும் தூண்டிவிட்டு சுமார் பதினாயிரம் மூர்க்கசிப்பாய்களை திரட்டிக்கொண்டு மதீனாவின்மீது படை எடுத்துவந்தனர். உடன்படிக்கை நிபந்தனைப்படி முஸ்லிம்களுக்கு உதவிசெய்யக் கட்டுப்பட்டிருந்த 'பனூகுறைலா' கூட்டத்தினர் இந்த நெருக்கடியான சமயத்தில் உதவிசெய்ய முன் வரவில்லை. அவர்கள் அதனுடனில்லாது இரவில் திருட்டுத்தனமாக மதீனாவிற்குள் பிரவேசித்து 'பனூநுலைர்' கூட்டத்தின் தலைவனான 'ஹய்யிப்னு அக்தப்' உடன்கலந்து பேசி மதீனாநகரில் கலகஞ்செய்ய ஏற்பாடு செய்துகொண்டனர். இவ்வாறு ஒருபக்கல் நகருக்குள்ளிருந்து 'பனூகுறைலா' கூட்டத்தினர் கலகஞ்செய்து அமைதியைக் கெடுத்து வரவும் மற்றொரு பக்கல் நகருக்கு வெளியே 'பனூநுலைர்' பதினாயிரம் வீரர்களுடன் தாக்கிவரவும் முஸ்லிம்கள் பலவாறான துன்பங்களுக்காளாயினார்கள்.

ஆனால் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இச்சதியாளர்களுடனெல்லாம் அழகிய மாதிரியில் நடந்து வந்திருக்கிறார்கள். ஆயுட்காலம் முழுவதிலும் தங்கள் உயிரைப் பறிக்க முயற்சித்து வந்த விரோதிகளையும் நாயகம் (ஸல்.) அவர்கள் அன்புடன் மன்னித்தருளி அவர்களுக்கு உதவிசெய்ய முன்வந்திருக்கிறார்கள். இஃது நம்பெருமானார் (ஸல்.) அவர்களின் உதார குணத்தின் மகிமையை நன்கு விளக்குகின்றது.

சந்தா நேயர்கட்கு!

அன்பீர் !

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருஷத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் நிகழும் 1936-ம் ஆண்டுக்குரிய சந்தா ரூபாயை முன்பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனுப் மு. முகம்மதுஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸிலிங்கி ரோட்) இடமும்

பினங், மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்

ஜனுப் **K. A.** பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குதெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

“யவ்முந்நபி”

திருநபி திருதினக் கொண்டாட்டம்

உலகரட்சகர் நபிகள் பெருமான் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள் எந்தெந்த வகைகளிலெல்லாம் சன்மார்க்கத்தை மக்கள் பால் எடுத்துக் காண்பித்தார்கள் ; அப்பிரசாரத்திற்கு தங்களது வாழ்க்கை எந்தெந்த வகைகளிலெல்லாம் உதவியாக விருந்தது என்பவைகளைத் தெரிந்து கொள்வதற்கும், அதனை மக்களிடையே பரத்துவதற்கும் அப் பெருமானார் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் திரு ஜனனம் புரிந்த ரபீ உல் அவ்வல்மீ 12-ந்தேதி 3-6-36 புதன்கிழமை தக்கநாளாகும். அப்புண்ணியதினத்தை அதற்காகவே ஒதுக்கிவைத்து அன்று சகல ஊர்களிலும் மகாநாடுகள் கூட்டி முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதாரும் ஒருங்கே ‘ஸீரத்’ பிரசங்கத்தைக் கேட்க வசதியளிக்கவேண்டும். அன்று நடைபெறும் மகாநாடுகளில் வீண் ஆடம்பரம், கெட்ட பித்அத்தான காரியங்கள் எதுவும் கலந்துவிடாதவாறு தக்கஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும். மக்கள் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது பிரசார முறைகளைக் கைக்கொள்வதற்கு தக்க மூயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அந் மகாநாட்டில் வாசித்துக்காட்டி வினியோகிப்பதற் கென்றே அகில உலக ஸீரத் கமிட்டியாரால் உர்தூவில் தயாரிக்கப்பட்டு பற்பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் “ஸீரத்” பிரசங்கம் உங்கள் “ஹிபாஜத்துல் இஸ்லாம்” சங்கத்தாரால் இனிய தமிழில் அழகிய முறையில் மொழி பெயர்த்து “பெருமானின் பிரசாரம்” என்னும் பெயரால் வெளிவந்திருப்பதை மகாநாட்டில் வாசித்துக்காட்டி ஏராளமாக வினியோகிக்கவேண்டும். இப்பிரசுரத்தில் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது பிரசார முறைகள் தக்கவிதமாக விளக்கப்பட்டிருப்பதால் இதனைப்படிக்கும் யாவரும் அவைகளைதக்க முறையில் உணர்ந்துகொள்ள ஹேதுவாக விருக்குமாதலால் புனிதம்பொருந்திய அத்தினத்தை இதற்கென்றே ஒதுக்கிவைத்து அந்நாளை திருநாளாகக் கொண்டாடுவோமாக.

அதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இதுகாலை இஸ்லாத்தின் பக்கல் மோகங்கொண்டிருப்பதால் இப்பிரசங்கம் அன்னோருக்கு அதிகப் பிரயோசனம் தருமென்று கருதுகிறோம்.

காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43 - A, போஸ்டாபீஸ் தெருவு, ஜி. டி., மதராஸ்.

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G. T., Madras.